# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, ஆடி 20, 2018. இதழ் - 22









### சீனாவின் கடல்சார் அச்சு றுத்தல்களை எதிர்கொள்ள இலங்கை நவீன கடல் ரோந்து விமானங்களை வாங்க வேண்டும்

– ஜப்பானிய நிபுணர் எச்சரிக்கை

பக்கம் - 04



### 1983 ஜூலை : தொடரும் பாதுகாப்பற்ற உணர்வு

ஜூலை என்பது இலங்கையில் கறுத்து விட்ட ஒரு மாதம். அந்தக் கருமையை, வெறுமையை அழுத்தமாக

பக்கம் - 03

### தமிழ் மக்களுக்கான சிங்களப் பத்திரிகைகள்



தமிழ் மக்களின் விடுதலைக்காக இயங்கி பின் இன்று அழித் தொழிக்கப்பட்ட

பக்கம் - 08



# ஒவ்வொரு திசையில் இழுக்கும் தமிழ் தலைவர்கள்

(பி.கே. பாலச்சந்திரன்)

இலங்கை தமிழர்களின் முக்கிய விவகாரங்களில் தமிழ் தலைவர்கள் ஒவ்வொரு திசையில் இழுக்கிறார்கள்.

பொருளாதார அபிவிருத்திக்கு முன்னதாக தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட்டாக வேண்டும் என்று வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் பிடிவாதமான நிலைப்பாட்டில் இருக்கிறார்.

அரசியல் தீர்வு நடவடிக்கை ளை மந்த கதியில் நடத்திக்ககொண்டு, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது, வண்டிக்கு முன்பதாக குதிரையை கட்டாமல், குதிரைக்கு முன்பாக வண்டியை கட்டும் செயல் என்பது அவரது கருத்து.

வடக்கு, கிழக்கு மாகாணங் களுக்கான பொருளாதார அபிவிருத்தி செயலணிக்குழுவில் பங்கேற்க மாட்டேன் என்று விக்னேஸ்வரன் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதியுள்ளார்.

உள்ளூரில் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அல்லாமல் மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளால் அந்தக் குழு நிறைந்து காணப்படுவதாக அவர் குற்றஞ்சாட்டுகிறார். மாகாண நிர்வாகம் மற்றும் மாகாண மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசிக்காமல், பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை தீட்டுவதாக மத்திய அரசாங்கத்தை அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

தமது கட்சியின் ஒரு அங்கமாக விக்னேஸ்வரன் இருக்கின்ற போதிலும், இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, வடமாகாண முதலமைச்சரின் செயற்பாடுகள் மற்றும் கூற்றுக்கள் குறித்து அமைதிகாக்கிறது.

ஆனால், சம்பந்தன் அவர்கள், இந்த விடயத்தில், விக்னேஸ்வரனுடன் பகிரங்கமாகவே முரண்படும் ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறார். வடக்கு, கிழக்கில் உள்ள சாதாரண தமிழ் மக்களுக்கு வேலைவாய்ப்பை கொடுக்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுடன் அரசியல் தீர்வுகளுக்கான நடவடிக்கைகளும் ஒரே நேரத்தில் செய்யப்பட வேண்டும் என்பது அவரது கருத்து.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

## ‘மட்டக்களப்பில் சீன நிறுவனத்துக்கு காணி வழங்க முடியாது’



கரும்புச் செய்கைக்காக சீன அரசாங்கத்தின் கம்பனிக்கு மட்டக்களப்பு குடும்பிமலையில் 68250 ஹெக்டேயர் காணி வழங்குவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

## அனைத்துத் தமிழ் கட்சிகளுடனும் கிழக்குத் தமிழர் ஒன்றியம் பேச்சுவார்த்தை

“எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சார்பில் அதிஉச்சபட்ச ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில், சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றிணைந்து ஒரே அணியில் போட்டியிட வேண்டும்“

என்ற கிழக்குத் தமிழர் ஒன்றியத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை

தொடர்ச்சி... (பக்கம் -18 )







## மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா

மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இடையிலான தடகள விளையாட்டு விழா கடந்த வியாழக்கிழமை 12.07.2018 அன்று மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் தலைமையில் மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் அரசாங்க அதிபர் பணிமனை ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.



நிகழ்விற்கு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில், “இப்போட்டியானது கிராம மட்டத்தில் இருந்து பிரதேச மட்டத்திற்கும் அங்கிருந்து தெரிவானவர்கள் மாவட்ட மட்டத்திலும் பங்கு பற்றுகின்றனர். மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் சுயமாக வாழ்வதற்கான வழிகளை எமது அரசாங்க நிறுவனங்களும் அதிகாரிகளும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் எட்டாயிரத்துக்கும் (8000) மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இது வருடத்திற்கு வருடம் அதிகரித்துக்



கொண்டே போகின்றது. இத்தகைய மாற்றுத்திறனாளிகளை கலை, கலாசாரம், மாத்திரமல்ல பொருளாதாரத்திலும் மேலோங்கச் செய்யவேண்டியது அரசாங்க அதிகாரிகளின் கடமையாகும்.

மாற்றுத்திறனாளிகளும் இந்தச் சமூகத்தின் பிரஜைகள் என்பதை நாம் புரிந்து செயற்பட வேண்டும். இன்று சமூகத்தில் அவர்களும் ஒரு அங்கம்; இன்று கல்வியாளர்களாகவும் அதிகாரிகளாகவும், நிர்வாக அதிகாரிகளாகவும் எம்மத்தியில் பல துறைகளிலும் மாற்றுத்திறனாணிகள் பலர் பணியாற்றுகின்றனர்.

மாற்றுத்திறளானிகளின் திறமைகளை இன்று சிறப்பாக மைதானத்தில் அவர்கள் வெளிப்படுத்தி இருந்தனர். அவர்களை நமது அங்கமாக நினைத்து அவர்களையும் அந்தஸ்த்துடன் நடத்தப்பட வேண்டும்” என வேண்டிக்கொண்டார்.

இந் நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், பிரதி மேயர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், போன்றோர் கலந்து கொண்டனர்.

## மரண அறிவித்தல்



### திருமதி ஜெயா மேரி ஜெசிந்தா மணி

கொழும்பு ஜெம்பட்டா வீதி 89 ஆம் இலக்க தோட்டத்தை பிறப்பிடமாக கொண்டவரும் திரு மணிராஜ் (மணி மாஸ்டர்) அவர்களின் அன்பு மனைவியுமான திருமதி ஜெயா மேரி ஜெசிந்தா மணி அவர்கள் 16/07/2018 அன்று கர்த்தரின் பாதத்தில் நித்திரையடைந்தார்.
இவர் திரு.டன்ஸ்டன் மணி (தினேஷ்), திருமதி ஜீவதர்ஸி நாலக்க (ஜீவா) ஆகியோரின் அன்பு தயாரும் திரு ஜீட் சமன் நாலக்க (சமன்), திருமதி சகாயமேரி டன்ஸ்டன் (ராணி) ஆகியோரின் மாமியும். ஜோனத்தன், ஆமோஸ், ஜோசுவா, ஆரோன் ஆகியோரின் பாட்டியுமாவர்.

அவரின் இறுதி ஆராதனை எதிர்வரும் 21 ஆம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கல்கரி choice memorial funeral service மண்டபத்தில் இடம்பெறும்.

## காரைதீவில் சுவாமி விபுலாநந்தரது 71வது சிரார்த்ததினம்!



உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரது 71வது சிரார்த்த தினம் கடந்த (19.07.2018) வியாழக்கிழமை காலை அவர் பிறந்த காரைதீவு மண்ணில் அனுஸ்ட்டிக்கப்பட்டது.

காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றம் ஏற்பாடுசெய்த இந்நிகழ்வு விபுலாநந்த மணிமண்டப வளாகத்தில் பணிமன்றத்தலைவர் வி.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக சுவாமியின் திருவுருவச்சிலைக்கு பணிமன்றத்தின் முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, பணிமன்ற போசகர் சி.தங்கவேல் உள்ளிட்ட பலர் மாலை அஞ்சலி செலுத்தினர்.



பணிமன்றச் செயலாளர் கு.ஜெயராஜி பஞ்சாராத்தி தீபாராதனை காட்டியதைத் தொடர்ந்து வெள்ளைநிற மல்லிகையோ.. என்ற அடிகளாரது பாடல் இசைக்கப்பட்டது.

அதிதிகள் மாணவர்கள் புஸ்பாஞ்சலி செலுத்தினர்.

தலைமையுரையை தலைவர் வெ.ஜெயநாதனும் சிறப்புரையை முன்னாள் தலைவர் வி.ரி. சகாதேவராஜாவும் நன்றியுரையை செயலாளர் கு.ஜெயராஜியும் நிகழ்த்தினர்.

சுவாமியின் மருமகள் திருமதி கோமேதகவல்லியின் மகள் திருமதி விஜயா புவனராஜா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.
(காரைதீவு நிருபர் சகா)

## கிழக்கின் மூத்த தமிழறிஞர் வித்துவான் ஞானரெத்தினம் கனடாவில் காலமானார்!



கிழக்கிலங்கையின் மூத்த தமிழறிஞரும் இறுதி வித்துவான் எனக்கருதப்படுபவருமான, கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த வித்துவான் கனகரெத்தினம் ஞானரெத்தினம் (வயது 84) கனடாவில் காலமானார்.

இவர் கனடா சுவாமி விபுலானந்தா கலை மன்றத்தின் காப்பாளர்களுள் ஒருவராகத் திகழ்கிறார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்தைப் பூர்த்தி செய்த இறுதி வித்துவானாக இவர் கருதப்படுகின்றார். அதன்பிறகு இவ்வித்துவான் பாடநெறி பல்கலைக்கழகத்தால் நிறுத்தப்பட்டமை தெரிந்ததே.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நீண்டகாலம் ஆசிரியராக, பிரதி அதிபராக சேவையாற்றிய வித்துவான் க.ஞானரெத்தினம் கல்முனையின் குறிப்பிட்ட கால கல்வி வளர்ச்சியில் பிரதான பங்காற்றியிருந்தார்.

பிரபல எழுத்தாளரான இவர், இலங்கை வானொலியில் கல்விச்சேவை கிராமிய சேவைகளில் நேரடியாக தொகுத்து வழங்கியுள்ளார். அது தவிர பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார்.

1990களில் புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறிய இவருக்கு 2 ஆண் பிள்ளைகளும் 2 பெண் பிள்ளைகளும் உள்ளனர்.
(காரைதீவு நிருபர் சகா)

## 12 பேரைக் கடித்த விசர் நாய்





மட்டக்களப்பு - ஏறாவூர். புன்னக்குடா வீதியில் ஒரே தினத்தில் 12 பேரை ஒரு விசர் நாய் கடித்துள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை 18.07.2018 நண்பகல் இடம்பெற்றுள்ளது.

பாதிப்புக்குள்ளானவர்கள் உடனடியாக ஏறாவூர் அதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக எறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி எம். எச்.எம். தாரிக் தெரிவித்தார்.

தொடர்ச்சி... (பக்கம் -04 )

## இமயமலை வயகரா

உலகிலேயே அதிக விலை உயர்ந்த பாரம்பரிய மருத்துவ குணம் வாய்ந்த காளான்தான் யர்சாகும்பா என்று அழைக்கப்படுகிறது.


இமயமலையிலுள்ள வயகரா என்று இதனை கூறுகின்றனர்.

இதை தேடி ஆயிரக்கணக்கான நேபாள மக்கள் இமயமலையின் உயரமான இடங்களில் சில மாதங்களைக் கழிக்கின்றனர்.

பாலுணர்வை தூண்டும் குணங்களுக்கு அப்பாற்பட்டு, ஆஸ்துமா முதல் புற்றுநோய் வரை பல நோய்களை இந்த காளான் குணமாக்க முடியும் என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



# 1983 ஜூலை: தொடரும் பாதுகாப்பற்ற உணர்வு





ஜூலை என்பது இலங்கையில் கறுத்து விட்ட ஒரு மாதம். 1983 ஆம் ஆண்டு ஜூலை, இலங்கை மக்களின் மனதில் அந்தக் கருமையை, வெறுமையை அழுத்தமாக பதித்து விட்டது.

அது ஒன்றும் தமிழர்களோ அல்லது சிறுபான்மையினரோ கண்ட முதல் கலவரமல்ல. ஆனால், இங்கு அனைத்தையும் மாற்றிவிட்ட கலவரம்.

அன்று பெரும் சொத்து அழிப்பையும், உயிர் அழிப்பையும் எதிர்கொண்ட தமிழர்களில் ஒரு பகுதியினர் நாட்டைவிட்டு வெளியேறினார்கள். மறுபுறம் உள்நாட்டுப் போரை ஆரம்பித்த தீவிரவாத இயக்கங்களுக்கு ஆட்கள் தானாகவே சென்று சேரும் நிலையும் ஏற்பட்டது.

ஆயிரக்கணக்கில் பலர் புலம்பெயர்ந்து சென்றதால் இலங்கை தனது புத்திஜீவிகளில், நிபுணர்களில், படித்தவர்களில் பலரை மொத்தமாக இழந்துவிட்டது. தீவிரவாத இயக்கங்களில் தமிழ் இளைஞர்கள் சேர்ந்து ஆரம்பித்த உள்நாட்டுப் போர், அடுத்த 30 வருடத்துக்கு இலங்கையையே மொத்தமாக அழித்துவிட்டது.

அன்று சில அரசியல்வாதிகளால் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படும் இந்த கறுப்பு ஜூலைக் கலவரம் ஏதோ தமிழர்களுக்கு மாத்திரந்தான் அழிவைத் தந்தது என்ற பார்வை இங்கு பல தரப்பிடம் இருக்கிறது. ஆனால், இது ஒட்டுமொத்த இலங்கைக்கே அழிவு என்ற யதார்த்தத்தை எல்லோரும் உணரும் போதுதான் இன்னுமொரு வன்செயல் வராமல் தடுக்கும் மனோநிலை இங்கு உருவாகும்.

ஆனால், யதார்த்தத்தில் என்ன நடந்தது? இந்த வருட ஆரம்பத்திலும் மற்றுமொரு சிறுபான்மை இனத்துக்கு எதிராக இங்கு வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. ஆகவே, இன்னமும் இலங்கையில் உண்மை யதார்த்தம் எவருக்கும் புரியவில்லை. கடந்த 30 வருட நடப்புக்கள் இலங்கையை அதனை அண்டிய பல நாடுகளில் இருந்து பின்னடையச் செய்து விட்டது என்ற உண்மை இன்றுவரை எவருக்கும் உறைக்கவில்லை.

வன்செயலில் உண்மையான பாதிப்பு எல்லோருக்குமானது என்ற யதார்த்தத்தை எல்லோரும் உணர்ந்திருந்தால், அது மீள நடந்திருக்காது.
எந்த நேரத்திலும் நாம் தாக்கப்படலாம் என்ற அச்ச உணர்வே இன்று வரை சிறுபான்மை மக்களின் மனதில் ஓடிக்கொண்டிருக்கிறது. எவருக்கும் பாதுகாப்பில்லை என்பதுதான் இங்கு உண்மை நிலை.

இந்த அச்ச உணர்வு எந்தவொரு சிறுபான்மையினர் மனதில் தொடர்ந்தாலும், இலங்கையை ஒரு சுதந்திர நாடு என்று எவரும் கூறமுடியாது. சுதந்திரத்தை இழந்த ஒரு நாட்டின் மக்களாகத்தான் எம்மை நாம் உணர முடியும். இது இலங்கையில் நல்லிணக்கத்துக்கோ, வளர்ச்சிக்கோ உதவக் கூடிய உணர்வல்ல.

இந்த அச்சநிலை, பாதுகாப்பற்ற நிலை மக்கள் மனதில் இருந்து அகல வேண்டும். எல்லோரும் சுதந்திர உணர்வை, பாதுகாப்பு உணர்வைப் பெற வேண்டும். அப்படியான ஒரு நிலையே இலங்கையை மேன்மையடையச் செய்யும். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் அந்த திசையில் இருக்க வேண்டும். இந்த அடிப்படை உணரப்படாமல் கொண்டு வரப்படும் எந்தச் சட்டமும் இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் மீட்சியை தராது.

பொருளாதாரத்தில் இன்று பெரும் இறங்கு முகத்தை இலங்கை எதிர்கொண்டுள்ளதாக பல நிபுணர்களும் கூறுகிறார்கள். அரசியல்வாதிகளில் ஒரு தரப்பும் இதனை ஏற்றுக்கொள்கிறது. அதற்காக வெளிநாட்டு முதலீடுகளை அனைத்து அரசியல் தரப்பும் இங்கு எதிர்பார்க்கின்றன. ஆனால், இந்த மாதிரியான பாதுகாப்பற்ற நிலை தொடருமானால், எப்படி வெளிநாட்டு முதலீடுகள் இங்கு வரும்? முதலீட்டுக்கான பாதுகாப்புணர்வு இங்கு உறுதி செய்யப்படும் பட்சத்தில்தான் வெளிநாட்டு முதலீடுகளை இங்கு எதிர்பார்க்க முடியும்.

ஒவ்வொரு மனிதனின், பிரஜையின்

**பூபாலரட்ணம் சீவகன்**

மனித உரிமைகள் உறுதி செய்யப்படும் நிலைதான் பொருளாதாரத்துக்கும் பாதுகாப்பான நிலையாக அமையும்.

ஆனால், துரதிர்ஸ்ட வசமாக இலங்கை மக்கள் மனதில் இன்னும் தாம் பாதுகாப்பாக இருக்கிறோம் என்ற உணர்வு ஏற்படவில்லை. அதனை ஏற்படுத்துவதே இங்கு இப்போதைக்கு முக்கியமான தேவையாகும்.

அரசின், அரசாங்க அதிகாரிகளின், நாடாளுமன்றத்தின், பொதுமக்களின் அனைத்து நடவடிக்கைகளும் அனைத்து மக்கள் மனதிலும் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதை மையப்படுத்தியதாக இருக்கட்டும்.

## அரங்கம் செய்திகள் நிறுவன வேலைவாய்ப்புகள்

அரங்கம்

வேகமாக வளர்ந்துவரும் அரங்கம் செய்திகள் நிறுவனத்தில் பின்வரும் பணிகளுக்கு ஆட்கள் தேவை.

- உதவி ஆசிரியர் (கொழும்பு மற்றும் மட்டக்களப்பு)
- விளம்பர பிரதிநிதிகள்
- அலுவலக உதவியாளர் (மட்டக்களப்பு மற்றும் கொழும்பு)
- வானொலி அறிவிப்பாளர்கள்
- வீடியோ படப்பிடிப்பாளர்கள்

முழு நேர / பகுதி நேர விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

ஊதியம் தகுதிக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
முகாமையாளர், 227, பார் வீதி, மட்டக்களப்பு.
விண்ணப்ப இறுதித்திகதி ஆகஸ்ட் 05, 2018.





# ‘சீனாவின் கடல்சார் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இலங்கை நவீன கடல் ரோந்து விமானங்களை வாங்க வேண்டும்’ - ஜப்பானிய நிபுணர் எச்சரிக்கை

சீன நீர்மூழ்கிகளால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள, இலங்கை லொக்கீட் பி-3சி கடல் கண்காணிப்பு விமானங்களை வாங்க வேண்டும் என்று, வாசிங்டனின் ஹட்சண் கல்வி நிறுவனத்தின் வருகைதரு விரிவுரையாளரான, ஜப்பானிய கடல் பாதுகாப்பு நிபுணர் டாக்டர் சடொரு நகெள கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனப் பிரசன்னம் குறித்து இலங்கை மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று எமது செய்தியாளருக்கான மின்னஞ்சல் மூலமான செவ்வியில் டாக்டர் நகெள எச்சரித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவ தேவைகளுக்கு அல்லாத வகையிலேயே பயன்படுத்துவோம் என்ற என்ற சீனாவின் வாக்குறுதியை, தென்சீனக் கடலில் சர்வதேச சட்டங்களை எவ்வாறு சீனா மீறுகிறது என்ற விடயத்துடன் ஒப்புநோக்கியே இலங்கை அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




சீன அரசாங்க நிறுவனமானா சீன ஹார்பர் என்ஜினியரின் கம்பனிக்கு 1.2 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு, அம்பாந்தோட்டை துறைமுகத்தை, 99 வருடங்களுக்கு இலங்கை குத்தகைக்கு விட்டிருப்பதுடன், அதன் 70 வீத பங்குகளையும் அதற்கு கொடுத்துள்ளது. ஆனால், இராணுவம் சாரா, பொதுமக்கள் மற்றும் வணிக தேவைகளுக்கு மாத்திரமே அதனை பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தையையும் இலங்கை விதித்துள்ளது. துறைமுகத்தின் பாதுகாப்பு இலங்கை கடற்படையிடமே இருக்கும். தனது தென்பிராந்திய தலைமையகத்தை இலங்கை கடற்படை ஏற்கனவே காலியில் இருந்து அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு மாற்றிவிட்டது.

இந்து சமுத்திரத்தில் வல்லரசு நாடுகளின் முறுகல் அதிகரித்துள்ள நிலையில், இலங்கை கடற்படை நீர்மூழ்கி எதிர்ப்பு வசதிகளை கொள்வனவு செய்ய வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது என்று இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கூறியிருந்தார். அந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இலங்கை கரையோர ரோந்து கலங்களை வாங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், இந்த தேவைக்கான சிறந்த தேர்வு, கடற்கரையோர ரோந்து கலங்கள்(படகுகள்) அல்ல என்றும் லொக்கீட் பி-3சி ஓரியன் கண்காணிப்பு விமானங்களே சரியான தேர்வு என்று டாக்டர் நகெள கூறுகிறார்.

ஏன் இந்த பி-3சி விமானங்கள்?

---

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரும் சீனக் கப்பல்களை, அவை துறைமுகத்துக்குள் வருவதற்கு முன்னதாக இலங்கை, அடையாளம் கண்டு, எச்சரித்தாக வேண்டும். அதனை வேகமாகவும் செயற்திறனுடனும் செய்ய விமானங்களால் மாத்திரமே முடியும் என்கிறார் அவர்.

பி-3சி என்பது அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டு, அவுஸ்திரேலியாவினாலும் பயன்படுத்தப்படும் விமானம். பி-3 குடும்பத்தை சேர்ந்த பி-8 விமானத்தை இந்தியாவும் பயன்படுத்துகிறது. பி-3 இன் நீர்மூழ்கி எதிர்ப்புத் திறன் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளது என்கிறார் டாக்டர் நகெள.

‘இலங்கையின் நீர்மூழ்கி கப்பல் எதிர்ப்பு வல்லமையை கட்டியமைப்பதற்காக “சுதந்திர மற்றும் திறந்த இந்து - பசுபிக் கேந்திர திட்டத்தின் கீழ், ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பி-3சி நீர்மூழ்கி ரோந்து விமானங்களை, இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய அல்லது நன்கொடையாக வழங்க ஜப்பான் திட்டமிடுகின்றது,’ என்றும் அவர் கூறுகிறார்.

தென் சீனக் கடல் ஒரு உதாரணம்

---

தென் சீனக் கடலில் சீனாவின் நடத்தைகளை உதாரணம் காட்டி, சீனாவின் நோக்கம் குறித்து இலங்கை எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று டாக்டர் நகெள கேட்கிறார்.

தென் சீனக் கடலில் 90 வீதம் தமக்குச் சொந்தம் என்ற சீனாவின் வாதத்தை சர்வதேச நிரந்தரத் தீர்ப்பாயம் நிராகரித்துவிட்ட போதிலும், அந்தத் தீர்ப்பை புறக்கணித்துவிட்டு, தென் சீனக் கடலில் 7 செயற்கைத்தீவுகளில், 3 விமான

**‘மேலும் சீன முதலீடுகளை இலங்கை ஏற்கும் போது, சீனச் சூழ்ச்சிகளில் தப்பிப்பதற்கான சுயாதீனத்தையும் அது பேணிக்கொள்ள வேண்டும்’**

நிலையங்களை சீனா நிர்மாணித்துள்ளது. இந்த விமான நிலையங்கள் மற்றும் தீவுகள் இராணுவ தேவைகளுக்காக அல்ல என்று சீனா பிரகடனம் செய்தாலும் அந்தத் தீவுகளில் ஏவுகணைகளை அது நிறுத்தியுள்ளது. ஆகவே, மேலும் சீன முதலீடுகளை இலங்கை ஏற்கும் போது, சீனச் சூழ்ச்சிகளில் தப்பிப்பதற்கான சுயாதீனத்தையும் அது பேணிக்கொள்ள வேண்டும் என்று ஜப்பானின் இந்த நிபுணர் எச்சரிக்கிறார்.

வல்லரசுகளின் போட்டி

---

இலங்கைக்கு நீர்மூழ்கிகளின் ஆபத்து இருக்கிறது என்று ஏன் இலங்கைப் பிரதமர் பேசுகிறார் என்பதை விளக்கிய டாக்டர் நகெள, அதற்கு பதிலளிக்கும் போது, இலங்கை அமைந்திருக்கும் புவியியல் அமைவிடம் குறித்தும், வெளியாரின் தலையீட்டுக்கு எந்த அளவுக்கு இலங்கை பலவீனமாக இருக்கிறது என்பது குறித்தும் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும் என்கிறார்.

“உலகில் குறிப்பாக இந்து- பசுபிக் வட்டகையில் இலங்கையின் வகிபாகம், குறித்து தெரிந்துகொள்ள வேண்டும். வடக்கு இந்திய சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்திருக்கிறது. அந்த கடலில் தென்பகுதியில் அதிக எண்ணிக்கையில் தீவுகள் கிடையாது. ஆகவே இந்தோ - பசுபிக் கடலின் எந்தப் பகுதிக்கும் அதாவது, அவுஸ்திரேலியா, தென்கிழக்காசியா, தெற்காசியா, மத்திய கிழக்கு, கிழக்கு ஆபிரிக்கா, அல்லது இந்து சமுத்திரத்தில் இருக்கும் ஏனைய தீவு நாடுகளுக்கு ஒரு கப்பல் போக வேண்டுமானால், அது, இலங்கையை கடந்தே சென்றாக வேண்டும். ஆகவே, மத்திய கிழக்கு அல்லது ஆபிரிக்காவில் இருந்து ஆசியாவுக்கு செல்லும் எந்த முக்கிய கடல் வழிகளும், தொடர்புகளும் சரித்திர ரீதியாக இலங்கை ஓரமாகவே சென்றாக வேண்டும்.” என்கிறார் அவர்.

“ இலங்கையின் அமைவிடம் இலங்கையின் சரித்திரத்தை பாதித்துள்ளது. அதன் அமைவிடத்துக்காகவே போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், பிரிட்டிசாரும் இலங்கையை கைப்பற்றினார்கள். இந்தக் காரணத்தினாலேயே சீன அட்மிரல் ஷெங் ஆபிரிக்காவுக்கான தனது பயணத்தில் இலங்கை வந்தார்.”

“முதலாம் உலகப் போரின்போது, இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் பயணித்த கப்பல்களுக்கு ஜப்பானும் மற்றும் அவுஸ்திரேலியாவும் வழிப்பாதுகாப்பு கொடுத்தன. இரண்டாம் உலகப் போரின் போது, பசுபிக் கடலில் உள்ள ஜப்பானிய நிலைகளை தாக்கவரும் பிரிட்டிஷ் கப்பல்களை தடுப்பதற்காக, ஜப்பானிய விமானந்தாங்கி கப்பல் குழு ஒன்று இலங்கையை சுற்றவுள்ள கடற்பரப்பில், பிரிட்டிஷாரின் போர்க்கப்பல்களை (ஒரு விமானந்தாங்கி உட்பட) தாக்கியது.

இந்திய ஆர்வம்

---

“இந்தியாவும் இந்த விடயத்தில் பலவீனமாக இருப்பதாகவும், அதன் நடவடிக்கைகள் அதனை காண்பிப்பதாகவும் இந்த நிபுணர் கூறுகிறார்.

“இலங்கைக்கு இந்தியா தனது அமைதிப் படையை அனுப்பியதற்கான ஒரு காரணம் இலங்கையின் வதிவிடமாகும். அந்தக் காலகட்டத்தில் அமெரிக்கா இலங்கையை தனது கடற்தளமாக பயன்படுத்திவிடுமோ என்று இந்தியா பயந்தது.” என்று ஞாபகமூட்டினார் அவர்.

இலங்கை இருக்கும் இடம் வசதியானது என்பதாலேயே, சோமாலியாவின் கடற்கரையோரமாக கடற்கொள்ளைக்காரர்களுக்கு எதிராகச் செயற்படும் கமாண்டோக்கள் கூட இலங்கையை தமது கலங்களை நிறுத்தும் தளமாக பயன்படுத்தினார்கள்.

இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு அணி காலியில் தனது தளத்தை வைத்திருந்தது.

உலக வல்லரசுகளின் கடல் முறுகல்களில்

**பி.கே. பாலச்சந்திரன்**

இலங்கை மாட்டிக்கொள்ளும் அபாயம் உள்ளது என்பதையே இவை காண்பிக்கின்றன.

சீனா விவகாரம்

---

சீனாவை எடுத்துக்கொண்டால், இலங்கை மிகவும் வசதியான இடத்தில் அமைந்திருப்பதாலேயே சீனா அங்கு பெருமளவில் முதலீடு செய்துள்ளது. அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுக திட்டங்களில் சீனா முதலீடு செய்துள்ளது. இந்த திட்டங்கள் சிவிலியன் நோக்கத்துக்கானவை என்று மேலோட்டமாக சொன்னாலும், சீன நீர்மூழ்கிகள் 2014இல் கொழும்பு துறைமுகத்தை பயன்படுத்தியதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். “2015 இல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், 2017இல் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதை தடை செய்தது.

கோபமடைந்த சீனா, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வழங்கிய பணத்தை திருப்பித் தரவேண்டும் என்று அழுத்தம் கொடுத்தது. அந்தப் பணத்துக்கு பதிலாக அம்பாந்தோட்டை துறைமுக உரிமையை எடுத்துக்கொண்ட சீனா, அங்கு, தனது வசதிகளை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது,” என்றார் இந்த ஜப்பானிய நிபுணர்.

“தாம் துறைமுகத்தை சிவிலியன் தேவைகளுக்கு மாத்திரமே பயன்படுத்துவோம் என்று சீனா சொன்னாலும், அது கடந்த காலங்களில் ஏனைய நாடுகளுடன் நடந்து கொண்ட விதம் நன்றாக இல்லாத காரணத்தினால், இலங்கை கவலை கொண்டிருக்கிறது. இலங்கையின் அனுமதியின்றி சீனா, இலங்கையை தனது கடற்படைத் தளமாக பயன்படுத்தத் தொடங்கினால், அதன் அர்த்தம் இலங்கை தனது சுதந்திரத்தை இழந்துவிட்டது என்பதுதான்,” என்கிறார் அவர்.

சீனா, தனது நீர்மூழ்கிகளை அம்பாந்தோட்டையிலேயே தயாரிப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன என்றும் டாக்டர் நகெள எச்சரிக்கிறார். இவற்றை அறிந்து கொள்வதற்கு இலங்கைக்கு இப்படியான நவீன நீர்மூழ்கி எதிர்ப்பு விமானங்கள் மிகவும் அவசியம் என்று அவர் வாதிடுகிறார்.

தொடர்ச்சி...

## 12 பேரைக் கடித்த விசர் நாய்

இவர்களில் ஒரு சிறு குழந்தையும் அடங்குவதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

விசர் நாய் உதவிக்கு விரைந்தவர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி ஏறாவூர் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.



# கதிர்காமம் யாருக்குச் சொந்தம்?

## பௌத்தரின் கதிர்காமமும் தாய்லாந்தும்!

பார்வதி மாணிக்கத்துக்கு கொஞ்சம் சாப்பாடு தான் கிடைத்தது. அவளுக்கு இரு மகன்கள். கணவன் ஈஸ்வரனை பரிதாபமாகப் பார்த்தாள் அவள். ஈஸ்வரனோ புன்னகைத்தபடி, இரு மகன்மாரையும் அழைத்தார். “கொஞ்சமே உணவு இருப்பதால், ஒருவருக்கே தர முடியும் செல்வங்களே! உங்களில் யார் முதன்முதலில் இந்த உவர்நீர்ப்பரப்பை வலம் வருகின்றார்களோ அவருக்கே இந்தச் சாப்பாடு.” என்று அருகே கடலைக் காட்டினார் அவர். ஒருசொல்லும் சொல்லாமல் இளையவன் கந்தகுமாரன், தன் மயிலில் ஏறிப் பறந்தான், சமுத்திரத்தை வலம்வர! என்னடா எங்கயோ கேட்டமாதிரி.... டேய் கள்ளா, இது ஞானப்பழம் கதை தானே என்று முறைக்காதீர்கள். பொறுமை! முழுக்க வாசியுங்களேன்!

மூத்தவன் குண்டுக் கணநாதன் யோசித்தான். கடலைச் சுற்றுவது என்ன, வீட்டிலிருந்து கடற்கரைக்குக் கூட அவனால் நடக்கமுடியாது. இரண்டு எட்டு வைத்தாலே இளைக்கும் ‘சீனி வருத்த’ உடம்பு அவனுக்கு. ஆனால் உடம்பை விடப்பெரிய மூளை. தலை வேறு யானைத்தலை இல்லையா! “அப்பா உவர்நீர்ப்பரப்பை அல்லவா சுற்றிவரச் சொன்னார். உவர்நீர்.... உப்பு.. நீர்......! அப்படியென்றால்...” அவன் முகத்தில் புன்னகை பளிச்சிட்டது. யானைச் சிரிப்பு! ஞானச்சிரிப்பு!

சமையலறையில் அம்மா உப்புக்கு நீருற்றி வைத்திருந்த சிரட்டையைத் தூக்கிக் கொணர்ந்து வைத்து அதைச் சுற்றிவந்தான்; “அப்பா, உப்புநீர்ப்பரப்பை வலம் வரச்சொன்னீர்கள். இதோ உப்புச்சிரட்டை. வலம்வந்துவிட்டேன். கொடுங்கள் சாப்பாட்டை!” என்று கைநீட்டினான்.

அவன் புத்திக்கூர்மையைப் பாராட்டிய ஈஸ்வரனும் பார்வதியும் விழுந்துவிழுந்து சிரித்தார்கள். கஷ்டப்பட்டு கடலெல்லாம் சுற்றிவந்த கந்தகுமாரன், குடும்பமே தன்னை ஏமாற்றிவிட்டதாகச் சொல்லி சண்டைபிடித்து அழுதுகொண்டே கதிரைமலை உச்சியில் போய் நின்றுகொண்டான்.

ஆம்! இது தான் இலங்கையின் ஞானப்பழக்கதை! “உப்புநீர் வலம்” என்ற பொருளில் “கரதிய வலல்ல” என்ற பெயரில், புகழ்பெற்ற சிங்கள நாட்டார் கதை இது! “ஈஸ்வர” தெவியோ, “பார்வதி” மெணியக், “கண” தெவியோ, “ஸ்கந்த” குமாரயா, வெடசிதிகந்த (கதிரமலை) எல்லாம் அப்படியே வருகிறார்கள். கரதிய வலல்லவை அழகாக்குவதே, பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன் நம் வீட்டுக் ‘குசினி’களையும் அலங்கரித்துக்கொண்டிருந்த அதே “உப்புச் சிரட்டை” தான்.


என்னடா இவன், போன கிழமை, “கதிர்காமம் ஆருக்குச் சொந்தம்” எண்டு தலையங்கம் போட்டு சம்மந்தமில்லாத கதை கதைச்சான். இன்டைக்கெண்டால் உப்புச்சிரட்டையில் வந்து நிக்கிறான்! தலையைப் புகுத்தி சாகச் சொல்றானா?

சொல்கிறேன். பொறுங்கள். சிங்கள பௌத்தப் பாரம்பரியத்தில் கதிர்காமக் கந்தன், இன்று முக்கியமான இடத்தை வகிக்கிறான். முருகன் பற்றிய சுவையான பல நாட்டார் கதைகள் அவர்களிடம் நிலவுகின்றன. அவை எல்லாமே கதிர்காமத்தை அடிப்படையாக வைத்தவை. கதிர்காமம் இன்று ருகுணு மகா கதரகம தேவாலயமாக மாறியிருப்பதன் பின்னணியில் அவற்றை நோக்கினால் பல புதிர்கள் அவிழ்வதைக் காணலாம். பௌத்தருக்கும் கதிர்காமத்துக்கும் உள்ள உறவு தான் என்ன?



இதை இரண்டாகப் பார்க்கலாம். ஒன்று இலங்கையில் பௌத்தருக்கும் முருகனுக்கும் உள்ள உறவு. அடுத்தது அவர்களுக்கும் கதிர்காமத்துக்கும் உள்ள உறவு. இலங்கையில் முருகன் பற்றிய முதல் குறிப்பு, கி.பி 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சூளவம்சத்தில் தான் வருகின்றது. இரண்டாம் காசியப்பனின் (கி.பி 652 - 661) மகனான மானவர்மன், குமாரனை வழிபட்ட செய்தி அதில் உண்டு. வீரபாகு, வீரப்பெருமாள் பராக்கிரமபாகு, போன்ற முருகனின் அல்லது முருகனுடன் தொடர்புபட்ட பெயர்கள், இலங்கை வரலாற்றில் அதிகம் தென்படுகின்ற காலம் இதுவே என்பது ஊன்றி நோக்கத்தக்கது. கம்பளை இலங்காதிலக விகாரையிலும், கடலாதெனிய விகாரையிலும், 16ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில், “ஸ்கந்த” என்ற தெய்வத்தின் பெயர் வருகின்றது.

1950களில் கதிர்காமம் - ஒரு இந்திய வரைபடம்



1. கதிரைமலை
2. பெரிய கோவில்
3. பிள்ளையார் கோவில்
4. பெருமாள் கோவில்
5. தெய்வானை அம்மன்
6. வள்ளி அம்மன்
7. முத்துலிங்கசாமி
8. பள்ளிவாசல்
9. கண்ணகி அம்மன்
10. சின்னக்கோவில்
11. சூரன்கோட்டை (கிரிவிகாரை)
12 பஸ்நாயக்க நிலமை
13. மாணிக்க கங்கை

கதிர்காமத்தில் சிங்களவரின் உரித்தைச் சொல்ல இன்று இரு கதைகள் சொல்லப்படுகின்றன. ஒன்று, எல்லாளனை வெல்வதற்காக உரோகண மன்னன் துட்டகைமுனு கதிர்காமக் கடவுளிடம் நேர்த்திக்கடன் வைத்து, வென்றபின் இக்கோவிலைக் கட்டினான் என்பது கந்த உபாத எனும் அண்மைய கால சிங்கள நூலில் இக்கதை சொல்லப்படுகிறது. இன்னொரு கதை, மகாசேன மன்னன் இறந்தபின்னர், இங்கு அவனுக்காக அமைக்கப்பட்ட நினைவாலயமே கதிர்காமம் என்கின்றது.

ஆனால் இந்தக் கதைகள் எதுவும் பழைமையான இலங்கை வரலாற்று நூல்கள் எதிலும் காணப்படவில்லை. இத்தனைக்கும் கதிர்காமம் காஜரகாமம் என்ற பெயரில் இரு தடவை மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதல் தடவை, சங்கமித்தை கொணர்ந்த வெள்ளரசுக்கிளையை நாட்டும் சடங்கில் காஜரகாம – சந்தனகாம சத்திரியர்கள் கலந்துகொண்டதைச் சொல்கின்றது. அடுத்தது தப்புல மன்னன், காஜரகாமத்தில் பௌத்த மடம் அமைத்தது பற்றிய செய்தி. இரண்டிலுமே அங்கு முருகன் கோவில் உண்டென்றோ, அக்கோவில் பௌத்தரால் போற்றப்படுகின்றது என்ற தகவலோ இல்லை.

**மைங்கணான் மகிழறிவன்**

ஆனால், கதிர்காமத்தில் இன்றுள்ள கிரிவிகாரை உண்மையிலேயே மிகப்பழைமை வாய்ந்த ஒன்று தான் என்பதற்கு தொல்லியல் தடயங்கள் கிடைத்துள்ளன. தப்புல மன்னன் அமைத்த பௌத்த மடமும் கிரிவிகாரையை அண்டிய பகுதியிலேயே அமைந்திருக்க வாய்ப்புகள் உண்டு. பேராசிரியர் சி.பத்மநாதன் இதை வைத்து ஒரு ஊகத்துக்கு வந்திருக்கிறார். கதிர்காமம் அல்லது கஜரகாமம் மிகப்பழைய பௌத்த மையம். அங்கு புத்தபிரானுக்கு பரிவார மூர்த்தியாக அல்லது காவல் தெய்வமாக அமர்ந்திருந்தவனே முருகன். கிரி விகாரை கைவிடப்பட்டு சிதைந்தொழிந்து ‘சூரன் கோட்டை’யாக மாற, அவனே கதிர்காமத்தெய்வமாக உயர்ந்திருக்கிறான்.

புத்தருக்குப் பரிவாரமாக முருகன் இருந்தானா? அதுவும் பரிவாரமாக வீற்றிருந்த தெய்வம் முதன்மைத் தெய்வமாக மாறியதா? இதென்ன விசர்க்கதை?

ஒரு விசர்க்கதையும் இல்லை. எந்தத் தெய்வத்துக்கு கோவில் அமைக்கப்பட்டதோ, அந்தக் கோவிலில் வீற்றிருந்த பரிவாரத் தெய்வம், பிற்காலத்தில் முதன்மைத் தெய்வத்தை விட புகழ்பெற்ற சம்பவங்கள் வழக்கமாக நடப்பது தான். தமிழகத்தின் பிள்ளையார்பட்டி ஆலயத்தின் மூலவர் சிவபெருமான். ஆனால் இன்று அது ஒரு பிள்ளையார் கோவில். திருநள்ளாறும் ஒரு சிவாலயமே. சனீஸ்வரன் திருநள்ளாறில் ஒரு பரிவாரத்தெய்வம். இன்று சனீஸ்வரன் கோவில் என்று அழைத்தபடி தமிழகச் சனமெல்லாம் எள்ளெண்ணெயோடு அங்கே ஓடிக்கொண்டு இருக்கிறது.

பத்மநாதனின் முடிவை உறுதி செய்ய அவரது இன்னொரு ஆதாரத்தையே காட்டலாம். குருநாகல் மாவட்டத்திலுள்ள நிக்கவரெட்டியவுக்குப் பக்கத்தில் புதுமுத்தாவை எனும் கிராமம் ஒன்று உள்ளது. அங்கிருந்த ஐநூற்றுவன் பள்ளி எனும் பௌத்தவிகாரையில் “பொற்பெருஞ்செட்டியார்” என்ற பெயரில் வீற்றிருந்த முருகன், அங்கு பரிவார தெய்வமாகவே இருந்தவர் என்று கல்வெட்டுச் சான்று மூலம் நிரூபித்துள்ளார் பத்மநாதன். தமிழ்க்கல்வெட்டு கிடைத்துள்ள அவ்விகாரை, தமிழ்ப்பௌத்தர்களால் கட்டப்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது என்பது கூடுதல் தகவல்.

இலங்கையில் வெகுகாலத்துக்கு முன்பே முருகன் புத்தரின் காவல் தெய்வம் ஆகிவிட்டான். விஷ்ணு, முருகன், விபீஷணன், சமன் ஆகிய நான்கு பௌத்தக் காவல் தெய்வங்களையும் பற்றி 14ஆம் நூற்றாண்டு நிகாய சங்கிரகம் முதல் பல பௌத்தநூல்கள் குறிப்பிட்டுள்ளன. இன்றும் புத்தர் படிமங்களின் இருபுறமும் திருமாலும் முருகனும் அமைக்கப்படுவதை இலங்கையில் காணலாம். ஆக, கதிர்காமம் தொடர்பில் பத்மநாதன் சேரின் ஊகம் சரியாக இருக்கலாம் என்றே கொள்ளவேண்டி இருக்கிறது.

என்ன? அதிர்ச்சி தாங்கமுடியவில்லையா? அதெல்லாம் பத்தாது. இன்னொரு இடியை உங்கள் தலையில் இறக்கிவிட்டு ஹாயாக கடையை மூடலாம் என்று நினைக்கிறேன்.

2000களின் ஆரம்பத்தில் தாய்லாந்து அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. அதற்குக் காரணம் “ஜதுகம் ரமதேப்” என்ற தெய்வத்தின் உருவம் பொறித்த தாயத்து. கூட வைத்திருந்தால் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்று நம்பப்பட்ட அந்தத் தாயத்து, தாய்லாந்தின் பல விகாரைகளிலும் விற்கப்பட்டது. 2006இல் ஒரு விகாரையில் ஜதுகம் ரமதேப்பை விற்றபோது ஏற்பட்ட போட்டியிலும் நெரிசலிலும் சிக்கி ஒரு பெண் இறந்தார். வசதியில்லாதவர்கள் திருட்டில் இறங்க, ஜதுகம் ரமதேப் காரணமாக கொள்ளைச் சம்பவங்கள் பெருகின. அதிர்ஷ்டம் வந்ததோ இல்லையோ, தாய்லாந்து அரசுக்கு ஜதுகம்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# தமிழ்-முஸ்லிம் சமூகத்தவரிடையே நல்லிணக்கத்திற்கான வகிபாகம் பகுதி 2

## எழுத்தாளர்களின் பங்களிப்பும் பணிகளும்

*(அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பனில் நடைபெற்ற நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட உரை)*

இன நல்லிணக்கத்திற்கு நேர்ந்த பின்னடைவு

அது ஒரு புறமிருக்க, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதிவரை இலங்கை முஸ்லிம்களிடம் தமது இனம்பற்றிய வாதப்பிரதிவாதங்கள் எழவே இல்லை. அவர்கள் யாரென்பதுபற்றி அவர்களுக்கே தெளிவான ஒரு விளக்கமிருக்கவுமில்லை. இந்தச் சூழலிலேதான் பிரித்தாளும் பிரித்தானியரின் குடியேற்ற ஆட்சி அப்போதிருந்த இலங்கைச் சட்டசபையிலே இனவாரியாகப் பிரதிநிதிகளை நியமிக்கலாயிற்று. தமிழரின் பிரதிநிதியாக சேர் பொன்னம்பலம் இராமநாதன் அப்போது நியமனம் பெற்றிருந்தார். ஆனால், 1880 களில் முஸ்லிம்களுக்கும் ஒரு பிரதிநிதி அச்சட்டசபையிலே நியமனமாகக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எழுந்தது. இதை உணர்ந்த இராமநாதன், " முஸ்லிம்களும் தமிழர்களே, ஆனால் அவர்கள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுகிறார்கள் எனவும் அவர்கள் பேசுவது தமிழ், அவர்களின் சமூக சம்பிரதாயங்கள் எத்தனையோ தமிழரின் சம்பிரதாயங்களே" எனவும் வாதிட்டு அவரது வாதத்தின் அந்தரங்க நோக்கமாக முஸ்லிம்களுக்கெனத் தனிப்பட்ட பிரநிதித்துவம் தேவையில்லையென்ற கருத்துப் பொதிந்திருந்ததை முஸ்லிம்கள் உணர்ந்தனர்.

இதனால் கொதிப்படைந்த சித்தி லெப்பை, ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் போன்ற முஸ்லிம் தலைவர்கள் இனத்தால் முஸ்லிம்கள் சோனகரென்றும், அவர்களையே ஆங்கிலத்தில் மூஅர்ஸ் என்று அழைக்கின்றனரென்றும், அப்பெயர்களைப்பற்றிய ஒரு நீண்ட ஆய்வுக்கட்டுரையை எழுதி வெளியிட்டு அரசாங்கத்தின் கவனைத்தை ஈர்த்தனர். இந்தப் பெயர்களின் வரலாற்றுத் தோற்றத்தைப்பற்றிய சர்ச்சைக்குள் நான் இங்கு நுழைய விரும்பவில்லை.

அது இவ்வுரையின் தலைப்புக்குத் தேவையுமில்லை. இருந்தும் இப்போராட்டத்தில் முஸ்லிம்கள் வெற்றிகண்டு சட்டசபையில் தமது சமூகத்துக்கெனத் தனிப்பிரதிநிதி ஒருவரையும் பெற்றுக் கொண்டனர். ஆனால், துரதிஷ்டமாக இந்தச் சம்பவமே முஸ்லிம்களுக்கும் தமிழருக்குமிடையே குறிப்பாக தமிழ்த் தலைவர்களுக்குமிடையே முதன்முதலாக ஒரு கசப்புணர்வைத் தோற்றுவித்தது. இந்தக் கசப்புணர்வே அரசியல் உருவத்தில் படிப்படியாக வளர்ந்து இரு சமூகத்தாரிடையேயிருந்த நல்லெண்ணத்தைச் சிதைக்கலாயிற்று.

1915ஆம் ஆண்டு வெடித்த சிங்கள-முஸ்லிம் இனக்கலவரத்தில் சிறுபான்மை முஸ்லிம்கள் சிங்கள கடும்போக்கு தீயசக்திகளினால் தாக்கப்பட்டு பல உயிர்களையும் உடமைகளையும் இழந்தமையை வரலாற்றேடுகள் வெளிப்படுத்தியுள்ளன. அந்தக் கலவரத்துக்குத் தூண்டுதல் வழங்கிய பல பௌத்த சிங்களத் தலைவர்களை அரசு கைது செய்து சிறையிலடைத்ததையும் அதே வரலாறு சுட்டிக்காட்டுகின்றது. ஆனால், அந்தக் கைதிகளின் விடுதலைக்காக இங்கிலாந்து வரை சென்று வாதாடியவர் தமிழரின் தலைவர் இராமநாதன் என்பது முஸ்லிம்களுக்கு எத்தகையதொரு ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை அன்றையத் தமிழ்ச் சமூகம் உணரத் தவறியதால், ஏற்கனவே இராமநாதனால் உடைபட்ட தமிழர்-முஸ்லிம் நல்லிணக்கம் மேலும் சிதறுண்டது. பின்பு, 1930, 1940களில் இந்தியச் சுதந்திரப் போராட்டம் பாக்கிஸ்தான் பிரிவினைப் போராட்டத்தைத் தோற்றுவித்தபோது தமிழ்த் தலைவர்களும் அவர்தம் ஆதரவாளர்களும் காந்தி பக்தர்களாகமாறி காங்கிரசை ஆதரித்து நிற்க, முஸ்லிம் தலைவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் ஜின்னாவின் பக்தர்களாக நின்று முஸ்லிம் லீக்கை ஆதரித்தனர். இந்த நிகழ்வு தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருந்த உறவை தொடர்ந்து நலிவடையச் செய்தது.

நாடு சுதந்திரம் அடைந்த பின்பு சிங்களவர் - தமிழர் உறவு பாஷைப் பிரச்சினையால் வேகமாகச் சிதைவுறத் தொடங்குவதற்கும் முன்பாக எழுந்த முஸ்லிம் பாடசாலைப் போராட்டம் முஸ்லிம் - தமிழர் நல்லுறவை மேலும் சீரழித்தது. இது ஒரு கசப்பான போராட்டம். இன்றுவரை இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிபற்றி ஆராய்ந்த ஆய்வாளர்களெவரும் இந்தப் போராட்டத்தைப் பற்றிப் பூரணமாக ஆராயாதது ஒரு பெருங்குறையே. அதைப்பற்றி இங்கு விளக்கமளிக்க நான் விரும்பவுமில்லை. ஆனால், அப்போராட்டத்தத்தைத் தொடர்ந்து மேலும் பல பிரிவினைவாதங்கள் நமது இரு சமூகங்களுக்கிடையேயும் ஒன்றன்பின் ஒன்றாக வளரலாயின. உதாரணத்துக்குச் சில: இலங்கை வானொலியின் தேசிய தமிழ் ஒலிபரப்பில் முஸ்லிம்களுக்கென பிரத்தியேக நேரம் தேவை என்ற கோரிக்கை, காலையிலே இடம்பெற்ற நற்சிந்தனை நிகழ்ச்சியிலும் சைவ நற்சிந்தனை, கிறிஸ்த்தவ நற்சிந்தனை, இஸ்லாமிய நற்சிந்தனை என்ற பிரிவு ஏற்பட்டமை தமிழ் இலக்கியத்திலே முஸ்லிம் தமிழ் இலக்கியத்தை மட்டுமே முஸ்லிம் பாடசாலைகளில் படிப்பிக்கும் முயற்சி, என்றவாறு கலையையும் கல்வியையும் சிந்தனையையும் இனவாரியாகவும் மதவாரியாகவும் பிரித்ததனால் முஸ்லிம் - தமிழர் நல்லிணக்கம் ஓயாது சரிவடைந்தது.

இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல் அமைந்ததுதான் தமிழரதும் முஸ்லிம்களதும் அரசியல் போக்கு. தமிழரின் அரசியல் தலைவர்களும் முஸ்லிம்களின் அரசியல் தலைவர்களும் ஒருவரையொருவர் என்றுமே நம்பியதில்லை. தமிழரசுக் கட்சித்தலைவர்களோ இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர்களோ என்றுமே முஸ்லிம்களை சமநிலையில் வைத்துக் கணித்ததுமில்லை. அதேபோன்று முஸ்லிம் அரசியல்வாதிகளும் தமிழ்த் தலைவர்களைத் தமது இனத்தின் பரம எதிரிகளாகவே கருதினர். உதாரணத்துக்காக சில தலைவர்களின் வெளிப்படையான கூற்றுக்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்:

முஸ்லிம்களைப்பற்றித் தமிழ்த் தலைவர்களின் சில கூற்றுக்கள்:

"நீங்கள் (முஸ்லிம்கள்) தராசோடும் முழக்கோலோடும் வந்தீர்கள், நாங்களோ வாளுடன் வந்தோம். உங்களை எப்படி நாங்கள் சமநிலையில் வைத்துப் பேசலாம்."

"நீங்கள் அங்காடியில் வியாபாரம் செய்ய இடம் கேட்கிறீர்கள், நாங்கள் அரண்மனையிலே அந்தஸ்துக்காகப் போராடுகிறோம்."

"நீங்களோ மாளிகைகளிலே வாழ்ந்துகொண்டு உங்கள் பாடசாலைகளை மாட்டுத் தொழுவங்களாக வைத்திருக்கிறீர்கள். நாங்கள் மண்குடிசைகளிலே வாழ்ந்துகொண்டு எங்கள் பாடசாலைகளை மாளிகைகளாக வைத்திருக்கின்றோம்."

"ஆகவே உங்களை எவ்வாறு நாங்கள் சமநிலையில் வைக்கலாம்?"

தமிழரைப்பற்றி முஸ்லிம் தலைவர்களின் சில கூற்றுக்கள்:

"மூன்று தமிழனைத்தான் நம்பலாம்: இறந்தவன், இன்னும் பிறவாதவன், புகைப்படத்திலிருப்பவன்"

"தமிழன் ஒரு காபிர் (இறைவனை நிராகரிப்பவன்) காபிரின் உறவு கரண்டைக் காலுக்குக் கீழ."


"தமிழனையும் சிங்களவனையும் சேரவிட்டால் நாம் மூழ்குவோம், பிரித்துவைத்தால் நீந்துவோம்."

இக்கூற்றுக்களை மையமாகவைத்து வளர்ந்த இன உணர்வும் இன உறவும் எவ்வாறு நல்லிணக்கத்தை இரு சாரார்க்குமிடையே வளர்க்க முடியும்?

இவ்வாறு ஒருவரை மற்றவர் நம்பாமல் வாழ்ந்த சூழலில் வியாபாரத் திறனுள்ள முஸ்லிம்களும் அவர்களின் தலைவர்களும் பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து தமிழரின் கண்ணீரிலே அரசியல் இலாபம் தேடியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. 1950களிலிருந்து 2009 வரையுள்ள இலங்கையின் அரசியல் வரலாற்றில் முஸ்லிம்களின் அரசியல் அத்தியாயத்தினுள் இழையோடி நிற்கும் ஒரே உண்மை இதுதான். இதனைப் பூசி மெழுக வேண்டிய அவசியமில்லை.

ஆனாலும் இத்தனைக்கும் மத்தியிலே வடக்கிலும் கிழக்கிலும் அதுவும் குறிப்பாகக் கிழக்கில் வாழும் தமிழரையும் முஸ்லிம்களையும் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் பிட்டும் தேங்காய்ப் பூவும்போன்று நெருங்கி வாழ்கின்றனரென்று மேடைப் பிரசங்கிகள் வாயாரப் புகழ்வதையும் கேட்கிறோம். நெருங்கி வாழ்வது வேறு. இணங்கி வாழ்வது வேறு. இந்தப் பிரசங்கிகளிடம் நான் கேட்கும் கேள்வி இதுதான்: நீங்கள் குறிப்பிடும் பிட்டு வண்டுப் பிட்டா? குழல் பிட்டா? வண்டுப் பிட்டுக்குள் மாவும் தேங்காயும் கலந்திருக்கும். ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிப்பது கடினம். ஆனால், குழல் பிட்டில் தேங்காயும் மாவும் ஒன்றின்மேல் மற்றது ஓரத்தில் தொட்டுக் கொண்டிருந்தாலும் அவை உண்மையிலே பிரிந்துதான் இருக்கின்றன. கிழக்கிலே இதைத்தான் காண்கிறோம். மட்டக்களப்புக்குத் தெற்கே முஸ்லிம்கள் வதியும் காத்தான்குடி மாவென்றால் அதன் இருகோடியிலும் அமைந்துள்ள தமிழ்க் குடிகளின் ஆரையம்பதியும் கல்லடியும் தேங்காய்ப்பூ. முஸ்லிம்களின் சாய்ந்த மருதூரும் நிந்தவூரும் தேங்காய்ப்பூவென்றால் அவ்வூர்களுக்கு நடுவிலே சிக்கியிருக்கும் தமிழர்களின் காரைதீவு மாவு.

அதேபோன்று மட்டக்களப்புக்கு வடக்கே முஸ்லிம்களின் ஏறாவூர் தேங்காய்ப்பூ என்றால், அதன் இருமருங்கிலுமுள்ள தமிழர்களின் தன்னாமுனையும் செங்கலடியும் மாவு. இப்படி நெருங்கி வாழும் இரு இனங்களின் உறவு ஓர உறவா? ஆழ உறவா?


கலாநிதி அமீர் அலி

*( பொருளியல்துறை - மேர்டொக் பல்கலைக்கழகம், மேற்கு அவுஸ்திரேலியா)*

குழல் பிட்டு வண்டுப் பிட்டாக மாறவேண்டுமாயின் இன உறவு ஆழமானதாக மாறவேண்டும். அந்த உறவு பல பரிமாணங்களில் வடிவெடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, குடும்பங்களிடையே திருமணங்களும் விருந்துபசாரங்களும் இளைஞர்களிடையே இனங்கலந்த விளையாட்டுக் கழகங்களும், இசைக் குழுக்களும், கலாசார நிகழ்வுகளும், புத்திஜீவிகளிடையே இனங்கலந்த இலக்கிய மன்றங்களும், வாசகர் வட்டங்களும், சமூகசேவை இயக்கங்களும் என்றவாறு பல வடிவங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் கலந்துறவாடும்போதுதான் இன உறவும் நல்லிணக்கமும் ஆழமாகக் காலூன்றும். வடக்கிலும் கிழக்கிலும் இந்த வடிவங்கள் உண்டா? இல்லையென்றால் இவ்விரு சமூகத்தாரின் உறவு ஓர உறவே.

சந்தையிலே மட்டுமே இவ்விரு இனங்களும் சந்தித்து உறவாடுகின்றன. ஒரு முஸ்லிமோ தமிழனோ ஒரு பொருளையோ சேவையையோ இன்னொரு தமிழனுக்கோ முஸ்லிமுக்கோ விற்கிறான். மற்றவன் அதை வாங்குகிறான். அத்துடன் அவர்களின் உறவு அடுத்த சந்தைச் சந்திப்புவரை பூரணமாகிவிட்டது. முன்னர் குறிப்பிட்ட அர்த்தபுஷ்டியுள்ள உறவுப் பரிமாணங்களெல்லாம் தத்தமது சொந்த இனத்துக்குள்ளேதான் காணப்படுகின்றன. இதுதான் வடக்கிலும் கிழக்கிலும் இன்று நாம் காணும் யதார்த்தம். இந்த யதார்த்தத்தை மூடிமறைத்துவிட்டு, நாங்கள் பிட்டும் தேங்காய்ப்பூவும்போல் நெருங்கி வாழ்கிறோம் என்று பறையடிப்பதில் எந்த அர்த்தமுமில்லை. சந்தை உறவைக்கூட இனி வேண்டாமென்று இன்று ஓர் இயக்கம் வடக்கிலும் கிழக்கிலும் தலைவிரித்தாடுவதை யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும், கிரானிலும் காளான்கள்போன்று தோன்றிமறையும் சுவரொட்டிகள் அம்பலப்படுத்துகின்றன.

இன்று காணப்படும் ஓர உறவை ஆழ உறவாக்கினாலன்றி இவ்விரு சமூகங்களுக்கிடையேயும் நல்லிணக்கமென்பது வெறும் மேடைப் பேச்சாகத்தானிருக்கும். இந்த மாற்றத்தைக் கொண்டுவருவதில் எழுத்தாளர்களின் பணியும் பங்களிப்பும் அவசியமாகின்றது. இது காலத்தின் கட்டாயம்.

(தொடரும்)



# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 11


## கல்முனை (கரவாகுப்பற்று) பிரதேசசபை உருவாக்கம்.

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்படி முன்பு அமுலிலிருந்த கிராமசபைகளும் பட்டினசபைகளும் இல்லாதொழிக்கப்பெற்று, பதிலாக பிரதேசசபைகள் அறிமுகம் செய்யப்பெற்ற போது முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் ஒரு தனியான முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபையாக (கரவாகுப்பற்று) உருவாக்கப்பெற்றது. 1987ல் பிரதேச சபைகளின் அறிமுகம் அமுலுக்கு வரும் முன்னர் முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் கரவாகு தெற்கு (சாய்ந்தமருது) கிராமசபை, கல்முனை பட்டினசபை, கரவாகு வடமேற்கு (சேனைக்குடியிருப்பு) கிராமசபை, கரவாகு வடக்கு (பெரியநீலாவணை) கிராமசபை ஆகிய நான்கு உள்ளூராட்சி அலகுகளை உள்ளடக்கியிருந்தது.

உண்மையில் என்ன நடந்திருக்க வேண்டுமென்றால் முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் தரவைப் பிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரண்டாகப் பிரிக்கப் பெற்று தென்பகுதி கரவாகுத் தெற்கு அல்லது கல்முனைத் தெற்கு அல்லது கல்முனை வடக்கு என அழைக்கப்பெறும் வகையிலும் இரு தனித்தனியான பிரதேசசபைகளாக உருவாக்கப்பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு நடைபெற்றிருந்தால் கரவாகுதெற்கு முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச சபையாகவும் கரவாகு வடக்கு தமிழ்ப் பெரும்பான்மை பிரதேச சபையாகவும் உருவாகி 1960 ஆண்டிலிருந்தே கல்முனைத் தமிழர்கள் விடுத்துவரும் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்பெற்றிருக்கும். மாறாக முழுக் கல்முனை தேர்தல் தொகுதியும் அடங்கிய நிலப்பரப்பு தனியான முஸ்லிம் பெரும்பான்மைக் கரவாகுப்பற்று (கல்முனை) பிரதேச சபையாக்கப்பட்டது. இது கல்முனைத் தமிழர்களுக்கு இழைக்கப்பெற்ற ஓர் பாரிய அரசியல் பாரபட்சமாகும்.

கல்முனைத் தமிழர்கள் இப் புதிய தனியான கரவாகுப்பற்று பிரதேச சபை உருவாக்கத்தின் பின்னரும் கூட கரவாகுப்பற்றுப் பிரதேச சபையை தரவைப் பிள்ளையார் கோயில் வீதியை பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரண்டாகப் பிரித்து, தென் பகுதியை கரவாகுத் தெற்கு எனும் பெயரில் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசசபையாகவும் வட பகுதியைக் கரவாகு வடக்கு எனும் பெயரில் தமிழ்ப் பெரும்பான்மைப் பிரதேச சபையாகவும் உருவாக்கித்தரும்படி பல பொது அமைப்புக்களினூடாக அரசிடம் வலியுறுத்தி வந்தனர். குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் 1988 இலிருந்து ஆரம்பித்து, இது விடயமாகத் தொடர்ந்து முயற்சிகளை எடுத்தது. தனியான பிரதேச சபை உருவாக்க வேண்டுமானால் முதலில் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்றினை (தற்போதைய பிரதேச செயலாளர் பிரிவு) ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகள் விதித்த காரணத்தினால், முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் உள்ளடக்கியிருந்த நிருவாக அலகான கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவை மேலே குறிப்பிட்ட தரவைபிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரண்டு தனித் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக அதாவது இரு தனித்தனியான நிருவாக அலகுகளாக பிரிப்பதற்கான முன்னெடுப்புக்களை அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் 1988 நடுப்பகுதியில் மும்முரமாக ஆரம்பித்தது.

இந்த இடத்தில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் தோற்றம் - வளர்ச்சி – அதன் பணிகள் பற்றியும் கூறிச் செல்லவேண்டியுள்ளது.




### அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம்

1947 இலிருந்து 1977 வரை அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தங்களுக்கென தங்களால் தெரிவு செய்யப்பெற்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் இல்லாது இருந்தனர். இக்காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் வாக்குகள் இப்பிரதேசத்திலிருந்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யவே பயன்பட்டு வந்தன. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவாகும் வகையிலே இப் பிரதேசத்தின் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லைகள் வகுக்கப்பெற்றிருக்கவில்லை. அரசியல் செல்வாக்கு அற்றிருந்த அம்பாறை மாவட்டத் தமிழர்கள் சமூக பொருளாதார பின்னடைவுகளுக்கும் உள்ளானார்கள். இவர்கள் எதிர் நோக்கிய சமூக பொருளாதார அரசியல் குறைபாடுகள் எதுவும் தமிழர்களின் அரசியல் தலைமையை ஏற்றிருந்த தமிழரசுக் கட்சியாலும் அக்கறையோடு கவனிக்கப்பெறவில்லை. இந்த நிலையில் இம் மக்களின் சமூக பொருளாதார அரசியல் நலன்களை பேணவும் பாதுகாக்கவும் ஓர் நிறுவனம் அவசியம் என சில உறுப்பினர்களால் உணரப்பெற்றதன் பலனாக 1970களில் முற்பகுதியில் காரைதீவில் காலஞ்சென்ற அதிபர் கணபதிப்பிள்ளை (பெரிய கணபதிப்பிள்ளை வாத்தியார்) தலைமையிலே "அம்பாறை மாவட்டத் தமிழர்கள் மகாசபை" என்ற அமைப்பு உருவானது.

இந்த அமைப்பு பெரிய அளவில் ஸ்தாபன மயப்பட்டிருக்கவில்லை. இந்த அமைப்பின் செயற்பாடுளும் மிகவும் மந்த நிலையிலேயே காணப்பட்டன. இவ்வமைப்பின் செயற்பாடுகள் காரைதீவு கிராமத்துக்குள்ளே மட்டுப்படுத்தப் பெற்றதாகவே இருந்தன. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் காரைதீவில் பெரிய கணபதிப்பிள்ளை வாத்தியார் வீட்டில் அம்பாறை மாவட்டத்தின் தமிழ் கிராமங்களில் இருந்தும் முக்கியமான பிரமுகர்கள் கூடுவார்கள். அக்கரைப்பற்று தொகுதியிலிருந்து அறப்போர் அரியநாயகம், நடராஜா தர்மலிங்கம் போன்றவர்களும் அக்கரைப்பற்றிலிருந்து சிவஞானச் செல்வக்குருக்கள் போன்றவர்களும் மல்வத்தையிலிருந்து செல்லத்துரை போன்றவர்களும் சம்மாந்துறையிலிருந்து இராமநாதன் போன்றவர்களும் கல்முனையிலிருந்து நொத்தாரிஸ் கந்தையா, வேல்முருகன் மாஸ்ரர், இராசதுரை, ஏகாம்பரம் போன்றவர்களும் பிரசன்னமாயிருப்பர். இக்கூட்டங்களில் இப்பத்தி எழுத்தாளரும் தனது வாலிப வயதில் கலந்துகொண்டுள்ளார். இங்கே தந்தை செல்வா உட்படத் தமிழரசுக்கட்சித் தலைவர்களுடன் சந்திப்பு நடைபெறும். அம்பாறை மாவட்டத் தமிழர்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகள் விபரமாக தலைவரிடம் விளக்கப்பெறும். இப்பிரச்சனைகள் யாவும் முஸ்லிம் அரசியல் பிரமுகர்களால் ஏற்படுத்தப்பெறும் பிரச்சினைகளாகவே இருக்கும். தலைவர்களும் மிகக் கவனமாகக் காது கொடுத்து கேட்டுவிட்டு, வாக்குறுதிகளும் அளித்துவிட்டு, இறுதியில் ஒருதலைப் பட்சமான தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையையும் உபதேசித்துச் செல்வார்கள். ஆனால் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் நிலைமை மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் கதையாகிவிடும்.

ஆனால் 1976 தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது தமிழ் உறுப்பினர் ஒருவரும் தெரிவுசெய்யப்பெறக் கூடியவாறு பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதி ஆக்கப்பெற்றதால், அம்பாறை மாவட்டத் தமிழர்கள் 1977 தேர்தலில் முதன்முறையாகத் தங்களுக்கென்றோர் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். இதன் பின்னர் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் சிறிது முன்னேற்றம் முளைவிட ஆரம்பித்தது.

இந்த நிலையில் தங்கள் நீண்ட நாள் அபிலாஷைகளாக இருந்து வந்த அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கென தனியான தமிழ்ப் பெரும்பான்மை நிர்வாக அலகுகளையும் உள்ளூராட்சி அலகுகளையும் பெற்றுக்கொள்ளும் முயற்சிகள், பொத்துவில் தொகுதியின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் மூலம் முன்னெடுக்கப்பட்டன. இவற்றின் பயனாக திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 1980 இல் பொத்துவில் தொகுதியின் முன்னாள் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் அமரர் எம்.கனகரட்ணம் அவர்களின் பதவிக்காலத்திலும் காரைதீவு, ஆலையடிவேம்பு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் 1988 ல் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்களின் பதவிக்காலத்திலும் ஏற்படுத்தப்பெற்றன. இருப்பினும் காரைதீவுக்கு என ஓர் தனியான பிரதேசசபையையும், பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் தமிழ்ப் பெரும்பான்மை நிருவாக அலகுகளையும் உள்ளூராட்சி அலகுகளையும் நிறைவேற்றிக்கொள்ள மேலும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவென அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு ஓர் ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட அமைப்பின் தேவை அம்பாறை மாவட்டத் தமிழர்களிடையே இருந்த புத்திஜீவிகள் சிலரால் உணரப்பெற்றது. ஏற்கனவே காரைதீவை மையமாகக் கொண்டு 1970 களில் முற்பகுதியில் உருவான "அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசபை" செயலற்றுப் போயிருந்தாலும்கூட அம்பாறை மாவட்டத் தமிழர்களை ஐக்கியப்படுத்தவும் அவர்களின் சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளையும் தேவைகளையும் வெளிக்கொணர்ந்து, பரிகாரம் தேடவும் ஓர் நிறுவனம் தேவை என்ற எண்ணப்பாங்கின் முன்னோடியாக அது விளங்கிற்று. இத்தகையதோர் பின்புலத்தில் 1988இல் கல்முனையில் முன்னாள் அன்னமலை – நாவிதன்வெளி கிராமசபையின் தலைவர் பி.சின்னத்துரை அவர்களின் தலைமையில் "அம்பாறைமாவட்டத் தமிழர் மகாசங்கம்" உருவானது.

அம்பாறைமாவட்டத் தமிழர் மகாசங்கம் அதன் முதல் நடவடிக்கையாக கல்முனை மற்றும் சம்மாந்துறை (நாவிதன்வெளி) ஆகிய பிரதேசங்களில் தமிழர்களுக்கென தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை பொத்துவில் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. ரங்கநாயகி பத்மநாதனின் உதவியுடன் ஆரம்பித்தது. அப்போது இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளராகவும் இருந்தார்.

1988இன் பிற்பகுதியில் கல்முனைப் பகுதிக்கு விஜயம் செய்த ஐ.தே.கட்சியின் முன்னாள் செயலாளரும், அமைச்சருமான காலஞ்சென்ற ரஞ்சன் விஜயரட்ணவைச் சந்தித்து இது சம்மந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தி ஜனாதிபதிக்கு முகவரியிட்ட மகஜர் ஒன்றையும் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் அவரிடம் கையளித்தது. இவ்விடயத்தில் பொத்துவில் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (1981-1989) திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம் எடுத்த முயற்சிகளுக்கு உறுதுணையாகச் செயற்பட்டார். அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண அவர்கள் கொழும்பு திரும்பியதும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் காலஞ்சென்ற கே.டபிள்யூ. தேவநாயகம் மூலம் நடவடிக்கை எடுத்ததன் பயனாக கல்முனைத் தமிழ்ப் பிரிவிலும் (கரவாகு வடக்கு) சம்மாந்துறைத் தமிழ்ப் பிரிவிலும் (நாவிதன்வெளி) சுற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைத் (Circuit A.G.A'S Division) திறப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை 12.01.1989 திகதியிட்ட ஆ.'.ர்யு.6.'.89 இலக்கக் கடிதத்தின் மூலம் பணித்திருந்தது. எனினும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையீட்டினால் குறிப்பாகக் கல்முனைத் தொகுதியின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.மன்சூர் மற்றும் சம்மாந்துறைத் தொகுதியின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.அப்துல் மஜீத் ஆகியோரின் அரசியல் தலையீட்டினால் அவை நடைபெறாமல் தடுக்கப்பெற்றன. இதனையிட்டு மேற்கொண்டு குரல் எழுப்புவதற்கு அப்போது தமிழர்களுடைய அரசியல் தலைமையாக அங்கீகரிக்கப்பெற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் - பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. காரணம் அவர்கள் எல்லோரும் 1983ம் ஆண்டிலிருந்து பாராளுமன்றம் செல்வதில்லையெனக் கட்சியின் மன்னார் மாநாட்டில் ஏற்கனவே முடிவெடுத்திருந்தார்கள். அன்றியும் 1983 ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து அவர்களில் அனேகம் பேர் இந்தியாவில் - தமிழ் நாட்டில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் ஆட்சியில் அரச விருந்தினர்களாக அஞ்ஞாதவாசம் புரிந்து கொண்டும் இருந்தார்கள். இலங்கையில் இருந்திருந்தாலும் அம்பாறைமாவட்டத் தமிழர்களுக்காக அவர்கள் குரல் எழுப்பியிருப்பார்களா என்பதும் சந்தேகத்துக்குரியதுதான்.

--தொடரும்--



# பட்டறிவு

# தமிழ் மக்களுக்கான சிங்களப் பத்திரிகைகள்





தமிழ் மக்களின் விடுதலைக்காக இயங்கி பின் இன்று அழித்தொழிக்கப்பட்ட ஒரு பத்திரிகையைப் பற்றி தெரிந்து கொள்ளப் போகிறோம்.

இலங்கையின் ஊடகங்கள் இனத்துவ ஊடகங்களாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இலங்கையில் வெளிவரும் சிங்கள – தமிழ் தினசரிகளை எடுத்துப் பாருங்கள். ஒரே நாட்டில், அதே நாளில் வெளிவரும் பத்திரிகையின் செய்திகள், கட்டுரைகள் 90 சதவீதமாவது வேறுபட்டு இருப்பதைக் கவனிப்பீர்கள். இது ஒரு விசித்திரமாக இல்லையா? இரு வகை சிந்தனைப் போக்கையும், இரு வகை இரசனையையும், இருவகைத் தேவைகளையும், இரு வகை அபிலாசைகளையும் கொண்டதாக அவை இருப்பதை நீங்கள் காண முடியும்.

இனத்துவ கருத்தேற்றத்திற்கும் செய்திகளுக்கும், கட்டுரைகளுக்குமே அந்தந்த இனம் சார்ந்த மொழிப் பத்திரிகைக்கு சந்தையில் கிராக்கி உண்டு என்கிற நிலை தோன்றி நெடுங்காலமாகிவிட்டது. ஆக தேசியவாதம், இனவாதமாகவும், பேரினவாதமாகவும், சமயத்தில் பாசிசமாகவும் கையாள்வதே சந்தையில் போட்டிமிக்க விற்பனை உபாயமாக ஆகியிருக்கிறது.

இலங்கையின் சிங்கள தேசிய தினசரி – வாரப் பத்திரிகைகளை தவிர்த்துப் பார்த்தால் மாற்றுப்பத்திரிகைகள் இதிலிருந்து சற்று விலகி இருப்பதைக் கவனிக்க முடியும்.

அந்த வகையில் ஆரம்பத்தில் ராவய, யுக்திய, லக்திவ, ஹிரு போன்ற பத்திரிகளின் தோற்றம் மாற்று சிந்தனைகளுக்கான களத்தையும், தேசிய நாளிதழ்கள் பேசாத விடயங்களை துணிச்சலுடன் பேசும் பத்திரிகைகளாக வெளிவந்தன. அவை இடதுசாரி பின்னணியைக் கொண்டவர்களால் நடத்தப்பட்டதும் அதன் சமூக பிரக்ஞைத்தனத்திற்கு காரணம் எனலாம். இதில் ஹிரு பத்திரிகையின் தோற்றத்தைப் பற்றி மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு இன்னொரு காரணமுண்டு. ராவய, யுக்திய ஆகியவை ஆரம்பத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் தோற்றுவிக்கப்பட்டவை. லக்திவ போன்றவை ஊடக முதலாளிகளால் நடத்தப்பட்டவை. ஹிரு பத்திரிகை மக்களால் உருவாக்கப்பட்டது.

## உண்டியலில் சேர்த்த பணத்தில் உருவான பத்திரிகை

90 களில் தென்னிலங்கையில் வெளியான ”லக்திவ” பத்திரிகை ஒரு சிறந்த சிங்கள மாற்றுப்பத்திரிகையாக வெளிவந்துகொண்டிருந்தது. பல நல்ல இடதுசாரி பத்திரிகையாளர்கள் அதில் இயங்கினார்கள். 1987-1989 காலபகுதியில் ஜே.வி.பி அழிக்கப்பட்ட நிலையில் அதிலிருந்த தலைமறைவுக்குள்ளான ஜேவிபி தோழர்கள் இதில் இயங்கினார்கள். இதற்கூடாகத்தான் விமலசிறி கம்லத் என்று அன்று அழைக்கப்பட்ட இன்றைய விமல் வீரவன்சவும் இருந்தார். “லக்திவ”வை வெளியிட்டது ஒரு வியாபார நிறுவனம். பிரேமதாசவுக்கு சிம்ம சொப்பனமாக இருந்த அந்த பத்திரிகையின் முதலாளிக்கு பிரேமதாசவின் பினாமிகளுக் ஊடாக அழுத்தம் கொடுக்கப்பட்டது.

ஆசிரியர் குழுவில் இருந்தவர்கள் சளைக்காமல் அந்த முதலாளியோடு முரண்பட்டுக்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்தார்கள். திடீரென்று ஒரு நாள் ஆசிரியர் குழுவுக்குத் தெரியாமல் அச்சகத்தில் வைத்து முக்கிய சில அரசியல் பக்கங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக விளம்பரப் பக்கங்களை நிரப்பி வெளியிட்டு விட்டார். அடுத்த நாள் அந்த ஆசிரியர் குழு முழுவதுமாக வெளியேறியது. இலங்கையின் வரலாற்றில் முழு ஆசிரியர் குழுவும் ஒரேயடியாக அவ்வாறு வெளியேறி முதல் சந்தர்ப்பம் என்று தான் கூற வேண்டும். சில மாதங்களில் அப்பத்திரிகையை வேறு வழியின்றி முதலாளி மூடிவிட்டார்.

வெளியேறியவர்கள் இலட்சிய வாதிகளாக மட்டுமன்றி ஏழ்மைக்குப் பழக்கப்பட்ட பத்திரிகையாளர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் சம்பளத்துக்காக பணியாற்றும் பத்திரிகையாளர்களாக இருக்கவில்லை. மாறாக பத்திரிகை என்பதை அவர்களின் அரசியல் ஆயுதமாக வரித்துக்கொண்டார்கள்.

வேறொரு பத்திரிகையை தொடக்குவதற்காக அவர்கள் மக்கள் முன் சென்றார்கள். வீதி வீதியாக உண்டியலில் பணம் சேர்த்தார்கள். மக்கள் கலைவிழா என்கிற மாபெரும் நிகழ்ச்சியொன்றை பெரும் மைதானமொன்றில் நடத்தினார்கள். பல மக்கள் இயக்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இடது சாரி இயக்கங்கள் பல பூரண ஆதரவு வழங்கின. அது மாபெரும் விழாவாக அமைந்தது.

நம்புங்கள் அந்த உண்டியல் பணத்தைக் கொண்டு 1993 செப்டம்பர் 26 அன்று ”ஹிரு” என்கிற பெயரில் ஒரு பத்திரிகையைத் தொடங்கினார்கள். அந்தப் பத்திரிகை தான் தலைமறைவு ஜேவிபியின் தளமாக இருந்தது. அப்போது இரகசியமாகவும், தலைமறைவாகவும் இருந்த பலர் சந்திக்கும் இடமாகவும், ஜேவிபியை மீள கட்டியெழுப்பும் தளமாகவும் அந்த அலுவலகம் இயங்கியது. பின்னாளில் ஜேவிபியின் தலைவர்களாக அறியப்பட்டவர்கள் ஆரம்பத்தில் சந்தித்துக்கொள்ளும் இடமாக அது இருந்தது. அந்த அலுவகத்துக்குத் தேவையான தளபாடங்களை பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் செய்து அனுப்பினார்கள்.

எங்கள் “சரிநிகர்” பத்திரிகையின் அலுவலகம் அமைந்திருந்த கொள்ளுப்பிட்டி அலோ அவனியுவுக்கு அடுத்தத் தெருவில் தான் ஹிரு அலுவலகம் இருந்தது. பின்னேரங்களில் நான் அங்கே போய் விடுவேன். அங்கே வரும் ஆதரவாளர்கள் பலர் என்னைப் போலவே போகும் போது அரிசி, பால்மா, சீனி, பருப்பு, கருவாடு, தேயிலை போன்றவற்றை கொண்டுசென்று வழங்குவார்கள். அங்கேயே சமையலை முடித்துக்கொண்டு அங்கேயே தங்கி வாழ்ந்த பத்திரிகையாளர்கள் இருந்தார்கள். விமல் வீரவன்சவும் அங்கே தான் தங்கினார். பின்னேரங்களில் புரட்சிகர பாடல்கள் மட்டுமன்றி ஜனரஞ்சக பாடல்களையும் பாடி மகிழ்வோம். விமல் வீரவன்ச தமிழ் பாடல் பாடுவார் என்று கூறினால் இன்று பலர் வியப்பார்கள். நான் அதை அருகில் அமர்ந்து கேட்டு லயித்திருக்கிறேன். ரோஹித்த பாஷன கிட்டார் அடிப்பார். இரவு எங்களுக்கு பத்திரிகைகள் பாயாகும். பத்திரிகைக் கட்டுகள் தலையணையாகும். சில நாட்கள் கொள்ளுப்பிட்டி காலிவீதியில் நடந்தே திரிந்து வீதியோர மலிவு விலை மதிய உணவைக் கண்டுபிடித்து வேண்டி வந்து பலரும் பங்குபோட்டு உண்டிருக்கிறோம். நானும் விமல் வீரவன்சவும் சேர்ந்து எழுதிய தமிழ் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு பிரச்சினைகள், கைது, காணாமல் போதல் பற்றிய கட்டுரை ஒரு முறை இரண்டு பக்க நடுக்கட்டுரையாக வெளிவந்தது.

## ‘சிங்கள கொட்டிய’ என்று அழைக்கப்பட்டதும் இவர்களே!

ஹிரு பத்திரிகை தான் ஜேவிபியை 1993இல் அரசியலுக்கு மீண்டும் இழுத்துக் கொண்டு வந்து சேர்த்தது. ஜே.வி.பிக்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பிரச்சினை பற்றிய விவாதம் நடந்தது. கொள்கை ரீதியாக எடுத்து முடிக்க வேண்டிய முக்கிய விவாதமாக அது இருந்தது.

சுயநிர்ணய உரிமைக்கு எதிராகவும், ஆதரவாகவும் அணிகள் பிரிந்தன. எதிரான அணியில் விமல் வீரவன்ச போன்றோர் இருந்தார்கள். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக இருந்த அணி கட்சியில் இருந்து வெளியேறியது. வெளியேறியவர்களில் பெரும்பாலானோர் ”ஹிரு” ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

“தமிழ் மக்களின் விடுதலையின்றி இலங்கையில் புரட்சிகர மாற்றம் சாத்தியமில்லை” என்கிற முடிவில் அவர்கள் இருந்தார்கள். ஜே.வி.பிக்கு

என்.சரவணன்

இருந்த பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பகுதியினர் ”ஹிரு”வுடன் கைகோர்த்து இயங்கினார்கள்.

1996இல் நிதி நிருக்கடி காரணமாக சில மாதங்கள் நின்றுபோனது. பின்னர் சஞ்சிகையாக வெளிவந்தது. சஞ்சிகையாக வெளிவந்த போது அது ஒரு தத்துவார்த்த விவாதங்களை நிகழ்த்தும் முக்கிய பத்திரிகையாக வடிவமெடுத்தது. குறிப்பாக மாக்சியத்தை இன்றைய நிலையில் எப்படி கையாள்வது என்பது பற்றிய சர்வதேச விவாதங்களை இலங்கை உதாரணங்களோடு உரையாடினார்கள்.

93க்குப் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அதிகமாக சிங்கள மக்களுக்கு வெளிக்கொணர்ந்த பத்திரிகையாக ”ஹிரு” விளங்கியது. தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள் மற்றும் அடிமட்ட மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்தார்கள். அவர்கள் பல மக்கள் இயக்கங்களையும், முன்னணிகளையும் உருவாக்கினார்கள். பத்திரிகையாளர்களின் உரிமைக்காக பூஷிக் பரம்பரை (Fucik Generation) என்கிற அமைப்பை உருவாக்கினார்கள். (ஜூலியஸ் பூசிக் செக்கோஸ்லோவேகியா கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். நாசிகளால் சிறையில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்.) சந்திரிகா அரசாங்கத்தின் போது ஊடகவியலாளர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட அநீதியை எதிர்த்து “ஊடக சுதந்திரம்” கொல்லப்பட்டதை குறியீடாகக் கொண்டு ஒரு சவ ஊர்வலத்தை இந்த அமைப்பு நடத்தியது. ஊடக சுதந்திரத்திற்கான அப்படியொரு பெரிய ஊர்வலத்தை நான் இலங்கையில்

தொடர்ச்சி... (பக்கம் -23 )



தமிழ்மொழி

# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 10

## பழையன கழிதலும் புதியன புகுதலும்

தொன்மையானது. அதற்கு இலக்கிய இலக்கண பாரம்பரியமும் இருக்கிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் நன்னூலில் ஒரு வசனம் வருகிறது. “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே“ என்ற அந்த வரிகள் தமிழ்மொழியின் பரிணாம வளர்ச்சியை இனம் காண்பிக்கின்றது.




தொல்காப்பியர் காலம், சங்க காலம், சங்கமருவிய காலம் நவீன இலக்கிய காலம் என்று காலகட்டங்களை பிரதிபலித்தவாறு தமிழ்மொழி வளர்ந்து இன்று புதியவடிவம் பெற்றுள்ளது.

இந்த “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே“ வசனம், மொழிக்கு மாத்திரம் பொருத்தமானது அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் களனி கங்கை தீரத்தில் பல மாற்றங்கள், குறிப்பாக அந்தப்பிரதேச மக்களின் அரசியல் சமூக, பொருளாதாரத்திலும் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்திலும் நேர்ந்து வருகின்றன. இதுபற்றி இந்த அங்கத்தில் பார்ப்போம்.

களனி கங்கை கொழும்பை நெருங்கும் பிரதேசத்திலிருந்து, கிராண்ட்பாஸ் என்ற இடத்தை அவதானித்தால் நாட்டின் பொருளாதாரத்திற்கு வளம் சேர்த்த மூவினத்தவர்களும் இரண்டு நூற்றாண்டுக்கும் மேலாக அங்கு செறிந்து வாழ்ந்திருக்கும் செய்திகளையும் அறியமுடிகிறது.

களனி கங்கையிலிருந்து கட்டிடங்கள், வீடுகள் நிர்மாணிப்பதற்குத் தேவையான மூலப்பொருள் ஆற்று மணல் கிடைக்கிறது. அதன் கரையோரங்களில் கீரை உற்பத்தி நடக்கிறது. அதனையடுத்து தலைநகர வாசலுக்கூடாக பிரவேசித்தால், பல தனியார் துறை தொழில் நிறுவனங்கள் நீண்ட நெடுங்காலமாக அந்தப்பிரதேசத்தில் இயங்கிவருவதையும் அவற்றை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்துவந்திருப்பதையும் அறிய முடிகிறது.

அவற்றில் சில நிறுவனங்களை வெளிநாட்டுக்கம்பனிகள் ஆரம்பித்து நிருவகித்துள்ளன. முக்கியமாக கொழும்பு கிராண்ட்பாஸ் வீதியில் அமைந்துள்ள லிவர் பிரதர்ஸ் என்ற சவர்க்காரம், வாசனைசோப், உட்பட ஆடை சுத்திகரிப்பு தூள் முதலானவற்றை உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனம் பிரபலமானது.

எமது தாயகத்தில் எமது முன்னோர்களிடத்தில் பல புதிய உணவு நாகரீகத்தையும் கலாசாரத்தையும் நடை, உடை, பழக்கவழக்கங்களையும் அறிமுகப்படுத்தியவர்கள் வெளிநாட்டினரே! அந்நியரின் ஆக்கிரமிப்பு பலதுறைகளிலும் நூழைந்து, போர்ட் சிட்டி வரையில் நீடித்துவருகிறது. சவர்க்காரத்தின் தொடக்க காலத்தை ஆராயப்புகுந்தவேளையில் பின்வரும் தகவல்கள் கிடைக்கின்றன.

சவர்க்காரமும் அந்நியரிடமிருந்து எமக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும். கிறிஸ்துவுக்கு முன்னர் 2800 ஆண்டளவிலிருந்தே சவர்க்காரம் அறிமுகமாகியிருக்கிறது. சவர்க்காரத்தை கி.மு. 2800 ஆண்டுகளுக்கு முன்னரே பாபிலோனியர்களும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ரோமானியர்களும் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் இருப்பதாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஐரோப்பாவில் நடுத்தர வயதினர் இதனைப் பயன்படுத்தத் தடை இருந்தாலும், 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஒலிவ் எண்ணெய்யை மூலப் பொருளாகக் கொண்ட சவர்க்காரங்கள் விற்பனைக்கு வந்த பிறகு அனைவருக்கும் பயன்பாட்டிற்கு வந்தது.

ஆங்கில ஆதிக்கத்தின் கீழிருந்த அமெரிக்க மக்கள் தங்கள் வீடுகளிலேயே சவர்க்காரங்களைச் செய்து பயன்படுத்திக் கொண்டனர். ஆங்கில ஆதிக்கம் முடிவுக்கு வந்த போது சிறு முதலீடுகளில் செய்து கொண்டிருந்தவர்கள் அதை தொழிற்சாலையாக மாற்றி உற்பத்தியை பெருக்கினர். இரண்டாம் உலகப்போரில் ஏற்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக துணி துவைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்திய பணக்காரர்கள் கூட இந்த சவர்க்காரங்களை வாங்க நேரிட்டது. இந்தக் காலகட்டத்தில் இதன் விற்பனை அதிகரித்தது.

இலங்கையில் போர் நெருக்கடி உக்கிரமடைந்த காலப்பகுதியில், வடபகுதி






மீது அன்றைய அரசுகள் பொருளாதாரத் தடைகளை விதித்தபோது, அதில் சவர்க்கார உற்பத்திகளும் இடம்பெற்றன. மின்சார விநியோகம் தடுக்கப்பட்டவேளையில் துவிச்சக்கரவண்டிகளை கையால் இயக்கவைத்து டைனமோ மூலம் மின் இணைப்பு பெற்று, வானொலி கேட்ட அந்தப்பிரதேச மக்கள், எமது முன்னோர்களின் வழியைப்பின்பற்றி, பனங்களியை பயன்படுத்தினார்கள்.

உடலையும், உடுத்தும் ஆடைகளையும் தூய்மைப்படுத்துவதற்கு தேவைப்பட்ட சவர்க்காரங்களை உற்பத்தி செய்த கொழும்பு லிவர் பிரதர்ஸ் எவ்வாறு பல குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியதோ, அதேபோன்று கிராண்ட்பாஸ் வீதிக்கு சமாந்தரமாக மற்றும் ஒரு திசையிலிருந்த பிரின்ஸ் ஒ.ஃப் வேல்ஸ் வீதியில் ஒரு தொழிற்சாலை இயங்கியது.

ஆனால், அங்கிருந்து உற்பத்தியான பொருளை பாவித்தவர்கள் பெரும்பாலும் ஆண்கள்தான். இலங்கையில் சிகரட் அறிமுகமாவதற்கு முன்னர் மக்களின் பாவனையிலிருந்தவை சுருட்டும் பீடியும்.

இந்தியாவில் கேரளா மாநிலத்திலிருந்து வந்தவர்களினால் முதலில் குடிசைக் கைத்தொழிலாகத்தொடங்கிய இந்த வர்த்தகப் பொருளாதாரம் படிப்படியாக கம்பனி முறைக்கு மாறியது.

கிராண்ட்பாஸ் வீதியிலிருந்து சண்லைற், லை.ஃப்போய், லக்ஸ், றின்சோ முதலான மக்களின் பயன்பாட்டுக்கான உற்பத்திகள் பெருகியது. பிரிண்ஸ் ஒ.ஃப் வேல்ஸ் வீதியில் தொடங்கப்பட்ட ராஜா பீடி க்கம்பனியும் அக்காலத்தில் பிரசித்தமானது.

ராஜா பீடி, யானை பீடி, கல்கி பீடி, செய்யது பீடி, பவுண் பீடி முதலான பீடிவகைகள்

ரஸஞானி

தலைநகரத்திலிருந்து நாடெங்கும் பரவியிருக்கிறது. கொழும்பு வடக்கிலும், மத்தியிலும் வாழ்ந்த மூவின மக்களில் ஏழைகளும் மத்தியதர வர்க்கத்தினரும் இருந்தமையால் அவர்களின் மத்தியில் பீடியும் சுருட்டும் புகைப்பவர்களின் எண்ணிக்கையும் பெருகியிருந்தது.

பீடி சுற்றும் தொழிலை வீட்டிலிருந்தும் செய்யக்கூடியதாக இருந்தமையால், பெண்களும் இதில் ஈடுபடுவதில் ஆர்வம் காண்பித்தனர்.

ஏழை, மத்திய தரவர்க்கத்தினரின் குறைந்த பொருளாதார வளத்திற்கு பீடியும் சுருட்டும்தான் கட்டுப்படியாகியிருந்தமையால் குறிப்பிட்ட பீடிக்கம்பனிகள் கிராண்ட்பாஸ் பிரதேசத்தை சுற்றியிருந்த வீதிகளில் தோன்றியிருந்தன.

மற்றும் ஒரு வீட்டுக்கைத்தொழிலும் அக்காலத்தில் இந்தப்பிரதேசத்தில் பிரசித்தமானது. பழுப்பு நிறக்காகிதத்தினால் தயாரிக்கப்படும் பேக்குகளை (பைகளை) வீடுகளிலிருந்தே தயாரித்துக்கொடுக்கும் வேலைகளில் பெண்கள் ஈடுபட்டனர்.

அண்மைக் காலங்களில் இலங்கை உட்பட உலக நாடுகள் பலவற்றில் பொலித்தீன் பைகளின் பாவனை படிப்படியாக குறைக்கப்படுகிறது. பொலித்தீன் மண்ணில் உக்கிப்போவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தேவைப்படும் என்று விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.

எமது மக்களிடம் பொலித்தீன் பைகளின் பாவனை அறிமுகமாவதற்கு முன்னர் அவர்களின் கைகளில் இருந்தது காகிதத்தில் தயாரிக்கப்பட்ட பேக்வகைகள்தான்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் பல ஏழை, மத்திய தரக்குடும்பங்களில் பெண்களும் சிறுவர் சிறுமியரும் பழுப்பு நிறகாகிதங்களில் பேக் செய்து கொடுத்து வருமானம் தேடினார்கள்.




பின்னாளில் வெளிநாடுகள் அறிமுகப்படுத்திய பிளாஸ்ரிக் பைகளை உற்பத்தி செய்வதற்கு பெரும் வர்த்தக நிறுவனங்களுக்கு அரசின் நேரடி அங்கீகாரமும் ஆதரவும் இருந்தமையால், பல பொலித்தின், பிளாஸ்ரிக் தொழிற்சாலைகளும் எங்கள் தேசத்தில் பெருகின.

அந்த மாற்றம் ஏழைகளின் வயிற்றில்தான் அடித்தது.

கிராண்ட்பாஸ் வீதிக்கு அருகிலிருக்கும் ஆமர்வீதியில், மஸ்கன்ஸ் என்ற பெரிய கம்பனி இருக்கிறது. இங்கிருந்து அஸ்பஸ்டஸ் கூரைகள் தயாரிக்கப்பட்டன.

தென்னோலையால் வேயப்பட்ட குடிசை வீடுகளில் வாழ்ந்த மக்கள் ஓட்டுவீட்டு கலாசாரத்திற்கு மாறி, பின்னர் அஸ்பஸ்டஸ் கூரை வீடுகளுக்கு பழக்கப்பட்டனர். அண்மைக்காலத்தில் அஸ்பஸ்டஸின் மூலப்பொருட்கள் மனித உயிரையே குடிக்கும் வல்லமை பொருந்தியது என்று மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் கண்டுபிடித்த பின்னர் வெளிநாடுகளில் அதன் பாவனை படிப்படியாக குறைந்தது. புற்றுநோய் வருவதற்கும் அஸ்பஸ்டஸ் ஒரு காரணம்தான் என்ற உண்மை காலம் கடந்து தெரியவருகிறது! இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த மாந்தரை படிப்படியாக மாற்றியது அந்நிய நாகரீகமும் அந்நிய உற்பத்திகளுமே என்றால் மிகையல்ல. அந்த மாற்றங்களில் நன்மையும் இருந்தது. தீமையும் விளைந்தது.

இன்று பீடி, சுருட்டுக்கைத்தொழில் நலிவடைந்துவிட்டன. அந்த இடத்தில் கேரள கஞ்சாவும், ஹெரோயினும் புகுந்து தேசத்தையே நாசமாக்கிக்கொண்டிருக்கின்றன. இதனை கட்டுப்படுத்துவதற்கு மீண்டும் மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆலோசிக்கிறது.

காகிதாதிகளினால் தயாரிக்கப்பட்ட பேக்குகளின் பாவனை நலிவடையச்செய்யப்பட்டு, பொலித்தீன் பேக்குகளின் பாவனை வந்து, இன்று அதனையும் தடுக்கவேண்டிய கால மாற்றம் வந்துவிட்டது. ஓலைக்குடிசையிலும் ஓட்டு வீட்டிலும் வாழ்ந்த மக்கள், அஸ்பஸ்டஸ் கூரைக்குச்சென்று மீண்டும் ஓட்டுவீடுகளையும் ஓலைக்குடில்களையும் நாடிச்செல்லும் காலம் வரலாம்...!

இனி என்ன சொல்வீர்கள்...? “ பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே“ என்ற மூதுரைக்கு ஏற்ப எமது மக்களின் பொருளாதாரமும் வாழ்க்கை முறைகளும் மாறிக்கொண்டிருக்கின்றன!

(தொடரும்)

# அமைதியான நதி



எம் .எஸ் .வி. மறைந்து மூன்று வருடங்கள் ஆகின்றன .

எம்.எஸ் .வி .இசையமைத்த பாடல்கள்தான் ஒரு காலத்தில் என்னுடைய தேவாரங்களாகவும் அவற்றில் ஒலித்தவைதான் என் பதின் பருவத்தின் திருவாசகங்களாகவும் இருந்தன. அவர் தந்த பாடல்களில் இன்றும் என் காலடிச் சுவடுகளைக் காண்கிறேன். இந்தக் கோடையின் கொடூரத்திலும் “அவரது நதி” இன்னமும் வற்றாமல் ஓடிக் கொண்டிருக்கிறது.

இரட்டையரின் வருகையின் பின்னர் தமிழ்த் திரையிசை ஒரு புது வெளிக்குள் பிரவேசித்து புதிய அலையைக் கண்டது. இயற்கையிலேயே திறமையும், விடா முயற்சியும், அர்ப்பணிப்பும், உற்சாகமும், சுறுசுறுப்பும், நகைச்சுவையுணர்வும் கொண்ட எம்.எஸ்.வி அவர்கள் ராமமூர்த்தியையும் இணைத்துக் கொண்டு அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தார். ராமமூர்த்தி அவர்கள் வயலினிசையில் தேர்ந்ததொரு கலைஞர். விஸ்வநாதனின் இஷ்ட வாத்தியமோ ஹார்மோனியம். ஆனால் வயலினதும், ஹார்மோனியத்தினதும் வெறும் கூட்டாக இந்த இரட்டையரின் சிருஷ்டித்துவத்தை மட்டுப்படுத்தி விடக் கூடாது. தபேலாவின் தாளங்களுக்குள், ராக ஆலாபனைக்குள் சிக்கிக் கொண்டிருந்த தமிழ்த் திரையிசையுலகினுள். புதுமையான முன்னறிந்திராத வாத்தியங்கள் ஒலித்தன. வழி வழியாகப் பயன்படுத்தப்பட்டுவந்த வாத்தியங்களின் இடத்தை எக்கோர்டியன் [Accordion ], பிக்கோலோ[Piccolo], மெலோடியன்[Melodian], சைலோபோன் [Xylophone], ட்யூபா [Tuba], பொங்கோஸ் [Bongos], பேஸ் கிட்டார் [Base Guitar] , கீ போர்ட்[Key board], ட்ரம்ஸ்[Drums] ஆகியவை பிடித்துக் கொண்டன. ஹார்மோனியம், வயலின் என்பவை அழகுக்கு அழகூட்டும் விதத்தில் பயன்படுத்தப்பட்டன. அனுபவம் புதுமை..அவரிடம் கண்டேன் , நாணமோ , அன்புள்ள மான் விழியே பாடல்களின் நடுவே வரும் வயலின் இசைத் துணுக்குகளை [bit] உதாரணங்களாக சொல்லலாம்.

இந்த வாத்தியங்களின் ஓசை பாடல் வரிகளைக் கபளீகரம் செய்யாமல் பார்த்துக் கொண்டமை இரட்டையரின் இன்னொரு சிறப்பம்சம். அவர்கள் ராகங்களுக்குள்ளும் தாளங்களுக்குள்ளும் பலவந்தமாகப் பாடல்களை இழுத்து வந்து சிறை வைக்கவில்லை அவர்களின் பாடல்களில் தன்னிச்சையாக அபூர்வமான ராகங்கள் வந்து ஒட்டிக் கொண்டன. வெவ்வேறு வீச்செல்லைகள் கொண்ட குரல்கள் உணர்ச்சி ததும்பப் பயன்படுத்தப்பட்டன. பாடலுக்குப் பாடல் வர்ண ஜாலம் காட்டிய வானம் அந்த இசை. நம் மனங்களில் அது உற்சாகத்தைப் பீறிடச் செய்தது. சோகத்தில் விம்மச் செய்தது. உலகின் மாயையை உணரச் செய்தது. சிரிக்க வைத்தது. சிந்திக்க வைத்தது. மரபு வழி இசையுடன், மேற்கத்திய இசையையும் இணைத்து வழங்கிய அந்தக் கலப்பிசை வெகுஜன ரசனைக்கு ஈடு கொடுத்தது. இந்த இசைக்கு இசைவாக பின்னணிப் பாடகர்கள், பாடலாசிரியர்கள், திரையில் தோன்றும் கலைஞர்கள் எல்லோருமே மாற வேண்டியிருந்தது. தமிழ் திரையிசையில் கவித்துவம், பொருத்தமான வாத்தியங்களின் இசை, குரல்களின் இனிமை எல்லாமே பின்னிப் பிணைந்திருந்த பொற்காலம் அது. கர்நாடகம், ஹிந்துஸ்தானி, நாட்டுப் புற இசை, கவாலி, பாங்க்ரா, ரொக் எனப் பல விதமான பாணிகளையும் இந்தக் கூட்டணி தங்கள் பாடல்களுக்குப் பயன்படுத்தி வெற்றி கண்டிருக்கிறது.

இந்த இரட்டையர்கள் ஒரு கட்டத்தில் பிரிய நேர்ந்தது. இவர்களில் யார் அதி சிறந்த திறமைசாலி என்ற கேள்வியும் கூடவே எழுந்தது. ஒரு பறவையின் இரண்டு இறக்கைகள் அவர்கள். பின் தனித் தனி வானத்தைத் தேடினார்கள். அவ்வளவே!

இந்தப் பிரிவுக்குப் பின்னர் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் விஸ்வநாதன் அவர்கள் தன் ஸ்தானத்தைத் தக்க வைத்துக்கொண்டதை வைத்தோ, டி .கே. ராமமூர்த்தி அவர்கள் தாக்குப் பிடிக்க இயலாமல் சரிவு கண்டதைக் கொண்டோ நாம் தீர்ப்பை எழுதி விட முயல்வது சரியாகாது. ஒருவரின் நீடித்த இருப்பையும் மங்காப் புகழையும், இன்னொருவரின் சரிவின் பின்னரான ஒதுக்கத்தையும் தீர்மானிக்கும் காரணி வெறுமனே திறமை மட்டும் அல்ல. இதன் பின்னே உள்ள கூட்டல் -கழித்தல்கள், கொடுக்கல் -வாங்கல்களுமாகும்.

எது எப்படியோ ,விஸ்வநாதன்-ராமமூர்த்தி ஆகியோர் சம்பந்தப்பட்ட திரைப்படப் பாடல்களின் பட்டியல் ஒன்றை இன்று நாம் பார்க்கும் போது 1960 இலிருந்து 1965 வரையில் வெளிவந்த

**உமா வரதராஜன்**

பாடல்கள் பிரத்தியேகமான ஓர் ஈர்ப்பை உருவாக்குவதை உணரலாம். 1976 இல் நிகழ்ந்த இளையராஜாவின் வருகையால் எம் .எஸ் .வி சோர்ந்து போனார் எனச் சொல்வதற்கில்லை. இளையராஜாவின் ஆதிக்கம் மேலோங்கியிருந்த காலத்திலும்




கூட ஆர்ப்பாட்டம், ஆரவாரம், விளம்பரம் எதுவுமின்றி எளிமையின் அழகுடன் விஸ்வநாதன் அவர்கள் வழங்கிய பாடல்கள் பல இருக்கின்றன.

எனக்கொரு காதலி இருக்கின்றாள், மார்கழிப் பனியில் [முத்தான முத்தல்லவோ], தென்றலுக்கு என்றும் வயது [ஐபயணம்], விண்ணுலகில் [புனித அந்தோனியார் ], நாதமெனும் கோயிலிலே [மன்மதலீலை ], ஆடி வெள்ளி தேடி உன்னை, வசந்தகால நதிகளிலே [மூன்று முடிச்சு ], நான்கு பக்கம் வேடருண்டு [அண்ணன் ஒரு கோயில் ], காற்றுக்கென்ன வேலி ?[அவர்கள்], வான் நிலா நிலா [பட்டினப் பிரவேசம்], பொங்கும் கடலோசை [மீனவ நண்பன்] அந்தமானைப் பாருங்கள் [அந்தமான் காதலி ], இலக்கணம் மாறுதே, கம்பன் ஏமாந்தான் [நிழல் நிஜமாகிறது ], பாரதி கண்ணம்மா, காத்திருந்தேன் [நினைத்தாலே இனிக்கும்], மௌனத்தில் விளையாடும் மனசாட்சியே [நூல்வேலி ], சிப்பியிருக்குது, முத்துமிருக்குது [வறுமையின் நிறம் சிவப்பு ], கவிதை அரங்கேறும் நேரம், தென்றலது என்னிடத்தில் [அந்த ஏழு நாட்கள் ], ராகங்கள் பதினாறு [தில்லுமுல்லு ], நீ வருவாய் என [சுஜாதா ]விடிய விடிய சொல்லித் தருவேன் [போக்கிரி ராஜா ]... இப்படிப் பல பாடல்களைக் குறிப்பிடலாம். (1982 க்குப் பின்னர் எம்.எஸ்.வி. புத்தெழுச்சியுடன் உருவாக்கிய எந்தப் பாடல்களையும் சுட்டிக் காட்ட முடியவில்லை )

பாடல்களின் தொகை, இசை நேர்த்தி, இயங்கிய காலம் என்ற மூன்று அம்சங்களையும் கணக்கில் எடுக்கும் போது விஸ்வநாதன் அவர்களுக்கு வழங்க வேண்டிய கௌரவத்தைப் புரிந்து கொள்ள முடியும். இந்தியாவின் மாநில, மத்திய அரசாங்கங்கள் அவருக்கு உரிய கௌரவத்தை வழங்கத் தவறி விட்டன. அதற்காக எம்.எஸ்.வி.யும் கவலைப்பட்டுக் கரையக் கூடிய ஒருவரல்ல. அவருடைய இசையிலும் குரலிலும் ஒலித்த பாடலொன்றின் வரிகள்தான் இதற்குப் பதில் ;

“கடல் மீது விழுந்தோர்கள் நீந்துங்கள்
கனி மீது விழுந்தோர்கள் உண்ணுங்கள்
வழிச்சாலை கண்டோர்கள் செல்லுங்கள்
-போக
வழியின்றி நிற்பவர்கள் நில்லுங்கள்
.......
அது தேடி இது தேடி அலைகின்றாய்
-வாழ்வில்
எது வந்து சேர்ந்தாலும் தவிக்கின்றாய்
அவரவர்க்கு வாய்த்த இடம் அவன் போட்ட
பிச்சை
அறியாத மானிடர்க்கு அக்கரையில் இச்சை
“

# கண்ணகி கலை இலக்கிய விழா - 2018



எட்டாவது கண்ணகி கலை இலக்கிய விழா இம்முறை களுதாவளையில் செப்ரெம்பர் 07,08,09ம் திகதிகளில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதன் ஓர் அங்கமான ஆய்வரங்கு 09ம் திகதி காலையில் நடைபெறவுள்ளது. இவ் ஆய்வரங்கிற்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் கோரப்படுகின்றது.

1. ஆய்வுப் பொருள் :- “கிழக்கிலங்கைப் பண்பாட்டில் பெண் தெய்வங்கள்“(ஆய்வுப்பொருளுக்கேற்ப ஆய்வாளர் ஆய்வுத் தலைப்பை இடுதல் வேண்டும். உதாரணம் கிழக்கிலங்கைப் பண்பாட்டில் கண்ணகியின் வகிபாகம்)

2. ஆய்வு குவிமையப்படுத்தும் விடயங்கள்

2.1. கண்ணகி, மாரி, திரௌபதி, காளி ஆகிய தெய்வச் சடங்குகள், வணக்கமுறைகள் என்பன கட்டுரையின் ஆய்வு மையமாக இருக்க வேண்டும்.

2.2. கிழக்கிலங்கைப் பண்பாட்டிலும் அதன் உருவாக்கத்திலும் பேணுகையிலும் இச்சடங்குகள் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை வெளிப்படுத்துவதாக கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

2.3. எழுத்துப் பிரதி எத்தனை பக்கங்களாகவும் இருக்கலாம். (1.5 இடைவெளியில் baamini font இல் 12.5 அளவில் இருத்தல் வேண்டும்)

2.4. ஆய்வரங்கில் கட்டுரையை சமர்ப்பிப்பதற்கு 20 நிமிட நேரம் மாத்திரமே ஆய்வாளருக்கு வழங்கப்படும்.

3. கட்டுரைகளை ஏற்றுக்கொள்ளல் தொடர்பான கால அட்டவணை
தங்களால் அனுப்பிவைக்கப்படும் ஆய்வுக் கட்டுரையானது ஆய்வு நோக்குனர்களால் பரிசீலிக்கப்பட்டு திருத்தங்கள் இருப்பின் ஆய்வு நோக்குனர்களின் ஆலோசனையின் அடிப்படையில் திருத்தி எழுதப்பட்டு கீழ் குறிப்பிடப்படும் காலப்பகுதிக்குள் எமக்கு கிடைத்தல் வேண்டும்.

3.1. கட்டுரைச் சுருக்கம் : 30.07.2018
3.2. கட்டுரை சமர்ப்பித்தல்: 15.08.2018
3.3. ஏற்றுக் கொள்ளப்பட்டமைக்கான அறிவித்தல்: 18.08.2018 - 20.08.2018
3.4. கட்டுரையின் இறுதி வடிவம் பெற்றுக்கொள்ளல்: 23.08.2018
3.5. அனுப்பவேண்டிய மின் அஞ்சல் முகவரி: kannahivizha@gmail.com

4. தொடர்புகள்: 0771900614, 0777492861, 0777626105, 0770075898



தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# நம்மை மறந்த நாம்!

## ஆசாரக்கோவை எனும் நூல் கூறுவது என்ன?

சில வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் ஆங்கிலத் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றைப் பார்க்கும் வாய்ப்புக்கிடைத்தது. பொதுவாக நான் ஆங்கிலத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது குறைவு. பார்க்க விருப்பம் இல்லாமல் இல்லை. தொலைக்காட்சியைப் பார்க்க நேரம் கிடைப்பதே அரிது. கிடைக்கும் நேரங்களிலும் தமிழ்த் தொலைக்காட்சிகளில் நான் விரும்பி இரசிக்கும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பது வழக்கமாகிப் போய்விட்டது. அன்று எனது மருத்துவரைப் பார்ப்பதற்காக அவரது மருத்துவ மனையில் காத்திருந்தபோது அங்கேயிருந்த தொலைக்காட்சியில் இடம்பெற்ற அந்த நிகழ்சியைப் பார்க்க நேர்ந்தது. நிகழ்ச்சி நன்றாகவே இருந்தது. ஆனால் அதனைப் பார்க்கும்போது எனக்குச் சற்று நெருடலாக இருந்தது.



அன்றாடம் நமது உணவு எப்படி இருக்க வேண்டும். எப்படியான உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும் எப்படிப்பட்ட நேரங்களில் உணவுட்கொள்ள வேண்டும் என்ற விபரங்களை நிகழ்ச்சித் தொகுப்பாளர்களான ஓர் ஆணும், பெண்ணும், உணவுட்கொள்ளல் பற்றிய விடயத்தில் நிபுணத்துவம் பெற்றவர் எனச் சொல்லப்பட்ட மற்றொருவருடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அரைமணி நேரமளவில் நான் பார்த்த அந்த நிகழ்ச்சியில் உணவுமுறைபற்றிய மேலோட்டமான விடயங்கள் மட்டுமே ஒரு கலந்துரையாடலாக இடம்பெற்றன. அங்கு சொல்லப்பட்டவை பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்திருக்கக்கூடிய சாதாரண விடயங்களாகவே எனக்குத் தோன்றின. ஆனால் அங்கிருந்த பலர் மிகவும் ஆவலுடனும், கவனமாகவும் அந்த நிகழ்ச்சியைப் பாரத்துக்கொண்டிருந்தார்கள்.

அந்தவேளை எனக்கு நமது பண்டைத்தமிழ் நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் உணவு முறைகள் பற்றிய விடயங்கள் நினைவுக்கு வந்தன. எனது நெஞ்சில் எழுந்த நெருடல் உணர்வுக்குக் காரணம் அதுதான்.

உடல் நலத்திற்கு உகந்தவகையான உணவுகள் பற்றியும், உணவு முறைகள் பற்றியும் எத்தனையோ தமிழ் நூல்களில் மிகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ் மருத்துவ நூல்களில் உணவுப் பண்டங்களில் பண்புகள், குணங்கள், நோய் தீர்க்கும் வல்லமைகள் எல்லாம் துல்லியமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு ஆழமாகத் தெரிந்துகொள்ளாமல் விட்டாலும், அன்றாடம் மக்கள் அறிந்துகொள்ளக்கூடிய விடயங்கள் இலக்கியங்களாகத் திகழ்கின்ற எத்தனையோ நூல்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தும் நாம் அவற்றை அறிந்துகொள்ளவில்லை. அறிந்துகொள்ள முற்படுவதில்லை. அறிந்துகொள்ளும் வாய்ப்புக்களும் நமது சமூகத்தில் இல்லை. அறிந்து கொண்டவர்களும் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. தமிழில்தானே என்ற இளக்காரம்தான் அதற்குக் காரணம்!
சங்க இலக்கியங்களிலும், சங்க இலக்கியங்களோடு வைத்து மதிக்கப்படுகின்ற சங்கமருவியகால இலக்கியங்களான பதினெண்கீழ்க் கணக்கு நூல்களிலும் கூட இத்தகைய விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன. உதாரணமாக “ஆசாரக்கோவை“ என்று ஒரு நூல் உள்ளது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான இந்த ஆசாரக்கோவை பெருவாயில் முள்ளியார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. ஆசாரக்கோவை என்பதற்கு ஒழுக்கமுறைகளின் தொகுப்பு என்பது கருத்து. நூறு பாடல்களைக் கொண்ட நூல் இது. இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, ப.்.றொடை வெண்பா, குறள் வெண்பா முதலிய பலவகை வெண்பாவகைகளில் அந்தப் பாடல்கள் அமைந்துள்ளன.

ஒழுக்கமான வாழ்க்கைக்கும், ஒழுங்கான வாழ்க்கைக்குமான வழிகள் அதில் கூறப்பட்டுள்ளன. உண்ண வேண்டியது எப்படி, உடுத்த வேண்டியது எப்படி, உறங்கவேண்டியது எப்படி, நீராடவேண்டியது எப்படி என்றெல்லாம் தெளிவான நெறிப்படுத்தல்கள் சொல்லப்பட்டுள்ளன. மனிதர்கள் செய்யக்கூடியவை எவை என்றும் செய்யக்கூடாதவை எவை என்றும் சீரான வாழ்வுக்கான வழிகாட்டல்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த போது அவையெல்லாம் என் நினைவுக்கு வந்தன. சின்னச் சின்ன விடயங்களையெல்லாம் வியத்தகு விம்பங்களாக விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கின்ற இந்த உலகில், எத்தனையோ அறிவியல் பொக்கிசங்கள் நம்மிடையே இருந்தும் அவையெல்லாம் சந்தைக்கு வராத சரக்குக்களாக இருப்பதை எண்ணி என் இதயம் கனத்தது.

ஆசாரக்கோவை என்ற அந்த நூலில் இருந்து வாசகர்களுக்காகச் சில விடயங்களை வழங்குகிறேன்.

நீராடவேண்டிய நேரங்கள் எவை என்று ஒரு பாடல் சொல்கிறது

“தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை
உண்டது கான்றல், மயிர்களைதல்
ஊண்பொழுது வைகு துயிலோடு
இணைவிழைச்சுக் கீழ் மக்கள் மெய்யுறல்
ஏனைமயல் உறல் ஈரைந்தும் ஐயுறாது
ஆடுக நீர்“
(பாடல் 10)

*இதன் கருத்து:*
கடவுளை வணங்குவதற்கு முன்னரும், கெட்ட கனவைக் கண்டபின்னரும், சுத்தம் இல்லாமல் இருக்கும் போதும், வாந்தி எடுத்தபின்பும், தலைமுடி வெட்டிய பின்னரும், உண்பதற்கு முன்னரும், நெடுநேர உறக்கத்தின் பின்னரும், உடலுறவுக்குப் பின்னரும், கீழ்மக்களைத் தீண்டியபின்னரும், மலசலம் கழித்தபின்னரும் ஆகிய வேளைகளில் ஒருவர் நீராடுதல் வேண்டும்.

எப்படியிருந்தெல்லாம் உண்ணுதல் கூடாது என்று இப்பாடல் சொல்கிறது.

“கிடந்து உண்ணார் நின்று உண்ணார், வெள்ளிடையும் உண்ணார் சிறந்துமிக உண்ணார் கட்டில்மேல் உண்ணார் இறந்து ஒன்றும் தின்னற்க நின்று.“
(பாடல் 23)

*இதன் கருத்து:*
படுத்திருந்தவாறு உண்ணுதல் கூடாது. நின்ற நிலையில் உண்ணக்கூடாது. திறந்த வெளியாகவுள்ள இடத்தில் வைத்து உண்ணக்கூடாது. நல்ல உணவாக இருந்தாலும் அதிகமாக உண்ணக்கூடாது. படுக்கையின் மேல் இருந்தும் உண்ணக்கூடாது. பசி அடங்கிவிட்ட பின்னர் எதையும் உண்ணக்கூடாது.

உணவுகளை எந்த ஒழுங்கில் உண்ணுதல் வேண்டும் என்று இப்பாடல் சொல்கிறது.

“கைப்பன எல்லாம் கடைதலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண்“
(பாடல் 25)

*இதன் கருத்து:*
உணவுண்ணும்போது கசப்புச் சுவையுடைய உணவுகளைக் கடைசியிலும், இனிப்பானவற்றை முதலிலும், ஏனைய சுவைகளையுடைய உணவுகளை இரண்டுக்கும் இடையிலும் உண்பதுதான் சரியான உண்ணும் முறையாகும்.

மேலும், உணவு உட்கொண்ட பின்னர் பற்களையும், வாயையும் சுத்தம் செய்ய வேண்டும் என்றும் எப்படி அதைச் செய்ய வேண்டும் என்றும் மற்றுமொரு பாடலில் காணக்கூடியதாகவுள்ளது. அதேவேளை, பெரியவர்களையும், வறுமையில் வாடுபவர்களையும் சந்திக்கும்போது அவர்களிடம் என்ன சாப்பிட்டீர்கள் என்று கேட்கக்கூடாது என்றும், உள்ளத்தெளிவு நிறைந்தவர்கள் அவ்வாறு கேட்கமாட்டார்கள் என்றும் மற்றுமொரு பாடலில் சொல்லப்பட்டுள்ளது.

கணவன் மனைவியுடன் சேர்ந்திருக்கும் முறை பற்றி ஒரு பாடலில் காணலாம்.

“தீண்டா நாள் முந்நாளும் நோக்கார் நீர்
ஆடியபின் ஈராறு நாளும் இகவற்க என்பதே
பேரறிவாளர் துணிவு“
(பாடல் 42)

*இதன் கருத்து:*
மாதவிடாயில் மனைவி இருக்கும் நாட்களில் கணவன் அவளை நெருங்குதல் கூடாது. மாதவிடாய் தீர்ந்து மனைவி குளித்தநாளில் இருந்து பன்னிரண்டு நாட்களுக்கு மனைவியைவிட்டுப் பிரியாமல் இருக்கவேண்டும். இவைதான் பேரறிவுள்ளவர்கள் என்று சொல்லத்தக்கவர்கள் நடந்துகொள்ளும் முறையாகும். என்பது இந்தப் பாடலின் கருத்து.

இதில் “நோக்கார்“ என்பதற்கு பார்க்கமாட்டார்கள் அல்லது பார்க்கக்கூடாது என்று பொருள்கொள்ளுதல் பொருந்தாது. “நோக்குதல்“ என்பது உடல் ஆசையுடன் அவளை உற்று நோக்குதல் அல்லது நெருங்குதல் என்பதே விடயப் பொருத்தமுள்ள கருத்தாகும்.

இவைதவிர. கணவனும். மனைவியும் சேரத்தகாத நாட்கள் எவை, வேளைகள் யாவை என்பவற்றையும் இன்னுமொரு ஒருபாடல் அறிவுறுத்துவதிலிருந்து அறியமுடிகிறது.

யாருடன் தனியாகத் தங்கி வாழக்கூடாது என்பதுபற்றி ஒரு பாடல்.

“ஈன்றாள் மகள்தன் உடன்பிறந்தாள்
ஆயினும் சான்றார் தமித்தா உறையற்க,
ஐம்புலனும் தூங்கற்கு அரிது ஆகாலான்”

*இதன் கருத்து:*
புலன்களை அடக்கிவாழ்தல் என்பது மிகவும் கடினமானது. அதனால். அறிவுள்ள ஆண்கள் தங்கள் தாயுடனோ, தங்கள் மகளுடனோ, உடன் பிறந்த சகோதரியுடனோ தனியாகத் தங்கி வாழக்கூடாது, என்பது இதன் கருத்து.


அவ்வாறு வாழும்போது முறைதவறிய ஒழுக்கச் சீர்கேடுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உண்டாகின்றது என்பதனால்தான் இவ்வாறு அப்போதே சொல்லிவைத்திருக்கிறார்கள் நமது பண்டைத் தமிழ்ப் புலவர்கள்.

மகள் தந்தையால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட செய்திகளை நாம் கேள்விப்படுகின்றோம். சொந்தச் சகோதரியுடன் தவறான உறவு கொண்டமை பற்றியும் செய்திகள் வருகின்றன. எல்லாச் சமூகங்களிலும் இத்தகைய ஒழுக்கச் சீர்கேடுகள் இடம்பெறுகின்றன. அதற்கு அவர்கள் தனித்து வாழவேண்டிய அல்லது தங்கியிருக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுவதுதான் ஏதுவாக அமைகின்றது என்பதுதானே பொதுவான நிலைப்பாடு? இந்த விடயத்தில் மேலை நாடுகளில் சட்டரீதியான ஏற்பாடுகள் கூட உள்ளன.

ஆசாரக்கோவை என்ற இந்த நூலில் ஒருவர் சிறுநீர் கழிக்கும்போதும், மலம் கழிக்கும்போதும் எந்தத் திசையைப்

தொடர்ச்சி... (பக்கம் -14 )

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சித மூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.





கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா

கொழும்பு அளுத்மாவத்தை
அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானம்
இல. 478/67, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு -15.

# வருஷாபிஷேக கொடியேற்றம்

## 27.07.2018 மாலை 5.30க்கு

## தேர் வீதி உலா (தீர்த்தவாரி)

## 05.08.2018ம் திகதி காலை 7.30 மணிக்கு

| | | | |
|---|---|---|---|
| முதல்நாள் | 27.07.2018 | காலை 6.00 மணிக்கு<br>மாலை 5.30 மணிக்கு | மஹோகணபதி அஷ்டாபிஷேகம்<br>கொடியேற்றம் (துவஜ ஆரோகணம்) |
| இரண்டாம் நாள் | 28.07.2018 | காலை 9.00 மணிக்கு | மகா மிருத்யுஞ்சு ஹோமம், கலச ஆரோகணம் |
| மூன்றாம் நாள் | 29.07.2018 | காலை 8.00 மணிக்கு<br>பகல் 1.00 மணிக்கு | ஸ்ரீ ஐயப்ப சாமிக்கு கலச அபிஷேகம், திருவிளக்கு பூஜையுடன் லட்சார்ச்சனை<br>லட்சார்ச்சனை நிறைவு தீபாராதனை |
| நான்காம் நாள் | 30.07.2018 | காலை 9.00 மணிக்கு<br>காலை 11.00 மணிக்கு | சுதர்ஷன ஹோமம், கலச அபிஷேகம்<br>ஸ்ரீ ஐயப்பசாமிக்கு கலச அபிஷேகம் |
| ஐந்தாம் நாள் | 31.07.2018 | காலை 9.00 மணிக்கு | அன்னை மஞ்சமாதாவுக்கு விஷேட அபிஷேக ஆராதனை |
| ஆறாம் நாள் | 01.08.2018 | காலை 9.00 மணிக்கு<br>காலை 11.00 மணிக்கு | நாகராஜப் பிரபுவுக்கு அபிஷேக ஆராதனை<br>ஸ்ரீ ஐயப்பசாமிக்கு கலச அபிஷேகம் |
| ஏழாம் நாள் | 02.08.2018 | காலை 9.00 மணிக்கு | விஷேஷ் அஷ்ட திரவிய கலப - அபிஷேகம் |
| எட்டாம் நாள் | 03.08.2018 | காலை 9.00 மணிக்கு<br>காலை 8.00 மணிக்கு | கருப்பசாமி, கடுத்தசாமி விஷேட அபிஷேக ஆராதனை<br>ஸ்ரீ ஐயப்பசாமிக்கு கலச அபிஷேகம் |
| ஒன்பதாம் நாள் | 04.08.2018 | காலை 4.00 மணிக்கு<br>இரவு 8.00 மணிக்கு | கலச அபிஷேகம், பஞ்ச புண்ணிய யாகம்<br>பள்ளி வேட்டை திருவிழா,<br>சுவாமி பள்ளி அறை பூஜை |
| பத்தாம் நாள் | 05.08.2018 | காலை 3.00 மணிக்கு<br>காலை 8.00 மணிக்கு<br>மாலை 3.00 மணிக்கு | மஹோ கணபதி ஹோமம், சுவாமி திருதிருப்பள்ளி எழுச்சி, கலச அபிஷேகம்<br>தேரில் சுவாமி ஆலயத்திலிருந்து வீதி உலா வந்து முகத்துவாரம் சங்கமத்தில் தீர்த்தவாரி திருவிழா<br>கொடி இறக்கம் (துவஜ அவரோகணம்) |









# 14000 பழமையான பாண் (ரொட்டி)



14 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே பாண் (ரொட்டி) செய்துள்ளதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பழய தளம் ஒன்றை தோண்டிய விஞ்ஞானிகள் இதனை கண்டுபிடித்துள்ளனர்.

தீயில் சுடப்பட்ட அவை, தட்டையான ரொட்டி போன்றும், இன்றைய பல தானிய வகைகள் போன்றும் ருசித்திருக்கும் என்று கூறப்படுகிறது.

அந்த ரொட்டிகளுக்குள் வறுத்த மாமிசத்தை வைத்து முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கக்கூடும். இதுவே பழமையான சான்விச்சாகவும் இருக்கிறது.

ஜோர்டன் நாட்டின் பாலைவனத்தில் இதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பார்லி மற்றும் கோதுமையில் இருந்து தயாரிக்கப்பட்ட மாவில், தாவரங்களின் பொடியாக்கப்பட்ட வேர்கள் மற்றும் தண்ணீர் சேர்க்கப்பட்டு, கற்காலத்தில் ரொட்டிகள் சுடப்பட்டன.

கோதுமை மற்றும் பார்லியிலிருந்து மாவு எடுக்கப்பட்டது.

நீரில் வளரும் காட்டு தாவரங்களின் கிழுங்குகள் (வேர்கள்) உலர வைக்கப்பட்டு தூளாக்கப்பட்டன.

இவற்றில் தண்ணீர்ர் கலந்து சப்பாத்தி மாவு போல பிசையப்பட்டது. சுற்றி நெருப்பு வைக்கப்பட்ட சூடான கற்களில் ரொட்டி சுடப்பட்டது.

"கலப்பு உணவு தயாரிக்கப்பட்டு, சமையல் செய்ததற்கான பழமையான ஆதாரம் இது" என்று, லண்டன் கல்கலைக்கழக பேராசிரியர் டொரியன் ஃபுல்லர் கூறியுள்ளார்.

தட்டையான ரொட்டிகளுடன், வறுத்த மான் போன்றவற்றை அவர்கள் உண்டுள்ளனர்.
உலகில் உள்ள பல நாடுகளில்




ரொட்டிகள் பிரதான உணவாக இருக்கின்றன. ஆனால், இது எப்போது தோன்றியது என்ற தகவல் தெளிவாக இல்லை.

தற்போது வரை, துருக்கியில் ரொட்டி தயாரிக்கப்பட்டதற்கான பழமையான ஆதாரங்கள் உள்ளன. இந்த கண்டுபிடிப்புகள் 9000 ஆண்டுகள் பழமைவாய்ந்தவை.

இது தொடர்பாக இரண்டு கட்டடங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அவை, பெரிய வட்டமான நெருப்புத் தகடுகளும், அவற்றில் ரொட்டி துகள்களும் இருந்தது தெரிய வந்தது.



# மலையகத் தமிழ் மக்கள் இலங்கையில் வாக்காளர்களே (voters) தவிர முழுமையான பிரஜைகள்( Citizens) இல்லை

## மலைகளைப் பேசவிடுங்கள்

இலங்கை இந்திய காங்கிரஸ் 1939 ல் உருவாக்கம் பெற்றது என்றால், 1936 ல் கோ. நடேசய்யர் மலையக மக்களின் பிரதிநிதியாக அரசவையில் (state council ) அமர்ந்தார் என்றால் 1931 ஆம் ஆண்டு சர்வசன வாக்குரிமையின்படி மலையகத் தமிழ் மக்கள் "வாக்குரிமை" பெற்றார்கள் என்பதை இலகுவாக உணர முடியும் . எனினும், இந்த இலங்கைக்கான

வாக்குரிமை பற்றியும் உள்நாட்டு கம்சபா (தற்போதைய பிரதேச சபை ) முறைமைக்குள் உள்வாங்காமை பற்றியும் "மலையகமும் மறுவாழ்வும்" நூலறிமுக விழா கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெற்றபோது கலாநிதி.ந. ரவீந்திரன் முன்வைத்த கருத்து கவனத்திற்கு உட்படுத்த வேண்டியது.



"சர்வசன வாக்குரிமையின் கீழ் பிரித்தானியர் மலையகத் தமிழருக்கு

வாக்குரிமை வழங்க முன்வந்தபோதும் சுதேச மக்களிடம் காணப்பட்ட

உள்நாட்டு நிர்வாக பொறிமுறையான "கம்சபா" ( கிராம சபை ) முறைமையில் மலைநாட்டு தமிழ் மக்கள் வாழ்ந்த தோட்டப் பிரதேசங்கள் உள்வாங்கப்படவில்லை. எனவே வழங்கப்பட்டது இலங்கையை ஆண்ட பிரித்தானிய ஆட்சியே தவிர இலங்கை அரசல்ல. எனவேதான், 1948 ல் சுதந்திரம் கிடைத்ததும் சுதேச அரசு முதல் வேலையாக மலையக மக்களின் குடியுரிமையை பறித்தது. அவர்களைப் பொறுத்தவரையில் அதுநாள்வரை சுமார் 135 ஆண்டுகள் இலங்கையில் வாழ்ந்திருந்த போதும்

மலையகத் தமிழர்களை இலங்கையர்களாக ஏற்றுக்கொள்ள மறுத்து

இருந்தார்கள்" என்பதுதான், கலாநிதி ந.ரவீந்திரன் முன்வைத்த கருத்து.

இது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இதற்கு இரண்டு ஆதாரங்களை எடுத்துச் சொல்ல முடியும்.

1940 களில் மீனாட்சியம்மை நடேசய்யரின் பாடல்களில்

உள்நாட்டு எதிர்ப்பு பிரதிபலிப்பதும் அதற்கு அவர் காட்டும் பிரதிபலிப்பும்.
இன்னும் கூட பிரதேச சபைகளுக்கு மலையகத் தமிழர் வாழும் பெருந்தோட்ட பிரதேசங்களுக்கு சேவையாற்ற உள்நாட்டுச் சட்டம் (பிரதேச சபைகள் சட்டம்) இடமளிக்காமை.

மீனாட்சியம்மை பாடல்களின்படி,
மந்திரிகளே மகா தந்திரிகளே வுங்கள்
மனம் போனபடி பேச்சை சிந்துகிறீர்களே
இந்தியர் இலங்கையில் இருக்கக் கூடாதாம்
அவர்க்கேற்ற சுதந்திரம் கொடுக்கக் கூடாதாம்

நீதியற்ற மந்திரி சபை நேர்மையைப் பாரு - அவர்கள் நியாயமற்ற பக்ஷபாத செய்கையைக் கூறு ஏதினிமேல் சும்மாவிடில் ஏற்காது சீறு நாங்கள் இந்த லங்கை ஆள வேண்டாம் வேலையைப் பாரு (மந்)

"இந்தியர் இலங்கையில் இருக்கக் கூடாதாம் அவர்க் .. கேற்ற சுதந்திரம் கொடுக்கக் கூடாதாம்" என்ற வரிகள் ஊடாக உள்நாட்டில் வந்த எதிர்ப்பை கேள்வி கேட்கிறார். நாங்கள் இலங்கையை ஆளக்கோரவில்லை. பக்க

சார்பாக செயற்படாதீர்கள் என தனது எதிர்ப்பை தெரிவிக்கிறார். தவிரவும், லங்கா மாதா நம்ம தாய் தான் இந்த நாட்டினி லெல்லோரும் அவளுக்குச் சேய் தான் பங்காள ரென்றிடும் பேய்தான் - நமையிப்போ பயமுறுத் திடுவதை மனதினில் லாய் தான் (லங்கா)

சரணம்
பாய்க் கப்பல் ஏறியே வந்தோம் - அந்நாள் பலபேர்கள் உயிரினை யிடைவழி தந்தோம், தாய் நாடென்றெண்ணி யிருந்தோம் - இவர்கள் தகாத செய்கையைக் கண்டு மனமிக நொந்தோம், (லங்கா)
புலிகள் தான் வாழ்ந்திட்ட காடு - அது இப்போ பொழில் சூழும் அழகிய சிங்கார நாடு, பலியிதற் கிந்திய ராடு - களைப் போல பல்லாயிரம் பேர்கள் உயிரிதற்கீடு, (லங்கா)

அஞ்சா தெதிர்த்துமே நின்று - நமக்கிங்கே அதிக சுதந்திரம் தர வேண்டுமென்று, நெஞ்சி லுரத்துடன் நின்று - போராடிட நேயரே வருகுவீர் திடத்துடனின்று, (லங்கா)

மேற்படி பாடல் பல விடயங்களைச் சுட்டிக்காட்டியபோதும்

"லங்கா மாதா நம்ம தாய் தான் இந்த நாட்டினி லெல்லோரும் அவளுக்குச் சேய் தான்" என்ற வரியின் மூலம் மலையகத்தவரை இலங்கையராக ஏற்றுக்கொள்ளுங்கள் என்ற விண்ணப்பமும்

"நமக்கிங்கே அதிக சுதந்திரம் தர வேண்டுமென்றும" என்ற வரிகள் மூலம் வாக்குரிமைக்கு மேலதிகமான சுதந்திரம் (இதனை உள்நாட்டு நிர்வாகத்தில் உள்வாங்க கோரும் என்றுகொள்ளலாம் ) தர வேண்டும் என கோருவதாக கொள்ளலாம்.

பிரதேச சபை சட்டங்கள் அடிப்படையில் பார்த்தால், 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் கொண்டுவரப்படும் வரை நடைமுறையில் இருந்த "கிராம சபை " முறைமையில் உள்வாங்கப்படாமலேயே இருந்து வந்துள்ளார்கள். ஆனால், 1987 ஆம் ஆண்டு பிரதேச சபை சட்டம் கொண்டுவரப்பட்ட போது "பெருந்தோட்ட பகுதிக்கு " சேவையாற்ற முடியாது என (பகுதி 31) நேரடியாகவே சொல்லி தடை செய்தமை இன்னும் இறுக்கமாக அவர்களை உள்நாட்டு நிர்வாகப் பொறிமுறையில் உள்வாங்குவதில்லை என்ற நிலைக்கு சுதேச அரசாங்கம் முடிவெடுத்த வரலாறு வருகிறது.

எனவே, 1948 -1977 காலப்பகுதியில் இழந்த குடியுரிமையைப் பெறுவதற்கு போராட்டம் நிகழ்ந்த போது உள்நாட்டு நிர்வாகத்தில் உள்வாங்கப்பட்டாமலேயே இருக்கிறோம்

**மல்லியப்புசந்தி திலகர்**

அதனையாவது அனுமதிக்குமாறு சட்டத்தில் கோருவதற்கு மறந்திருக்கின்றோம். 2015 ஆண்டு வரை சமூக மட்டத்தில் பல கலந்துரையாடல்கள் இதனை

மாற்றியமைக்க முயற்சி எடுத்த போதும் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டிய பாராளுமன்றத்திற்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்ட
இருக்கவில்லை. 2005 -2010(ஆறாவது) பாராளுமன்றில் மலையக மக்களின் பிரதிநிதிகள் பத்து பேர் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்ததுடன். ஒன்பது பேர் அமைச்சர்களாக இருந்த வரலாறு கூட உண்டு. ஆனால், அந்த காலப்பகுதியில் இந்த சட்டம் திருத்த முயற்சி மேற்கொள்ளவில்லை. 2010 -2015 வரையான காலத்தில் பாராளுமன்ற தெரிவு குழு மட்டத்தில் உரையாடப்பட்டதே தவிர பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும், சபைக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை. 2015 ஆம் ஆண்டு சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்றின் ஊடாக சபையில் (கட்டுரையாளரால்) முன்வைக்கப்பட்ட பின்னரே அரசுக்கு வகை சொல்லும் தேவை வந்தது. மாகாண சபைகள் உள்நாட்டு

அலுவல்கள் அமைச்சர் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு திருத்துவதற்கு உடன்பாடும் , உறுதிப்பாடும் வழங்க வேண்டியதாயிற்று. அதன்படி இந்தச் சட்டத்திருத்தம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது நிறைவேற்றப்படும்வரை மலையகத் தமிழ் மக்கள் இலங்கையில் வாக்காளர்களே (voters) தவிர முழுமையான பிரஜைகள் இல்லை.

இருந்தபோதும் இதற்கிடைப்பட்ட காலப்பகுதியில் 2008 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு அமைத்து 2009 ஆம் ஆண்டு 6 வது இலக்க சட்டம் மூலம் கொண்டுவந்து குடியுரிமை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைத்தது.

(தொடரும்)

## தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

தொடர்ச்சி...

பார்த்து உட்காரவேண்டும் என்றும் எந்தெந்த இடங்களில் அவற்றைச் செய்யக்கூடாது என்றும் அறிவுறுத்தல்கள் சொல்லப்பட்டுள்ளன.

அறிவுடையவர்கள், ஒழுக்கமடையவர்கள், மற்றும் மாணவர்கள் எப்படி நடக்க வேண்டும் என்றும், அவர்கள் செய்யக்கூடியவை எவை, செய்யத்தகாதவை எவை என்றும் அறிவுரைகள் சொல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு நூறு சிறிய பாடல்களைக்கொண்ட ஆசாரக்கோவை என்ற நூலில் சொல்லப்பட்டுள்ள வாழ்வுக்கு வளமூட்டும் விடயங்களைப் போல மேலும் எத்தனையோ வியத்தகு அறிவுரைகளைத் தரும் எண்ணற்ற நூல்கள் தமிழ்மொழியில் உள்ளன. ஏன் திருக்குறள் ஒன்று போதுமே!






# மூதாதையரின் காலடிகள்

## சோழர்கால சான்றுகளுடன் சேனையூர் வீரபத்திரர் கோயிலும் அதனோடிணைந்து வரும் பரிகல வேள்வியும்

சேனையூர் வீரபத்திரர் கோயில் சோழர்காலத்துடன் தொடர்புபட்ட வரலாற்று சுவடுகளைப் பின்னணியாக கொண்ட தொல்லியல் சான்றுகளும் கலசார பண்பாட்டு பகைப்புலமும் தொன்மங்களின் நீட்சியும் கொண்டதாய் அமைந்துள்ளது.

பொலநறுவை கால சோழர் கோயில் பாணியை ஒத்த கோயில் இருந்ததற்கான சிதைவுகள் எண்பதுகள் வரை இன்றைய வீராத்திரர் கோயில் ஆலையப் பகுதியில் இருந்தமையும், அதன் ஆதார பூர்வமாக நிமிர்ந்து நிற்கும் வேப்ப மரமும், அதனை சூழ அமைந்திருக்கும் கல் தூண்களும், உடைந்த கட்டிட பாகங்களும் ஒரு வரலாற்றின் சாட்சியாய் உள்ளமையும் 1981 ஆண்டில் இப் பகுதியில் தொல் பொருளியல் ஆய்வுக்காக வந்த பேராசிரியர் இந்திர பாலா அவர்கள் வீர பத்திரர் ஆலையத்தில் இருந்த அழிந்து சிதைந்திருந்த கர்ப்பக் கிருகமும் மண்டபமுமான ஆலயப் பகுதி சோழர் காலத்துக்குரியது என்பதை உறுதிப்படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



திருக்கோணமலைத் திருக்கோயில்கள் பற்றிய தன் ஆய்வு நூலில் பண்டிதர் வடிவேல் அவர்கள் வீரபத்திரர் கோயிலில் உள்ள கட்டிடப் பகுதி பற்றி பேராசிரியர் இந்திரபாலா அவர்களது கருத்துக்களுடன் உடன்பட்டு சோழர்கால சிவன் கோயில் ஒன்றின் அழிபாடுகள்தான் என்பதை உறுதிப்படுத்தியிருந்தமை இங்கு கவனத்துக்கு உரியது.

பனெடுங்காலமாக வருசம் தவறாமல் கொண்டாடப்படும் வேள்வி இன்று வரை தொடர்கிறது. மட்டக்களப்பில் சடங்கு என பேசப்படும் இத்தகைய நிகழ்வுகள் சேனையூர் பிரதேசத்தில் வேள்வி என அழைக்கப்படுகின்றன.

வேள்வி என்ற சொல் சங்க காலத்திலிருந்து தொடர் பயன்பாட்டில் உள்ள பண்பாட்டு அடையாளம். புற நானுற்றில் கள வேள்வி பற்றிய குறிப்புகள் உள்ளன. அந்த மரபின் நீட்சியே இங்கு தொடர்கிறது என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

பரிகல வேள்வி என்றால் என்ன பரிகலங்கள் என்ற சொற் தொடரின் பொருள் என்ன என பலருக்கும் கேள்வி ஏற்படலாம்.

பரிகலம் என்பது நாடு முழுதுஞ் சென்று தொற்று வியாதியைப் பரப்புவதாகக் கருதப்படும் பேய்க்கூட்டம். பரிகலம் என்பது பரிவாரப் பேய் அல்லது பேய் பிசாசைக் குறிக்கும் சொல், என பொருள் கொள்வதற்கான சான்றுகளை இலக்கியங்களிலிருந்தும் அகராதிகள் வழியாகவும் அறிந்து கொள்ளலாம்.

பரிகல வேள்வி செய்வதன் நோக்கம் கிராமத்தில் தோற்று நோய்களையும் கெட்ட சக்திகளையும் விரட்டுவதற்கான மந்திர அழைப்பாகும். மந்திர வேள்வி செய் முறைகளின் மூலமும் அவற்றை விரட்டி மக்களை தொற்று நோய்களிலிருந்து காப்பதாக ஒரு நம்பிக்கையின் தொடர்ச்சியாக இது அமைகிறது.

சேனையூரில் காலம் காலமாக தொடரும் இந்த நம்பிக்கை சார்ந்த தமிழர் மரபு தொடர்கிறது. கிழக்கு மாகாணத்தில் பத்ததி முறையின் தொடர்ச்சி இது. மக்கள் தெய்வங்களாக உள்ள பல கடவுளர்களுக்கு பத்ததி முறையான வழிபாடு கிழக்கு மாகாண கிராமங்கள் தோறும் நடைமுறையில் உள்ளது. இதுவே மக்கள் சமயம்.

தமிழர் மரபு வழி வழிபாட்டு முறையே பத்ததி முறையாகும். ஆகம முறை சமஸ்கிருத மயப்பட்டதாக இருக்க பத்ததி முறை தமிழர் மரபாக பேசப்படுகிறது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்துக்கு உரிய தனித்துவ மரபாகவும் இதனை கொள்ள முடியும். பத்ததி முறை என்பது பரம்பரை பரம்பரையாக தொடரும் ஒரு மரபு. ஏடுகளில் எழுதப்பட்டு பேணப்படும் விதி முறைகளையும் மரபாக பேணப்படும் மரபுகளின் வழி வருவது பத்ததி முறை. சந்ததி சந்ததியாக தொடரும் ஒரு மரபு.



இவை ஆகமம் சார பத்ததி முறை பூசாரி மரபு.

பத்ததி முறையில் கும்பங்களை தாபனம் பண்ணுதலும் யந்திரம் சார்ந்த மந்திர வழி முறை சார்ந்ததே.

மட்டக்களப்பில் வளக்கில் உள்ள பத்ததி முறைகள்

காளியம்மன் பத்ததி
மாரியம்மன் பத்ததி
பேச்சியம்மன் பத்ததி
கண்ணகியம்மன் பத்ததி
வதனமார் பத்ததி
வயிரவர் பத்ததி
பெரியதம்பிரான் பத்ததி
வீரபத்திரர் பத்ததி

சேனையூரின் மத்தியில் அமைந்திருக்கும் வீரபத்திர சுவாமி கோயில் காவல் தெய்வமாக கொண்டாடப் படுகிறது. வீரபத்திரர் வேள்வி முடிந்தால் ஊரில் நோய் துன்பம் நேராது, வளம் பெருகும் என்ற நம்பிக்கை இன்று வரை தொடரும் பெரும் மரபு.



வீரபத்திரர் வேள்வி முடிந்தால் ஊரில் வீடுகளில் செய்யப்படும் சிறு வேள்விகள், மடைகள் மீண்டும் அடுத்த வருசமே ஆரம்பமாகும்.

வீரபத்திரர் வழிபாடு இலங்கை இந்தியா ஆகிய நாடுகளில் பரவலாக வளக்கில் உள்ளது.

"ஆளுடைத் தனி ஆதியை நீத்தொரு
வேள்வி முற்ற விரும்பிய தக்கனோர்
நீள் சிரத்தை நிலத்திடை வீட்டிய
வாள் படைத்த மதலையைப் போற்றுவாம்"
இப்படி திருச்செந்தூர்ப் புராணம் கூறுகிறது.

இங்கே வீரபத்திரர் வீரத்தின் சாட்சியாகவும், வீரத்தின் விளை நிலமாகவும் போற்றப்படும் ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சி.

(16.07 2018 திங்கட்கிழமை இந்த ஆண்டுக்கான பரிகல வேள்வி நடை பெற்றது)

**பால.சுகுமார் சேனையூர்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசாரப் புலம்**
**கிழக்குப் பல்கலைக் கழகம்**

# சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற மவட்ட சாரணர் பாசறை





திருகோணமலை மாவட்ட பாசாலைகளின் சாரண அணிகள் பங்கு கொண்ட மாவட்ட சாரணர் பாசறை சேனையூர் மத்திய கல்லூரியில் ஜூன் முதல் வாரத்தில் சிறப்பாக நடைபெற்றது. இருபத்தைந்துக்கு மேற்பட்ட சாரண அணிகள் பங்குகொண்டு, "சாரணர் சேவை நாட்டுக்கு தேவை" எனற சமூக அக்கறையை வெளிப்படுத்தி நின்றமை இங்கு கவனத்துக்கு உரிய ஒன்றாக இருந்தது. ஆண்களும் பெண்களுமாய் பங்கு கொண்ட இந்த நிகழ்வு பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்கம் ஊக்கம் உழைப்பு என்பனவற்றிற்கு வழி காட்டியாய் அமைந்தமை பாராட்டத்தக்க பெரு முயற்சி.
சேனையூர் மத்திய
கல்லூரி எழுபதுகளில் மாவட்ட நீதியாக நடைபெற்ற சாரணர் போட்டிகளில் தொடர்ந்து இரண்டு முறை முதலிடத்தை பெற்று சாதனை படைத்த சாரணர் அணி.
சேனையூர் மத்திய
கல்லூரியின் சாரணர் அணி ஐம்பது ஆண்டுகால வரலாற்றை உடையது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

நடந்த களை தீர விழுந்து, படுக்கவேணும் போல இருந்ததால அங்கின, அங்கின பிள்ளையள் விழுந்ததும் அந்த கட்டாந்தரையிலயே கண்ணுறங்கியும் போச்சினம். பெடியளும் இவயள்ள இருந்து கொஞ்சம் தள்ளித்தான் எண்டாலும் அவையும் மட்டையாகிட்டினம். இதுக்குள்ள பொறுப்பாளர் எல்லாரையும் தட்டி எழுப்பி சென்றி போடவச்சான். பின்ன வழிகாட்டியிட்ட கேட்ட கேள்வியும் மறந்துதான் போச்சுது.

விடியப்பறமா பாத்தா எங்கயோ சிங்களப்பாட்டுக் கேக்குது. எழும்பினவை தங்கதங்க பாட்டில காடுகளுக்க பூந்து காலைக்கடனை முடிக்க வெளிக்கிட, வழிகாட்டி மறிச்சு தடயம் விடவேண்டாம் எண்டு அறிவுறுத்தினான். என்ன பலகாலம் சண்டையில நிண்ட

"ஒருத்தரும் வெளியால தலை காட்ட வேணாம். பக்கத்தில ஆமிக்காம்பு பாட்டு கேக்கிதுதானே" எண்டு வழிகாட்டி சொன்னதைக்கேட்டு சிலருக்கு முழி வெளியால தெறிக்கிது.

"அப்ப ஏனண்ணை இதில வந்து கிடக்கிறம்." எண்டாள் ஒருத்தி.

"ஏனண்டா அவங்கள் தங்களுக்கு கிட்ட நாங்கள் நிப்பமெண்டதை எதிர்பாக்க மாட்டாங்கள், பத்திரமா ஓய்வெடுக்கத்தான் " எண்டான் பொறுப்பாளர். அதுக்காக நாங்கள் அலச்சியமாவும் இருக்கேலாது கவனமா சென்றிபோடுங்க : எண்டான் நிக்க... சாப்பாடு தண்ணிவெந்நீ எதுகும் வரயில்ல எப்ப அது கிடைக்கும் எண்ட கேள்வி எல்லாரட்டையும் இருக்கு. ஆனா பம்மிப்போய் கிடந்தாலும் ஒருத்தரும் சரியா வயிறார சாப்பிடயுமில்ல தூங்கவுமில்ல அதே களையோட முன்னுக்கு போறவரைத் தவற விட்டிராம உலுவிந்தம் பத்தையளையும் சில இடங்கள்ள விடத்தல் பத்தையளையும் துளாவிக் கொண்டு வர, விடியக்கு சற்று முன்னா நடை நிண்டது. ஒரு பாறையளடந்த பகுதி காட்டு வெட்டை. வானம் வடிவா தெரிஞ்சாலும் அதுக்கு நேர நிக்க வேண்டாம் எண்ட கட்டளை இருந்துது. உலங்கு வானூர்தியளும் புக்காராக்களும் சுத்தித் திரியிற இடம்.

கொஞ்சமாத் தள்ளி மரங்களுக்கு மேல குருவிமுட்டையள்போல விளாங்காயள் தெரியுது. ஆனாலும் ஆரும் அசையாம படுத்திட்டினம். இப்பதான் பொறுப்பாளருக்கு ஏதோ சுகமில்லையெண்டு வேறஆள்

சும்மா சொல்லக்கூடாது இறைச்சிக்கறி தாராளமான சோறு. சிலர் கிடைச்சதுகள்ள கொஞ்ச சோத்தை கட்டி பைவழிய ஒழிச்சும் வச்சினம். வேண்டியமட்டும் மூக்குமுட்டச் சாப்பிட்டிட்டு படுத்திட்டினம். பகல்வழி நடக்கிறது நோண்டியாப்போகும். ரா நடைதான். சில பகுதியள்ள பகலிலும் நடந்திச்சினம்.

இப்ப அவை மணலாறு எண்டு சொல்லுற வெலிஓயாப் பகுதில சூரியனாத்தைக் கடந்து போகிட்டினம் இனி பலதரப்பட்ட சனமும் வாழுற இடங்கள்தான் என்ன தான் பிரச்சனையெண்டாலும் சனத்தைக் கண்ணால காணுறதில்ல. அவ்வளவும் காடுதான். எங்கயும் ஆமி அம்புஸ் கிடப்பான் எண்டதுக்காக, முன்னுக்கு ரெண்டு பேரை நடக்கவிட்டு, அவைக்கு

## வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...



ஆர்முந்தி வாய் திறக்கிறதெண்டதில ஒருதரும் வாய்விடயில்ல. பொழுதும் பட்டு ஒரு மணித்தியாலங் கடந்த பிறகுதான் எங்கினயோ கிடந்து ஒரு வாளி நிறைய சோறும் பருப்பும் வருது . இது பொம்பிளப்பிள்ளையளுக்கு மட்டும். பொடியளுக்கு வேறயா வந்திருக்கு வழக்கம்போல பிள்ளையளுக்கு சாப்பிட தட்டுக்கிட்டு கிடையாது வாளிக்கை கைவிட்டு குழையல்போட்டு உருட்டி உருட்டி குடுக்க எல்லாரும் ஆளுக்கொரு திரணை திண்டிட்டு படுக்க ஆயத்தம்.

"பிள்ளையள் சத்தம்போடாம வெளிக்கிடுக்கிடுங்கோ விடியமுதல் ஆறு கடக்கோணும்" எண்டு பொறுப்பாளர் வந்து சொல்ல ....ஏதோ கூப்பிடு துலைக்கதான் மட்டக்களப்பு கிடக்குதெண்ட நம்பிக்கையில எல்லாரும் இருட்டைத்துளாவி நடக்க வெளிக்கிட்டினம். பகல் முழுக்க காட்டுக்க

அனுபவம் ஒரு கொஞ்சப்பேருக்குத்தான் இருந்துது. மற்றவை அரசியல்லயும் அங்கின வெளி வேலையள்ளயும் நிண்டவைதான். அவைக்குத்தான் உந்த நடையில பட்டிகளருது. காலமை முகங்கிகங்கழுவிறதுக்கு தண்ணியில கைவைக்கப் பலருக்கு அருவருக்குது. காரணம் காலைக்கடன முடிச்சிட்டு அந்த மோட்டையிலதான் கழுவினது பிறகு முகமும் எப்பிடி அதில....?

### மட்டுநகர் மண்ணைத்தொட்டு 21

பொறுப்பெடுத்ததெண்டு செய்தி வருது. நல்ல பெடியன்தான் என்ன வருத்தமோ எண்டு எல்லாரும் இரங்கினாலும் அதை கண்டுபிடிக்க முடியேல்ல. அதைவிட பசி வந்திடப் பத்தும் பறந்து போம் எண்ட விசியமும் இதுக்க தலைகாட்டுது. முந்தின இரவு திண்ட சோறு பற்றாக்குறைதான் பிறகு இந்தா விடிஞ்சு பத்துமணியாகுது. பக்கத்தில் எங்கயோ இயக்கத்தின்ர

**தமிழ்க்கவி**

முகாமிலதான் சமையல் நடக்குதாம் எண்டு சொல்லுகினமேயொழிய சாப்பாட்டைக் காணேல்ல. ஒருமணிக்கும் மேலயான பிறகு சாப்பாடு வருது .

வெடிதீராட்டித்தான் மற்றவை தொடருவினம். இது களமுனை நகர்வில சகசமா நடக்கிறதுதான். பலியாடுகள நடக்கவிட்டு தொடந்தது நடை.

அண்டைக்கு நடை பாதியில நிப்பாட்டியாச்சு. ஏனெண்டா பாதை கிளியரில்ல எண்டுதான் சொன்னவை. ஆனா செய்தி அப்பிடியில்ல. பொறுப்பாளர், அதான் சுகமில்லாம போன பொறுப்பாளர் செத்திட்டான். மலையான மலை அப்பேர்க்கொத்த தேகமுள்ளவன். சிறப்பான வீரமும் புத்தியுமுள்ளவன் ரெண்டுநாள் நோயில உயிரை விட்டது எப்பிடி? முழுக்குழுவும் பதைச்சுப்போய் நிண்டுது.






# கனவுகள் நிஜமாகலாம் அல்லவா?
# தமிழ் ஒபெரோ (தமிழ்க் கூத்து - இசை நாடகம்)



ஐரோப்பாவில் ஒபெரா(opera) என்ற ஒரு நாடக வடிவம் கணிப்புக்குரிய ஒரு நாடக வடிவமாகும். ஐரோப்பிய இசை மரபில் இது ஒரு பகுதியாகக் கொள்ளப்படுகிறது. பாடகர்களும், இசையாளர்களும், நடிகர்களும் இணைந்து இதனை நடத்துவர். நாடகம், நடிப்பு, காட்சியமைப்பு, உடை அமைப்பு, சிலவேளைகளில் நடனம் என்ற அனைத்தும் இணைந்த ஒரு நாடக வடிவம் இது.

16ம் நூற்றாண்டில் இத்தாலியில் இது உருவாகி பின்னர் பிரான்ஸ், ஜேர்மன், இங்கிலாந்து எனப்பரவி இன்று ஐரோப்பிய நாடுகளில் ஐரோப்பியக் கலைச் செழுமையைக் காட்டும் ஒரு பெருமை மிக்க நாடக வடிமாக இது அறியப்பட்டுள்ளது.

இதே போன்ற ஒபெரா மரபுகள் ஆசிய மக்களிடமும் இருந்தன. மிகப் பெரும்பழம் பண்பாட்டினைக் கொண்ட சீன மக்களிடம் கி.பி 3ம் நூற்றாண்டிலிருந்து இசை, நாடகம், நாட்டியம், அசைவுகள், நடிப்பு, ஆடை அணி கொண்ட சீன ஒபெரா மரபு இருந்து வந்துள்ளது.

அரசர்களால் ஆதரிக்கப்பட்டு வளர்ந்த அம்மரபு, சீனப்புரட்சியின் பின் மேலும் வளர்த்தெடுக்கப்பட்டு, சீன ஒபெரா உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. சிறப்பான பண்பாட்டு மரபுடைய ஜப்பானியரிடைய அரங்கு அரசருக்குரியது. கபுகி அரங்கு பொதுமக்களுக்குரியது. 16ம் நூற்றாண்டுக்குப் பின்னர் கபுகி வளர்த்தெடுக்கப்பட்டு இன்று உலக அரங்கில் ஜப்பானியரின் பிரமிப்பூட்டும் நாடகமாக அறியப்பட்டுள்ளது. கபுகி ஆடலும், பாடலும் உடலும் அசைவுகளும் அலங்காரமான ஆடைகளும், ஒப்பனைகளும் கலந்த நாடகமாகும். நீண்ட வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்ட தமிழரிடையேயும் கி.பி.2ம் நூற்றாண்டிலிருந்து ஒபெரா மரபு இருந்தமைக்குச் சான்றுகளுண்டு. ஒபெராவை நாம் கூத்திசை நாடகம் என அழைக்கலாம். அதாவது கூத்தும் (ஆட்டம்) இசையும் கலந்த நாடகம்.

கிறிஸ்தாப்தத்திற்கு முன்பிருந்தே இக்கூத்திசை நாடக மரபு தமிழரிடையே ஆரம்பமாகிறது. இதன் முன்னோடிகள் சங்க காலத்தில் வாழ்ந்த கூத்தரும், பாணரும், விறலியரும், வயிரியரும் தான். அதன் பின்னர் இம்மரபு கி.பி. 2ம் நூற்றாண்டில் ஆடல் மரபினால் வளர்க்கப்பட்டமையைச் சிலப்பதிகாரம் வாயிலாக அறிகிறோம்.



சிலப்பதிகாரம், மாதவி ஆடிய 11 வகைக் கூத்துக்கள் பற்றிக் கூறுவதுடன் அக்காலத்தில் இருந்த நாடக அரங்கு, நிகழ்ச்சிகள் அமைந்த முறை, ஆடலாசிரியன் இசையாரியன் இலக்கணம் பற்றியும் மக்கள் மத்தியில் நிலவிய வேட்டுவவரி, குன்றக் குரவை, ஆச்சியர் குரவை பற்றியுமான செய்திகள் பலவற்றைத் தருகிறது. இக்கூத்து மரபு கி.பி. 6 ம் நூற்றாண்டுக்குப் பின் சிவனோடும் சைவத்தோடும் இணைக்கப்படுகிறது. சிவன் ஆடும் நடனத்தைக் கூத்து என்றே அழைத்தனர். சிவனுக்கு இன்னொரு பெயர் கூத்தன். கி.பி 10ம் 11ம் நூற்றாண்டுகளில் சோழ மன்னர்கள் இதனை வளர்த்தனர். கூத்தருக்குப் பெரும் மதிப்பு இக்காலத்தில் இருந்தது.

கோயிலுக்குள்ளும் கோயிலுக்கு வெளியிலுமாக இம்மரபு அக்காலத்தில் வளர்ந்தது. சோழர் ஆட்சியின் வீழ்ச்சியின் பின் இக்கூத்திசை நாடக மரபு மக்கள் மத்தியில் சென்று விட்டது. மக்கள் தம் இயல்புக்கு ஏற்ப தம்மளவில் இதனைக் கோயிலுடன் சேர்த்த கலையாக வைத்துக் கொண்டனர். தமிழ் நாட்டின் தெருக் கூத்து திரௌபதை அம்மன் கோயில் சடங்களுடன் சம்பந்தமாய் உள்ளது. சிலர் இதனைத் தொழில் முறைக் கலையாகவும் கொண்டனர். ஈழத்திலும் இது சமூகக் கலையாகவும், தொழில் முறைக் கலையாகவும் (இசை நாடகம்) மக்களிடம் நிலை பெற்றுவிட்டது.

தமிழரிடையே இன்று பல ஒபெரா மரபுகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் இது தெருக்கூத்து, யஷகானம், பாகவதமேளம், இசை நாடகம், நாட்டிய நாடகம் என்றும் இலங்கைத் தமிழரிடையே இது வடமோடிக்கூத்து, தென்மோடிக் கூத்து, காத்தான் கூத்து, முல்லை மோடிக் கூத்து, மன்னார்க்கூத்து, காமன் கூத்து என ஒரு புறம் கூத்து மரபினதாகவும் இசை நாடகம், நாட்டிய நாடகம் என சாஸ்திர மரபினதாகவும் பரந்து கிடக்கிறது.
கூத்து என்பது நாட்டார் மரபு அன்று, உயர் சங்கீத நாடக மரபின் சீணித்த வடிவமே இன்றைய கூத்தாகும். தமிழர் மத்தியில் இன்று வழக்கிலுள்ள இம்மரபுகளிற் காணப்படும் சிறப்பம்சங்களை ஒன்றிணைத்து, தமிழ் ஒபெர என்ற நாடக மரபை உலகுக்கு அறிமுகம் செய்வது நமது இன்றைய காலக் கடமையாகும்.

தமிழ் ஒபெரா ஒன்றைத் தோற்றுவிப்பதற்கான சகல வளங்களும், தமிழரின் மத்தியில் உள்ள இசை மரபுகளிலும், நாடக மரபுகளிலும் உண்டு. அவற்றை நாம் இன்னும் அறுவடை செய்யவில்லை. இன்று காலம் கனிந்துள்ளது. ஐரோப்பிய ஒபெரா போன்று, சீன ஒபெரா போன்று, ஜப்பானிய ஒபெரா போன்று தமிழ் ஒபெரா என்ற ஒன்றை மேற்கத்தைய மக்களிடம் ஒபெரா என்ற புரிதலின் அடியாக உலகுக்கு அளிப்பது என்ற பேரவா எம்மனதிலே உண்டு. ஆம் அது பேரவாதான்.




இது சிலவேளை சிலருக்கு நிறைவேற்ற முடியாத கனவாகவும் தோன்றலாம். ஆனால் கனவுகள் நிஜமாகலாம் அல்லவா?
இக்கனவு நிறைவேற கடின உழைப்பும், பயிற்சி பெற்ற நடனகாரர்களும், தேர்ச்சி நடிகர்களும், குரல் வளமிக்க பாடகர்களும், திறன் மிகுந்த வாத்திய இசை வல்லுனர்களும் அவசியம். அத்தோடு மிக பெரும் தொகையான பணமும் அவசியம். ஆனால் அதற்கு உதவத்தான் யாரும் இல்லை. தமிழ் பாரம்பரியம் பேசும் பெரு வசதி படைத்தோர் இதற்கு உதவுவார்களாயின் இக்கனவு நிறைவேறும் வாய்ப்புண்டு. முதலில் அவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். தாயகத்திலும், புலம்பெயரகத்திலும் பரத நாட்டிய அரங்கேற்றங்களுக்கு செலவிடப்படும் பெரும் தொகைகள் எமக்கு பெரு வியப்பூட்டுகின்றன. வெற்று ஆரவாரங்களிலும், மினுமினுப்புகளிலும் தமது பணத்தை கொட்டுவோர் இத்தகைய முயற்சிகளுக்கு கைகொடுப்போராயின் இச்சிந்தனையைக் காரிய சாத்தியமாக்கலாம்.
இதில் நான் தனிப்பட்ட முறையில் சில காரியங்கள் என்னாலான வகையில் செய்துள்ளேன். எனது நாடகங்களான இராவணேசன், நொண்டிநாடகம், காண்டவதகனம் தோற்றம் யாவும் இத்தகைய பெரு முயற்சியின் ஆரம்பப் படிகளே

## ரோல்ஸ்-ராய்ஸ் நிறுவனத்தின் பறக்கும் கார்



முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமான ரோல்ஸ்-ராய்ஸ் நிறுவனம் தனது பறக்கும் கார் திட்டத்தை அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் சாலைப்போக்குவரத்து நெரிசல் மிகுந்ததாகவும், சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படுத்துவதாகவும், நேர விரயம் செய்வதாகவும் வேகமாக மாறிவருவதால் பல முன்னணி கார் தயாரிப்பு நிறுவனங்கள் பறக்கும் கார்களை உருவாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன.

இந்நிலையில், பிரிட்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் சொகுசு கார் தயாரிப்பு நிறுவனமான ரோல்ஸ்-ராய்ஸ், ஹெலிகாப்டரை போன்று செங்குத்தாக மேலெழும்பி, தரையிறங்கும் (EVTOL) மற்றும் அதிகபட்சமாக
400 கிலோமீட்டர் வேகத்தில் நான்கு அல்லது ஐந்து பேரை சுமந்துகொண்டு தொடர்ந்து 800 கிலோமீட்டர் தூரம் வரை பறக்கும் கார் தயாரிப்பது குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் இந்தக் காரை வரும் 2020ஆம் ஆண்டுக்குள் பயன்பாட்டுக்கு கொண்டுவரவுள்ளதாக தெரிவித்துள்ள அந்நிறுவனம், இது தனிப்பட்ட, வர்த்தக, சரக்கு மற்றும் இராணுவ பயன்பாட்டுக்கு ஏற்றதாக இருக்குமென்று கூறியுள்ளது.

# இறப்பிற்கு பின்னரான வாழ்வு-அறிவியல் வளர்ச்சி

சில வருடங்களுக்கு முன்னதாக பிரித்தானிய ஊடகங்களில் அலசப்பட்ட ஒரு முக்கிய விடயமாக 14 வயது சிறுமி (புற்றுநோயால்) தனது இறப்பிற்கு பின்னரான வாழும் ஆசையினை நிறைவேற்றுவதற்கு நீதிமன்றம் அனுமதி கொடுத்ததனைக் குறிப்பிடலாம்.

அதாவது இன்றைய நிலையில் குறித்த புற்றுநோயிற்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் இன்னும் ஒரு நூறு வருடங்களில் அதற்கான மருந்து கண்டுபிடிக்கப்படும். உதாரணமாக நூறு வருடங்களிற்கு முன்னர் உயிர்க்கொல்லி நோய்களாக இருந்த மலேரியா, கசம் போன்றவற்றுக்கு இன்று மருந்து இருப்பது போன்றது.

எனவே இறந்த சிறுமியின் உடலினை கடுங்குளிரூட்டல்..(Cryogenics) மூலம் நூறு வருடங்களிற்கோ அல்லது மருந்து கண்டுபிடிக்கப்படும்வரை சேமித்து வைப்பதற்கான அனுமதியினை நீதிமன்றம் வழங்கியிருந்தது. தாய் சிறுமியின் விருப்பத்திற்கு இணங்கியபோதும் விவாகரத்து மூலம் பிரிந்துள்ள தந்தை முதலில் இதனை விரும்பவில்லை. ஏனெனில் குறித்த வருடங்களிற்கு பின்னர் உயிர்ப்பிக்கப்படும்போது அவரது உறவினர்கள் யாருமே இருக்க மாட்டார்கள் என்பதாகும். ஆனால் தந்தையும் இறுதியில் மகளின் விருப்பத்திற்கு இணங்கினார். நீதிபதியும் மருத்துவமனைக்கே சென்று அனுமதி வழங்கினார்.

இச் சிறுமி அன்று இறந்தார். எனினும் இந்த விடயம் சில சட்ட நடைமுறைகளிற்காக பின்னர் வெளியிடப்பட்டது.

இப்போது இச் சிறுமியின் உடல் கடுங்குளிரூட்டலுடன் அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு Michigan Cryonics Institute இல் பராமரிக்கப்படுகிறது.



கடுங்குளிரூட்டல் மூலம் செல்களை உயிருடன் பராமரிக்கும் முறை:

இவ்வாறான பராமரித்தல் முறையினை CRYOPRESERVATION என அழைப்பார்கள்.

இங்கு குளிரூட்டலிற்கு பனிக்கட்டிகளைப் பயன்படுத்த முடியாது, பனிக்கட்டிகள் உடலிலுள்ள உயிருள்ள செல்களை கொன்றுவிடும்.

எனவே நிட்ரோஜன் (Nitrogen) வாயுக்களை கணனி கட்டுப்பாட்டுடன் (computer control by nitrogen) வைத்து பின்பு நிட்ரோஜன் (nitrogen)திரவத்தின் உதவியுடன் உடலின் செல்களை காலவரையன்றி சேமித்து வைக்கமுடியும்.

இவ்வாறு இங்கு (Michigan Cryonics Institute) சேமித்து வைக்கப்படும் 143வது நபர்



இச் சிறுமியாகும்.

இச் செயல்முறைக்கு 37000 பவுண்டுகள் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தங்களது உடல்களையும் எதிர்காலத்தில் சேமித்து வைக்குமாறு Seth Mcfaiane(Family guy creator),Larry King9talkhow host), Birtney Spears(singer) போன்ற பிரபலங்களும் முன்பதிவு செய்து வைத்துள்ளனர்.

பேராசிரியர் வாரி புல்லர் ( Barry Fuller, a professor in surgical science and low temperature medicine, at University College London) இந்த கடுங்குளிரூட்டல் முறை மூலமான மருத்துவமுறையானது அண்மைய எதிர்காலத்தில் பயன்தரும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மூளையின் எண்ணங்கள், நினைவுகளினை பராமரித்தல்:

அறிவியல் துறையில் ஏற்பட்ட மற்றொரு வளர்ச்சியாக மனித மூளையில் சேமிக்கப்பட்டுள்ள எண்ணங்கள், நினைவாற்றல், ஆளுமைத்திறன் என்பவற்றினை ஒரு சிறப்புக் கணனியுடன் இணைப்பதன் மூலம் அவற்றினை மனிதனின் இறப்பிற்கு பின்னரும் செயற்படவைக்கும் இன்னொரு செயற்திட்டமாகும்.

எண்ணங்கள், நினைவாற்றல், ஆளுமைத்திறன் போன்றன மனித மூளையில் நியூரோன்களின் இணைப்பின் (connections between neurons) மூலமே செயற்படுகின்றன.

இதனை கணனி மயப்படுத்தி இறப்பிற்கு பின்னரும் செயற்படவைக்கும் முறையாகும். இங்கு இந்த கணனிமயப்படுத்தப்பட்ட செயற்கை மூளையானது மனித இயற்கையான மூளையின் மிகவும் சிக்கலான செயற்பாட்டுக்கு ஈடாகுமா என்பதில் விஞ்ஞானிகளிற்குள் கருத்து வேறுபாடுகள் உள்ளபோதும் அடிப்படையில் மூளையின் செயற்பாட்டில் எல்லோருமே ஒன்றுபடுகிறார்கள்.

கேள்விக்குள்ளாகும் மதநம்பிக்கைகள்:

மேற்குறித்த இரு அறிவியற் கண்டுபிடிப்புக்களும் சகல மதங்களினதும் உடல், ஆன்மா, மறுமை, சொர்க்கம், நரகம், ஆவி போன்ற பல கருத்துகளிற்கு மரண அடி கொடுத்துள்ளன.

எனவே இத்தகைய கண்டுபிடிப்புக்கள் மதப்பிழைப்புவாதிகளின் வயிற்றில் புளியினைக் கரைக்கப்போவது நிச்சயம்.

அதாவது நவீன அறிவியல் வளர்ச்சியில் ஒரு மனிதனின் இறப்பினை எளிமையாக விளங்கிக்கொள்வதற்கு

நாம் அது ஒரு கணனி காலப்போக்கில் தனது செயற்ப்பாட்டினை நிறுத்திக் கொள்வதுடன் ஒப்பிட்டு விளங்கிக்கொள்ளலாம்.

இங்கு கணனியிலிருந்து இறுதியில் எதுவுமே வெளிச்செல்வதில்லை, அதுபோன்றே மனிதனின் உடலிருந்தும் ஆன்மாவோ, ஆவியோ எதுவுமே வெளியேறுவதில்லை.

இன்னும் சொல்லப்போனால் அவ்வாறு ஆன்மா, ஆவி என்று எதுவுமேயில்லை. ஏற்கனவே டார்வினின் பரிணாமக் கோட்பாட்டினாலும்.(இப்போது பரிணாம நிகழ்வு என்றே குறிப்பிடுகிறார்கள் – Fact not a theory) பெருவெடிப்பு நிகழ்வினாலும் ( Big bang)கடவுளின் படைத்தல் தொழில் அடிவாங்கியிருந்தது.

அடுத்த தொழிலான காத்தலிற்கு மதவாதிகளே இப்போது கடவுளை நம்பாமல் சிவசேனா, ஐ.எஸ் (IS), பொதுபலசேனா போன்ற அமைப்புக்களை உருவாக்கி கடவுள்களையே அவர்கள்தான் பாதுகாக்கிறார்கள்.

இங்கு மேற்கூறிய அறிவியலின் புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் கடவுளின் எஞ்சியிருந்த அழித்தல் தொழிலும் பறிபோய் கடவுள் செயலற்றவராக்கப்பட்டுள்ளார்.

உடல்-உள காலவரையற்ற அறிவியல் வாழ்வின் சாத்தியம்:

மேற்குறித்த அறிவியல் கண்டுபிடிப்பாகவிருக்கப்போகும் எல்லையற்ற வாழ்வு நிச்சயமாக நிகழுமா என்பது பற்றி விஞ்ஞானிகளிடமே முற்றுமுழுதான உடன்பாடில்லை என்பது உண்மையே.

இதனை இரு கோணங்களில் பார்க்கலாம். முதலாவது கோணத்தில் சில நூற்றாண்டுகளிற்கு முன்பு சாதாரண மாரடைப்புக்கே மருத்துவம் இல்லாத காலத்தில் இன்று சாத்தியமாகும் இருதய மாற்றுச்சிகிச்சையினை கற்பனையே பண்ணிருக்கவே முடியாது.

அதேபோல இன்று கற்பனை போலத்தோன்றும், ஆனால் அறிவியல் அடிப்படைகளைக் கொண்டுள்ள செயற்திட்டங்கள் ஒரு சில நூறு வருடங்களில் சாத்தியமாகலாம்..

மற்றைய கோணம் எல்லையற்ற வாழ்வு என்றுமே சாத்தியமில்லை என்று தெரிந்து கொண்டே சில விஞ்ஞானிகளும், சில நிறுவனங்களும் நிதி ஒதுக்கீட்டினைப் பெறுவதற்காக இவற்றின் மீதான நம்பிக்கையினை அதிகப்படுத்திக் காட்டுகிறார்கள் என்பதாகும்.

இவ்விரு கோணங்களில் எது உண்மை என்பதனைக் காலம் தீர்மானிக்கும். இவற்றில் எது உண்மையானாலும் இரண்டு உண்மைகளை மறுக்கமுடியாது.

1. இக் கண்டுபிடிப்புக்கள் மூலம் மருத்துவத்துறை முன்னேற்றமடைந்து மனித வாழ்வு தரத்திலும், காலத்திலும் அதிகரிக்கும்.

2. இவ்வடிப்படைகள் மூலம் மதம், கடவுள் என்பவற்றின் மீதான நம்பிக்கைகள் தகர்த்து எறியப்படும்.

முடிவு:

மதரீதியான மறுவாழ்வு, ஆன்மா என்பனவெல்லாம் கற்பனைகள் என்பதனை அறிவியல் தெளிவுபடுத்தியுள்ளது.

அறிவியல் ரீதியான எல்லையற்ற வாழ்வு என்பதில் சில அடிப்படைகள் கண்டுகொள்ளப்பட்டுள்ளபோதும் இன்னும் பல வினாக்கள் தொக்கிநிற்கின்றன.

ஆனால் ஒரு மனிதன் தனது வாழ்வினை சக மனிதர்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்பதன் மூலம் எல்லையற்ற வாழ்வினை வாழலாம்.

அவ்வாறு வாழ்ந்துவரும் ஒரு மனிதனின் பிறந்த ஆண்டின் இருநூறாவது ஆண்டினையே அடுத்தாண்டு கொண்டாடவுள்ளோம். அவர்தான் கார்ல் மார்க்ஸ்.

## அனைத்துத் தமிழ் கட்சிகளுடனும் கிழக்குத் தமிழர் ஒன்றியம் பேச்சு வார்த்தை

தொடர்ச்சி...

நடைமுறைச் சாத்தியமாக்கும் செயற்பாடுகளின் ஓரங்கமாக அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப் பெற உள்ளன.

அதற்கிணங்க எதிர்வரும் 20ஆம் திகதி மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும், 21ஆம் திகதி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடனும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடனும் (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்), 22ஆம் திகதி வவுனியாவில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடனும் (ரெலோ) மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடனும் (ஈ.பி.ஆர்.எல்.எப்) கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் சந்திப்புகள் நடைபெறவுள்ளதாகக் கிழக்குத் தமிழ் ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயற்குழுச் செயலாளர் பொறியியலாளர் வ.பரமகுருநாதன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, ஏனைய கட்சிகளுடனும் சந்திப்புகள் நடைபெற்று இம்மாத முடிவுக்குள் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நிறைவுபெற உத்தேசிக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# சுவாமி விபுலானந்த அழகியற் கற்கை நிறுவகத்தில் உலக ஆய்வு மாநாடு

## ஆரம்ப அறிமுக நிகழ்வில் தமிழ் மொழியில் நன்றியுரை மாத்திரமே!

என்ன தம்பி! இங்க இருப்பவர்கள் தமிழ்பேசுபவர்கள் தானே? இந்தப்பகுதி தமிழ் பகுதிதானே? என கந்தலிங்கமும் பாலனிடம் வினவ, பாலனும் ஆமென பதிலளித்ததோடு, உங்களுக்கு தெரியாதோ? நல்லாப்பாருங்கோ நம்மட வேந்தரும், உபவேந்தரும், பணிப்பாளரும், பிரதிப்பதிவாளரும் தான் முன்கதிரையில இருக்கீறார்கள். அவங்க எல்லோரும் தமிழர்கள்தான். சுற்றி வளைத்து கதிரையில் இருப்பவர்களைப் பாருங்கோ! அவர்களும் தமிழ் பேசுகின்றவர்கள்தான். முன்னுக்கு ஓரிரண்டு வெளிநாட்டார் மாத்திரம்தான் இருக்கிறார்கள். ஏன்? உங்களுக்கு இந்த சந்தேகம் ஏற்பட்டது. வருகைதரும் போது நல்லாத்தான் வந்தநீங்கள், இப்போ மட்டும் சந்தேகங்கள் எல்லாம் தோன்றுகின்றன. என்று கூறி முடிக்க, கந்தலிங்கமும் தன் கதையை ஆரம்பித்தான்.

சர்வதேச ஆய்வு மாநாடு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகத்தில் நடைபெறுகின்றதாம் என்று கூற, எனக்குள்ளே மகிழ்ச்சி ஏற்பட்டது. இதனைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வமும் என்னைத் தூண்டியது. இதனால்தான் பாலனையும் கூட்டிக்கொண்டு அறிமுக ஆரம்ப நிகழ்வுக்கு சென்றிருந்தேன். முகப்பிலே சுவாமி விபுலானந்தரின் சிலை, சுவாமியை வணங்கி உள்நுழைவதற்கு முன்பு முகப்பு தரையிலே கோலம், அதனைக் கடந்து செல்கையில் சடங்குகள் சார்ந்த புகைப்படங்கள், வரவேற்புபீடம், வரவேற்பு பீடத்திலே தமிழ்பேசுகின்ற வரவேற்பாளர்கள், வளாகத்தின் ஒரு பகுதியிலே கூத்துக்களரி, கூத்துக்களரியின் வாயிலிலே முழுமையாக மரத்தினால் அமைக்கப்பட்ட தோரணம், இன்னோர் பகுதியில், ஓலைகளால் அமைக்கப்பட்ட கூடாரத்தின் கீழே உணவுப்பண்டங்கள், அறையொன்றினுள்ளே தமிழர்கள் பாரம்பரியமாக பயன்படுத்திய பொருட்கள் போன்றவை கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இவற்றையெல்லாம் பார்த்தபோது தமிழ் மணம் வீசியது. அம்மண வாசத்தோடு, இராசதுரை அரங்கு என தமிழ்மொழியில் எழுதப்பட்ட மண்டபத்தினுள்ளே பல இருக்கைகள் காணப்பட்டன. அவ் இருக்கைகளில் இரண்டினை நானும் பாலனும் நிரப்பிக்கொண்டோம். என்று கூறிய கந்தலிங்கமும் சிவானந்தா தேசிய பாடசாலையின் முன்பாக நின்று கூறிக்கொண்டிருந்தான்.

சர்வதேச ஆய்வு மாநாடுகள் நடாத்தப்படுவதென்பது, மிகவும் பாராட்டுக்குரியது, இம் மாநாடுகளில் நம்மூர் உறவுகளுக்கு, ஆய்வுக்கட்டுரைகளை வாசிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதும், வெளிநாட்டார்களுடன் உறவினைப்பேணுவதற்கான வாய்ப்பு கிடைப்பதென்பதும் பெருமைப்பட வேண்டியதே.

சர்வதேச ஆய்வு மாநாடுகளை இலகுவாக நடத்திவிடவும் முடியாது. இதற்கென பலநாள் உழைப்பும், நிதி வசதியும் தேவை. சுவாமி விபுலானந்த அழகியற்கற்கை நிறுவகம் கடந்த காலத்திலும் இவ்வாறான மாநாடொன்றினை நடாத்தியிருந்தது. இதற்காக சமூகம் சார்பாக பாராட்டுக்களையும் தெரிவிக்க வேண்டும். ஒரு மாநாடு நடாத்தி நிறைவுசெய்யும் வரை உள்ள மனித உழைப்பினை கணக்கிட முடியாது. அவ்வாறான உழைப்புக்களுடன் நடந்தேறிய ஆய்வு மாநாட்டில் பல மொழி சார்ந்தவர்கள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வாசித்து அனைத்து மொழியினரையும் கௌரவித்திருந்தமை பாராட்டுக்குரியதே. எனக்கூறிக்கொண்டிருந்த கந்தலிங்கம்,

**படுவான் பாலகன்**

மண்டபத்திலே நடைபெற்ற வேதனையை கூற ஆரம்பித்தான்.


மண்டபத்தின் இருக்கையில் அமர்ந்து கொண்டு, நிகழ்வு அரங்கினை பார்த்தபோது அரங்கிலே, அலங்கரிப்புக்கள் செய்யப்பட்டிருந்தன. அரங்கின் பின்புறத்து நடுவிலே எல்லோருக்கும் தெரியும்படியாக பதாதையொன்றும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. குறித்த பதாதையிலே, ஆறுக்கு மேற்பட்ட வசனங்கள் அச்சிடப்பட்டிருந்த வேளையிலும், “உலக ஆய்வு மாநாடு“ என்ற ஒரு வசனம் மாத்திரமே தமிழில் அச்சிடப்பட்டிருந்தது. ஏனைய வசனங்கள் ஆங்கிலத்திலே அச்சிடப்பட்டிருந்தன. இதனை அவதானித்த போது, தமிழ் மொழி பரந்து, விரிந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில், ஒரு அரங்கினிலே தமிழ் ஓரங்கட்டப்பட்டுள்ளதா? என்ற எண்ணம் எனக்குள்ளே தோன்றியது. இவ்வாறு மனம் ததும்பிக்கொண்டிருக்கின்ற வேளையில் அரங்கிலிருந்து தமிழ்மொழியில் குரலொன்று எழுந்தது. அதனைத்தொடர்ந்து ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தமிழில் பேசியது போன்ற ஒலிகள் எழுந்தன. இம்மூன்று மொழிகளும் நிகழ்வு அறிவிப்பு ஒலிகளாகவிருந்தன. இதைவிட அரங்கிலே கலை நிகழ்வுகளும், பாடல்களும் தமிழில் ஒலிபரப்பப்பட்டன. ஆனால், முக்கியமான விடயமாகிய அறிமுக நிகழ்வுகள் தமிழ்மொழியில் நடைபெறாமைதான், தமிழ்பகுதியில் இருக்கின்றோமா? தமிழ்பேசுகின்றவர்கள் இருக்கின்றார்களா? என்ற சந்தேகத்தினை அங்கிருந்த பலரிடத்தில் ஏற்படுத்தியிருந்தது.

அறிமுக ஆரம்ப நிகழ்வின் வரவேற்புரை, தலைமையுரை, வேந்தர், உபவேந்தர் உரைகள், அறிமுக உரை என அனைத்துமே தமிழ்மொழியில் நடைபெறவில்லை. இவ்வாறான நேரத்தில், தமிழ்மொழியில் யாருமே உரையாற்ற மாட்டார்களா? என்ற அவாவில் காத்திருந்த போதுதான் நன்றியுரை மாத்திரம் தமிழ்மொழியில் சொல்லப்பட்டது.

அப்போது, கனகசிங்கம், என்னை தட்டி, நிகழ்வுக்கான உரைகளை நிகழ்த்துவதற்கு ஒரேயொரு தமிழரை மாத்திரம்தான் அழைத்திருக்கின்றார்கள் எனக்கூறினான். அக்கூற்றில் சிறிது சினமும், அளவு கடந்த தமிழ்பற்றும் அவனிடம் தென்பட்டது. ஏன் கனகசிங்கம் அவ்வாறு கூறினான் என்பதனை இங்கு விளக்கத்தேவையில்லை.

பிறமொழிகளை அறிந்திருக்க வேண்டியது அவசியமானதுதான், அதற்காக தாய்மொழியை தெரியாதவர்கள் போன்று நடந்துகொள்வதும், தாய்மண்ணுக்கு முக்கியத்துவமளியாது செயற்படுவதும் வேதனையானதே. பிறமொழியாளர்கள் தமது பகுதிகளிலே ஆய்வுமாநாட்டினை நடாத்தியிருந்தால், அவர்களின் மொழியே முதன்மை பெற்றிருக்கும். தமிழ்மொழி முதன்மைபெற்றிருக்காது, இதுதான் வரலாறும் கூட. அழியும் மொழியில் தமிழும் ஒன்று என கூறுபவர்கள், அதிகாரித்திலும், உயர் கல்விமட்டத்தில் உள்ள தமிழர்களுமேயாகும். அவ்வாறான தமிழை அழிப்பவர்களும் உயர்கல்வி மட்டத்தில் உள்ளவர்களே. சாதாரணமக்கள் எப்போதும் தமிழையும், பண்பாடுகளையும் வளர்ப்பதில் முதன்மைபெற்றே விளங்குகின்றனர். என்று தனது ஆதங்கத்தினை கொட்டித்தீர்த்தார் கந்தலிங்கம்.

தமிழ் மொழியில் உரைகள் நிகழ்த்தப் படாமையினால், கூடியிருந்தவர்களில் 99 வீதமானவர்கள் தமிழ்பேசுகின்றவர்கள்



என்பதினால், சிலர் வெளியேறியும், பலர் உரைகளை செவிசாய்க்காது, தமக்குள்ளே பேசிக் கொண்டிருந்தமையையுமே காணமுடிந்தது. ஆரம்ப அறிமுக நிகழ்வாக இல்லாமல் தமது புலமைகளை வெளிக்காட்டுகின்ற அரங்காகவே கல்விமான்கள் என்று கூறுகின்றவர்கள் இதனைப் பயன்படுத்தியிருந்தனர் என்பதுபோல் தென்பட்டது, ஆனாலும் அவ்வாறான செயற்பாடு அவர்களை கீழ்நிலைக்கே தாழ்த்திவிட்டதென்பதை மறந்துவிட்டார்கள். என்று தனது உச்ச குரலில் கூறிவிட்டு அவ்விடத்தினைவிட்டு நகர்ந்தார் கந்தலிங்கம்.

“அறிமுக ஆரம்ப நிகழ்வின் வரவேற்புரை, தலைமையுரை, வேந்தர், உபவேந்தர் உரைகள், அறிமுக உரை என அனைத்துமே தமிழ்மொழியில் நடைபெறவில்லை. இவ்வாறான நேரத்தில், தமிழ்மொழியில் யாருமே உரையாற்ற மாட்டார்களா? என்ற அவாவில் காத்திருந்த போதுதான் நன்றியுரை மாத்திரம் தமிழ்மொழியில் சொல்லப்பட்டது. அப்போது, கனகசிங்கம், என்னை தட்டி, நிகழ்வுக்கான உரைகளை நிகழ்த்துவதற்கு ஒரேயொரு தமிழரை மாத்திரம்தான் அழைத்திருக்கின்றார்கள் எனக்கூறினான்.“

# கடுகுக்கதை

## பகுத்தறிவுச் சாபம்

**கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா**



கடவுளே! கடவுளே!! எங்களுக்கு ஐந்தறிவைத் தந்துவிட்டு, மனிதனுக்கு மட்டும் ஏன்? ஆறறிவைக் கொடுத்தாய், ஏனிந்த ஓரவஞ்சனை என்று கடவுள் முன் நின்று கர்ச்சித்தது சிங்கம்.

கடவுள் அதிர்ச்சியடைந்து திருவாய் மலர்ந்தார். “நான் எங்கே மனிதனுக்கு ஆறறிவைக் கொடுத்தேன்?”, கேட்டு வைத்தார் கடவுள்.



“எங்களுக்கில்லாத பகுத்தறிவை நீங்கள் மனிதனுக்கு கொடுக்கவில்லையா? அதைத்தான் அவன் ஆறாவது அறிவு என்கிறான்,’ இது சிங்கம்.

“என்ன? முட்டாள் தனமாக பேசுகிறாய் சிங்கமே! ஆறாவது அறிவா? அவனுக்கு கொடுத்திருக்கும் சாபமல்லவா அது.“ “சாபமா!“ அதிர்ச்சியோடு கேட்டது சிங்கம்.

‘சந்தேகமென்ன? சிங்கமே! சந்தேகமென்ன? எதையுமே கண்டுபிடிப்பது, அக் கண்டுபிடிப்பாலயே மனிதகுலம் அழிவது அதை உணர முடியாமல் இருப்பதும், உணர்ந்தாலும் அதன்படி நடக்கமுடியாமல் தவிப்பதும், நான் மனிதர்க்கு கொடுத்த சாபம்தான் அந்த ஆறறிவு’ என்றார் கடவுள்.

“அந்த சாபத்தையா அவன் பகுத்தறிவு என்கிறான். ஐயோ வேண்டவே வேண்டாம்.“ என்று கூறியபடி ஓட்டம் பிடித்தது சிங்கம்.

**'ஆக்கத்துக்கு உதவட்டும் விஞ்ஞானப்படிப்பு**

**அழிவுக்கு தேவையில்லை புதுப் புதுக் கண்டுபிடிப்பு**

**ஆறறிவு என்பதே மனிதனின் பகுத்தறிவு**

**ஆற அமர யோசி! மனித குலத்தை நேசி!!'**

# தமிழகத்தில் தொடரும் கொத்தடிமை முறைமை

## ஐம்பதினாயிரம் கடனுக்காக கொத்தடிமையான குடும்பத்தின் கதை

"என் பதின்பருவத்தை கரும்பு தோட்டத்தில் கொத்தடிமையாக வேலை செய்து தொலைத்துவிட்டேன். என் கல்வி, என் குடும்பம், என் சுதந்திரம் என எல்லாம் வெறும் ரூ.50,000 கடனுக்கு அடகு வைக்கப்பட்டது,"

மூன்று ஆண்டுகளாக வெளியுலகத்தைப் பார்க்காமல் கொத்தடிமையாக வேலைசெய்த 22 வயது முருகேசனின் வார்த்தைகள் இவை.

மீட்கப்பட்ட நான்கு ஆண்டுகளுக்குப்







எங்களுக்கு அப்போது விழிப்புணர்வு இல்லை. வங்கியில் கடன் வாங்குவதற்கும் பயம், அதனால் வேலைக்குப் போனோம்,"" என வெள்ளந்தியாக பேசுகிறார் முருகேசன்.

""எங்கள் ஒன்பது நபர்களுக்கும் சேர்த்து ரூ.500 மாத சம்பளம் கொடுப்பதாக சொன்னார், இருபது கிலோ அரிசியும் கொடுக்கப்பட்டது. காலை முதல் இரவு வரை வேலை செய்துகொண்டே இருப்போம். என்ன நாள், என்ன கிழமை,

கொத்தடிமை முறையை ஒழிக்கும் பணி

கொத்தடிமை கண்காணிப்பு குழுவில் இருப்பது பற்றி கேட்டபோது அவரது முகத்தில் சின்ன சிரிப்பை பார்க்க முடிந்தது. ""கொத்தடிமையாக வேலைக்கு போவதற்கு முன்னர், நான் ஏழாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். அரையாண்டுத் தேர்வில் முதல் ரேங்க் வாங்கியிருந்தேன். ஆனால், வேலைக்கு

முருகேசன் குடும்பத்தைப் போல வாங்கிய கடனை தீர்க்கமுடியாமல் இருக்கும் ஏழை குடும்பங்கள் பலர் கொத்தடிமையாக சில ஆண்டுகள் வேலைசெய்துவிட்டால், கடன் தீர்ந்துவிடும் என்று நம்புகிறார்கள் என்கிறார் அவர்.

"ஏழைமக்களின் அறியாமையைப் பயன்படுத்தி முகவர்களின் உதவியுடன் பண்ணை மற்றும் ஆலை முதலாளிகள் இவர்களை சுரண்டுகிறார்கள். கொத்தடிமைக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்சிகளை நடத்தும் பல இடங்களிலும்

பிறகு, முருகேசன் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்தின் கொத்தடிமை கண்காணிப்பு குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். கொத்தடிமையாக வேலைக்கு செல்வதை எதிர்த்து விழிப்புணர்வு ஊட்டுவது, மீண்டு வந்தவர்களுக்கு நிவாரணத்தொகை பெற்று கொடுப்பது என தன்னார்வலராக மாறியுள்ளார்.

வீடு கட்டிய கடனுக்காக அடிமையான குடும்பம்

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்பாடி கிராமத்தில் விவசாயக்கூலி குடும்பத்தை சேர்ந்த முருகேசன், அவரது தாய், தந்தை மற்றும் அக்காவின் குடும்பத்தினர் என ஒன்பது நபர்கள், தங்களுக்கென ஒரு அறை கொண்ட வீட்டை கட்டுவதற்காக வாங்கிய ரூ.50,000 கடனுக்காக ஸ்ரீராமலு என்பவரிடம் மூன்று ஆண்டுகளாக கொத்தடிமையாக வேலைசெய்ய கட்டாயப்படுத்தப்பட்டதாக கூறுகிறார்.

பள்ளிப்படிப்பை பாதியில் விட்டு 15 வயதில்



வேலைக்குபோன முருகேசன் தனது 17 வயதுவரை அடிமையாக இருந்தார். ""எங்களின் வீடு கட்டப்பட்டு, கதவு, ஜன்னல் கூட வைக்கவில்லை. கடனை முடித்துவிட்டு புதுவீட்டுக்கு போகலாம் எனக்கூறி கரும்புதோட்டத்தின் முதலாளி வேலைக்கு கூட்டிச்சென்றார். எத்தனை நாட்கள் வேலை செய்யவேண்டும், எப்போது விடுவிக்கப்படுவோம் என்ற எதுவும் சொல்லவில்லை. நாங்கள் ஏழையாக இருந்ததால், கடனை அடைக்கும்வரை பேசமுடியாது என்று எண்ணினோம்.

என்ன மாதம் என எதுவும் எங்களுக்கு தெரியாது. மூன்று ஆண்டுகள் எப்படி சென்றது என்பதே எங்களுக்கு தெரியாது. நான்கு மணி நேரம் மட்டுமே தூங்குவோம். சில நாட்களில் தூங்காமல் வேலை செய்ய வேண்டிய நிலையும் இருந்தது. காட்டு வேலை யோடு முதலாளியின் வீட்டு வேலையும் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டோம்,"" என்கிறார் முருகேசன்.

"வெளியுலகத்தைப் பார்க்கவில்லை"

மூன்று ஆண்டுகளாக வெளியுலகத்தைப் பாரக்கவில்லை என்று கூறும் முருகேசன், ""தலைமுடியை நாங்களாகவே வெட்டிக்கொள்ள வேண்டும். சவரம் செய்யக்கூட வெளியே செல்ல அனுமதி இல்லை. பழைய, கிழிந்த ஆடைகளை எங்களுக்கு கொடுத்தார்கள். சில நாட்களுக்கு ஒரு முறை என் அப்பா மட்டும் கரும்புதோட்டத்திற்கு அருகில் உள்ள கடையில் சமையல் பொருட்கள் வாங்க அனுமதிக்கப்பட்டார், அதுவும் கண்காணிக்க ஆட்கள் இருந்ததால், யாரிடமும் பேசமுடியாத நிலை. காட்டுவாசிகள் போல வாழ்ந்தோம். எங்கள் வாழ்க்கை முழுவதும் அடிமையாகவே இருக்கப்போகிறோம் என்ற துயரத்தில் இருந்தோம். உடல்நிலை மோசமானாலும், வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டோம்," என்றார்.

"கடந்த மூன்று ஆண்டுகளாகத்தான் நாங்கள் சுதந்திரமாக இருக்கிறோம். இன்னும்கூட கொத்தடிமையாக வாழ்ந்த நாட்களின் காயங்கள் ஆறவில்லை. அச்சம் தீரவில்லை. வழக்கு நடந்துவருகிறது என்பதால் இன்னும் பயத்தில் இருக்கிறோம். என் சகோதரியின் பிரசவத்திற்காக மருத்துவமனை செல்லக்கூட அனுமதிக்கவில்லை; பழைய சம்பவங்களை நினைக்கும்போது கொடுமையான வாழ்க்கையில் இருந்து நாங்கள் மீண்டோம் என்பது ஆச்சரியமாக உள்ளது"" என்கிறார் முருகேசன்.

போனதால் படிப்பு பாதியில் தடைப்பட்டது. என்னை போல யாரும் பள்ளிப்படிப்பை விட்டுவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன். எங்கள் கிராமத்தில் பள்ளிக்கு குழந்தைகளை அனுப்பாமல் இருந்த பத்து குடும்பங்களைப் பற்றி தகவல் சேகரித்தேன். பள்ளித்தலைமை ஆசிரியரிடம் பேசி, மீண்டும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவைத்தேன். நானே மீண்டும் பள்ளிக்கு போவது போல உணர்ந்தேன்,""என்கிறார் முருகேசன்.

கொத்தடிமை முறையை ஒழிக்க கடந்த 16 ஆண்டுகளாக இந்தியாவில் வேலை

**பிரமிளா கிருஷ்ணன்,**
**பிபிசி தமிழ்**

செய்துவரும் இன்டர்நேஷனல் ஜஸ்டிஸ் மிஷன் என்ற அமெரிக்க தொண்டு நிறுவன ஊழியர்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாக அதிகாரிகளால் முருகேசனின் குடும்பம் மீட்கப்பட்டது.

"முருகேசனின் குடும்ப உறவினர் ஒருவர் கொடுத்த தகவலின் பேரில்தான் இவர்களை கண்டுபிடித்தோம். அரசு அதிகாரிகளின் உதவியுடன் ஒன்பது பேரையும் மீட்டு அவர்களின் மறுவாழ்வுக்கு உதவி வருகிறோம். கொத்தடிமை வாழ்க்கையில் இருந்து விடுவிக்கப்பட்ட சமயத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் முருகேசன் மற்றும் அவரது குடும்பத்தினர் உடல் மெலிந்து, களைப்புற்று இருப்பதைப் பார்க்கமுடியும். அடிப்படைவசதிகள் இல்லாமல் அவர்கள் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிந்தது. அவர்களின் வழக்கு நடந்துவருகிறது. ஆனால் தற்போதுகூட அவர்களால் கோர்வையாக அவர்களுக்கு நடந்த அநீதிகளை சொல்லத்தெரியவில்லை. பலமுறை ஆலோசனை அளித்து, நம்பிக்கை கொடுத்துவருகிறோம்,""என்கிறார் இன்டர்நேஷனல் ஜஸ்டிஸ் மிஷன் அமைப்பைச் சேர்ந்த ஷரோன்.

"ஏழை குடும்பங்களின் பயத்தை பயன்படுத்துகிறார்கள்""

முருகேசன் குடும்பத்திற்கு நேர்ந்ததைப் போன்ற சம்பவங்களை கேட்டுள்ளோம். ஒரு சில தொழிலாளர்கள் தண்ணீர் குடிக்க கூட அனுமதி வாங்கிப்போக வேண்டிய சூழலில் வேலைசெய்துள்ளனர்,""என்றார்.

தமிழகத்தில் கொத்தடிமையில் இருந்து மீட்கப்பட்டவர்கள் குறித்து பேசிய அவர், ""தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் எங்களுக்கு கிடைத்த தகவலின்படி 2003 முதல் 2018 ஜூன் மாதம் வரை, தமிழகத்தில் சுமார் 7,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொத்தடிமை முறையில் இருந்து எங்களைப் போன்ற அமைப்புகள் மற்றும் அரசு அதிகாரிகள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர், 261வழக்குகள் பதிவாகியுள்ளன. கொத்தடிமை முறை விரைவில் ஒழியவேண்டும் என்பதற்காக அரசோடு இணைந்து விழிப்புணர்வு நிகழ்சிகளை நடத்துகிறோம். கொத்தடிமையாக இருந்தவர்கள் வாழ்கையில் முன்னேறிய கதைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவருகிறோம்,""என்றார்.

## சிறுநீரகம் தேவை

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.
தொடார்புகளுக்கு : 0771837646



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## முருங்கையில் ஏறி முறிந்துவிழுந்த கவிஞர் நீலாவணன்

எனக்கு அப்பொழுது ஐந்து வயதிருக்கும். எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் கடற்கரை தெரியும். மாலைவேளையில் தாத்தாவும் நானும் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடுவோம். வீட்டுக்கு முன்னால் இருக்கும் மின்கம்பத்தினைத் தொட்டுவிட்டு கடலை நோக்கி ஓடுவோம்.

கடற்கரையோரத்திலும் ஒரு மின்கம்பம் இருக்கிறது. அதனைத்தொட்டுவிட்டு திரும்பி ஓடிவந்து வீட்டருகில் நிற்கும் மின்கம்பத்தை தொடவேண்டும். நான் வென்றால் தாத்தா அருகிலிருக்கும் மம்மது கடையில் சீனிபோலை ( இனிப்பு) வாங்கித்தருவார். அதன் விலை ஒரு சதம்.

தாத்தா வென்றால் நான் அவருக்கு கால் பிடித்துவிடவேண்டும்.

ஆனால், தாத்தா ஒருநாளும் வென்றதில்லை. எனக்கு தினமும் சீனிபோலை கிடைத்தது. அதற்காகவே அவரது காலைப்பிடித்துவிடுவேன். தாத்தா முன்னர் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் பொலிஸ் சார்ஜண்டாக இருந்தவர். அதனால் அவரை நாம் பொலிஸ் தாத்தா என்றுதான் அழைப்போம்.

இன்றும் எங்கள் ஊரில் என்னைக்காணும் – எமது குடும்பத்தைத் தெரிந்தவர்கள் – முதியவர்கள் – பொலிஸாரின் பேரன் என்றுதான் விளிப்பார்கள்.

பொலிஸில் பணியாற்றுகையில் தாத்தா நன்றாக ஓடியிருக்கவேண்டும். அவருடைய பல சாகசக்கதைகளை பாட்டி சொல்லியிருக்கிறார். அக்கதைகள் இந்தப்பதிவுக்கு முக்கியமில்லை.

தாத்தாவுக்கு வயசாகிவிட்டதால் அவரால் என்னைப்போன்று ஓட முடியவில்லை. அவர் களைத்து மெதுவாக நடந்துவருவதைப் பார்த்துவிட்டு நான் சிரிப்பேன். எமது பந்தயத்தை வேடிக்கை பார்க்கும் பாட்டி, "காவோலையைப் பார்த்து குருத்தோலை சிரிக்கிறது" என்று சொன்னார்கள். எனக்கு உடனே அதன் அர்த்தம் புரியவில்லை. புரியும் வயதும் இல்லை.

தாத்தா மெதுவாக நடந்து வந்ததும், "பாட்டி ஏதோ சொன்னார்கள்" என்றேன்.

பின்னர் இருவருமே எனக்கு அர்த்தம் சொன்னார்கள். பிறிதொருநாள், எமது வீட்டுக்குப் பின்புறம் காணியிலிருந்தவர்கள் அங்கு ஒரு தென்னை மரம் வெட்டித்தரித்தபோது தாத்தா எனக்கு அதிலிருந்து தென்னங்குருத்து எடுத்து சாப்பிடத்தந்து, குருத்தோலையும் காவோலையும் காண்பித்தார். பாட்டி காய்ந்த காவோலைகளை எடுத்துவந்து கிடுகு முடைந்து வேலியில் மறைப்பாகக் கட்டினார். அத்துடன் தென்னோலைகளிலிருந்து ஈர்க்குச்சி எடுத்து ஒரு விளக்குமாறும் செய்தார்.

தென்னையின் பயனும் காவோலை, குருத்தோலையின் அர்த்தமும் அந்தச் சின்னவயதில் தெரிந்துகொண்டேன்.

தாத்தாவும் பாட்டியும் மேலே போய்விட்டார்கள்.



(அமரர்) கவிஞர் நீலாவணன்

இன்று புகலிட நாட்டில் ( அவுஸ்திரேலியா), நீந்தவும் கற்றுக்கொண்டு என்னைச் சந்திக்கும் வேளைகளில் என்னுடன் விளையாடும் பேரக்குழந்தைகளுடன் அவர்களைப்போன்று என்னால் ஓடமுடியவில்லை. நான் பின்தங்கிவிடுவதைப் பார்த்து, " கமோன் தாத்தா " என்று அவர்கள் சிரிக்கிறார்கள். காலம் இப்படித்தான் சுழல்கிறது....!!!
அவுஸ்திரேலியாவில் கன்பரா மாநிலத்தின் தமிழ் மூத்த பிரஜைகள் அமைப்பினரின் வெளியீடு "காவோலை" இலக்கிய சிறப்பிதழாகவும் வந்துள்ளது.

அதனைப்பார்த்துவிட்டு, எனது மனைவி மிகுந்த கவலையுடன் " ஏன் இப்படி ஒரு பெயர் வைத்தார்கள்...? " எனக்கேட்டாள்.




அதில் எந்தத் தவறும் இல்லை. மூத்த பிரஜைகள் காவோலைக்கும் இளம் தலைமுறை குருத்தோலைக்கும் சமம் என்று விளக்கமளிக்க எனது பால்யகாலத்து கதையைச் சொன்னேன்.

காவோலை – என்ன அழகான மூத்த பிரஜைகள் வெளியீட்டுக்கான பொருத்தமான பெயர். காவோலை முதலில் குருத்தோலையாக வாழ்ந்தபோதில் சமூகத்திற்குப்பயன்பட்டது. மீண்டும் காவோலையானதன் பின்னரும் பயன்படுகிறது.


தென்னையின் பயன்பாடு குறித்து பெரிய ஆய்வுக்கட்டுரையே எழுதலாம். அதுபோன்று மெழுகாக உருகி, வெளிச்சம் தந்து மங்கி மறைந்துபோகும் மூத்தவர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கொண்டாடவேண்டும் என்ற மரபு பின்பற்றப்படும் இந்த பல்தேசிய கலாசார நாட்டிலிருந்துகொண்டு, எனது தாயகத்தின் மீன்பாடும் தேனாட்டில் ஒரு காலத்தில் " பாடும் மீன்" என்ற இலக்கிய இதழை நடத்திய கவிஞர் நீலாவணன் பற்றிய சுவாரஸ்யமான கதையையும் அவர் எழுதிய "முருங்கைக்காய்" கவிதையையும் இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

கன்பரா மூத்த பிரஜைகள் சங்கத்தின் "காவோலை" வெளியீட்டில் கலந்துகொண்டபோது, அங்கு நான் சந்தித்த பெரியவர் திரு. பேரின்பராஜா அவர்கள், குறிப்பிட்ட காவோலை இதழில் (அமரர்) கவிஞர் நீலாவணனின் படத்தை காண்பித்து, " இவர் எனது மைத்துனர் " என்று சொல்லி, என்னுடன் முதல் முதலில் அறிமுகமானார்.

திருமதி "நீலாவணன்" சின்னத்துரையின் மனைவி அழகேஸ்வரியின் உடன் பிறந்த சகோதரன்தான் பேரின்பராஜா. சிட்னி தாயகம் வானொலியில் பணியாற்றும் எழில்வேந்தன், நீலாவணனின் புதல்வராவார்.

ஈழத்தின் மூத்த படைப்பாளி அமரர் நீலாவணன் எழுதிய ஆக்கங்கள் குறிப்பிட்ட காவோலை இதழில் இடம்பெற்றுள்ளன.

அற்பாயுளில் (44 வயதில்) மறைந்த நீலாவணன், ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஒரு முக்கியமான ஆளுமை. இவருடைய பெயரில் பெரியநீலாவணையில் ஒரு வீதியும் இருக்கிறது. கவிதை, பா நாடகம்,




காவியம், சிறுகதை முதலான துறைகளில் எழுதியிருப்பவர்.

கல்முனையில் தமிழ் இலக்கியக்கழகத்தை உருவாக்கியவர். "பாடும்மீன் " என்ற சிற்றிதழையும் வெளியிட்டவர். நீலாவணன் நினைவுகள் என்ற நூலை இவருடைய நீண்ட கால நண்பர் எஸ்.பொன்னுத்துரை எழுதியிருக்கிறார்.

நீலாவணனின் முருங்கைக்காய் கவிதை சுவாரஸ்யமானது. வசனகர்த்தா, நடிகர். இயக்குநர், தயாரிப்பாளர், இதழாசிரியர் என தனது தளத்தை விரிவுபடுத்தியிருந்த பாக்கியராஜ், எடுத்தாலும் எடுத்தார் ஒரு படம். முந்தானை முடிச்சு. இது வெளியான காலத்தில் தமிழ்நாட்டில் காய்கறிக்கடையில் பெண்கள் முருங்கைக்காய் வாங்குவதற்கு வெட்கப்பட்டார்களாம்.

இதோ நீலாவணன் எழுதியிருக்கும் முருங்கைக்காய் கவிதை:

கனநாள் கழிந்தொரு கவிதை சுரந்தது

கோப்பியொன்றடித்தேன்

கொப்பியை விரித்தேன்

கூப்பிட்டாள் இவள்.

ஏனோ ? என்றேன்

கறிக்குப் புளியம் பழம்போல் றால்

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

வாங்கியிருக்கின்றேன்

அதற்குள் வைத்து குழம்பு வைக்க

முருங்கைக்காய்தான் ருசியாய் இருக்கும்

ஆதலால்,

அதோ நம் வாசல் முருங்கையின்

உச்சிக்கந்தில்

ஒன்று... இரண்டு... மூன்று...

நீண்டு முற்றிய காய்கள்

ஒருக்கால் ஏறி உசுப்பிவிடுங்கள் என்றாள்

மறுக்கலாம்....

மீண்டும் இரவுகள் வராவேல் !

அதற்காய் இசைந்தேன்.

அவள் விருப்பின்படி

முருங்கையில் ஏறி முறிந்து விழுந்தேன்.

அந்தோ ...! வந்த அருங்கவி

இந்த அமளிகண்டெங்கோ மறைந்ததே !?

குருத்தோலைக் காலத்திற்கும் காவோலைக்காலத்திற்கும் இடைப்பட்ட வாலிபக் காலத்துக் கவிதையை நீலாவணன் எழுதியிருக்கிறார்.

வாசகர்களே... உங்கள் இல்லங்களின் முற்றத்தில் முருங்கை மரம் இருந்தால் நீங்கள் பாக்கியசாலிகள். எனக்கு அவுஸ்திரேலியாவில் அந்தப்பாக்கியம் இல்லை! எங்கள் விக்ரோரியா மாநிலத்தின் பருவகாலத்தில் முருங்கை மரம் வளராது. குவின்ஸ்லாந்து மாநிலத்திலிருந்துதான் எமக்கு முருங்கையும் முருங்கை கீரையும் கிடைக்கின்றன.

(தொடரும்)

இலங்கையில் தேசிய தொழிற்பயிற்சி நிறுவகம் கடந்த பல ஆண்டுகளாக உள்ளூர், வெளிநாடுகளில் பொருத்தமான தொழில் ஒன்றை இளைஞர்கள் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பல்வேறு தொழிற்பயிற்சிகளையும், தொழில் வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. இவ்வாறான தொழிற்பயிற்சிகளில் பயிற்றுவிக்கும் பொருத்தமான உபகரணங்கள், விரிவுரை மண்டபங்கள், செயற்பாட்டு மண்டபங்கள் போதிக்கும் காலம் உட்பட பல்வேறு விடயங்களை வழங்கப்படுகின்றன. அத்துடன் அடைவு மட்டம்-7ஐ பூர்த்தி செய்யும் ஒரு இளைஞன் பல்கலைக்கழக பட்டத்திற்கு இணையான ஒரு பட்டத்தை பெறுவதுடன், விரிவுரையாளராக பயிற்சி நிறுவனங்களிலும் கடமையாற்ற முடியும்.

அடைவு மட்டம்
தகமைகள்
பயிற்சி உள்ளடக்கம்
அடைவு மட்டம் (1) - தேசிய பயிற்சி சான்றிதழ்

சான்றிதழையும் இதனுடன் சேர்த்து பெற்றுக்கொள்ள முடிகிறது. இத்துடன் அதே துறையில் தொடர்ந்தும் தனது கற்கை நெறியை மேற்கொண்டு பல்கலைக்கழக டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள




# கட்டிளமைப் பருவ உளநலம்

## தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள் – National Vocational Qualification (NVQ)

கருத்திற்கொண்டே அதன் தரம் தீர்மானிக்கப்படுகின்றது. அத்துடன் ஏனைய பயிற்சிநெறியின் இறுதிப்பரீட்சை செயலமர்வு யாவும் சர்வதேச விதிமுறைகளுக்கு அமையவே நடைபெறுகின்றன. இதன் மூலமாக சர்வதேச தரத்திற்கு அமைவான சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொள்வதோடு பயிற்சி நெறியில் பெற்றுக்கொண்ட அறிவு, திறன் மனப்பாங்கு என்பன உலகமயமாக்கலுக்கு ஏற்ப நீடித்து நிலைக்கக்கூடிய அதிக வருமானம் தரும் நிரந்தரத் தொழில் ஒன்றை ஏற்றுக்கொள்ள ஏதுவாக அமைகிறது.

தேசிய தொழிற்பயிற்சி மூலமாக எதிர்பார்க்கப்படும் பலன்கள்

வழங்கப்படும் பயிற்சிகள் உள்ளூர், சர்வதேச தொழில் வாய்ப்புகளுக்கு ஏற்றதாக அமைதல், சர்வதேச ரீதியான தரம் நிர்ணயிக்கப்படல், தொடர்ச்சியான படிமுறையான பயிற்சிகள், தொழிற்சாலைகள்,வர்த்தக வணிகத்துடன் தனியார் தொழில்தருநர்களுடன் பயிலுனர் மற்றும் இளைஞர்களை தொடர்புபடுத்தி விடுதல்.

தொழிற்சாலைகளின் ஆளணி தேவைக்கும் முகாமைத்துவத்திற்கு ஏற்றவிதமான

தொழிற் சந்தைக்கு உட்புகுவதற்கான ஆரம்ப அறிவு அனுபவம் கிடைக்கும்.

அடைவு மட்டம் (2)
அடைவு மட்டம் (3)
அடைவு மட்டம்(4)- தேசிய பயிற்சி சான்றிதழ்
அடைவு மட்டம் 2,3,4 என்பன தொழிற்சந்தையில் வேலை வாய்ப்பு, ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கின்றன.
அடைவு மட்டம்(5),(6)- தேசிய டிப்ளோமா சான்றிதழ்

அடைமட்டம் (5), (6) என்பவற்றை பூர்த்தி செய்யும் இளைஞன் ஒருவன் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் அவர் பயின்ற தொழிற்கல்விக்கான வேலை ஒன்றை இலகுவாக பெற்றுக்கொள்வதுடன் தொழில் மேற்பார்வையாளர், நிர்வாக முகாமைத்துவம் போன்ற உயர் பதவியொன்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.
அடைவு மட்டம்(7)- பல்கலைக்கழக பட்டதாரி சான்றிதழ்.

தொழில்நுட்பவியலாளர் பல்கலைக்கழக சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்வதுடன் விரிவுரையாளராக தொழில் பயிற்சி நிறுவனங்களில் கடமையாற்றவும் முடியும்.



பயிற்சிகள். நெகிழ்வு தன்மை கொண்ட கடும் கட்டுப்பாடுகள் விதிமுறைகள் அற்ற

கற்பித்தல் செயற்பாடுகள்.

சர்வதேச மட்டத்திலான தொடர்பாடலிற்கான காலங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். ஏனைய தொழில் பயிற்சி நிறுவனங்களுடனான

தொடர்படுத்துகை. தற்போது தேவையானாலும் இன்னும் எதிர்காலத்திற்கு

தேவையான கற்கை நெறிகளை இனங்கண்ட உள்வாங்குதல்.
கற்கைநெறி தகைமைகள்
இவை ஏழு அடைவு மட்டங்களாக வகுக்கப்பட்டு அவற்றில் உள்ள வெவ்வேறு அலகுகளிற்கு ஏற்ப சான்றிதழ்கள்

அடைவு மட்டம் 1-6 வரை, குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள மிக அண்மைய தொழிற் பயிற்சி நிறுவகம் ஒன்றில் பெற்றுக்கொள்ள முடியும். அடைவு மட்டம் (7) ஐ பெற்றுக்கொள்ள Univotec இல் பயிற்சி நெறிகளை மேற்கொள்ள வேண்டும்.
NVQ அடைவு மட்டம் 1-4 -

இளைஞர்களின் திறன்களுக்கு ஏற்றவிதமான தொழில்பயிற்சி வழங்கப்பட்டு ஆரம்ப திறன் அற்ற தொழிலாளி நிலையில் இருந்து திறன் உள்ள, தொழில்வாய்ப்பு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை தகைமைகள் யாவும் இவ்வடைவு மட்டங்களால் கிடைக்கப்பெறுகிறது.

அத்துடன் பயிலுனர் தான் பழகிய தொழிற்குரிய தொழில் தகைமை

முடிகிறது.

NVQ அடைவு மட்டம் 5-6-
அடைவு மட்டம் 5-6 வரை பயிலுனர் ஒருவர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொண்டு, தான் பயின்ற தொழில்நுட்ப கல்வியை கொண்டு மேற்பார்வையாளர் அல்லது செயற்றிட்ட முகாமையாளராக குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றில் பணியாற்ற முடியும். இங்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், கணினி போன்றவை நன்கு தெரியும்போது இச்சந்தைப் பொருளினை இலகுவாக கொண்டு செல்ல முடியும். அல்லாது போனால் தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்கு ஏற்றாற்போல்

**டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்**
**உளநல மருத்துவர்**
**வாழைச்சேனை மருத்துவமனை**

இளைஞர்களை தயார்படுத்தி அடைவு மட்டம் 5-6 ஐ பூர்த்தி செய்ய உதவுகிறது. இதற்கு இடைவெளிகளை நிரப்புதல் என பெயரிடப்படுகின்றது.
அடைவு மட்டம் - 7
மேற்படி கற்கைநெறி கொழும்பில் உள்ள UNIVOTEC திறந்த பல்கலைக்கழகத்திலேயே கற்க முடியும்.
வெள;வேறு தொழில் பயிற்சிகள்

NVQ பயிற்சி திட்டங்களின் ஊடாக ஏறத்தாழ 100 தொழில் முயற்சிகளுக்கான கற்கை நெறிகள் தற்போது தொழில்நுட்ப கல்லூரிகளில் கற்க முடியும். இவற்றில் கட்டிட தொழில் சம்பந்தப்பட்ட மேசன், தச்சு தொழில், மின்னிணைப்பு, குழாய் பொருத்துதல், குளிர்சாதன பிறப்பாக்கிகள் பொருத்துதல் உட்பட பல துறைகள் உள்ளன. வாகன திருத்துல், சீர்செய்தல், சுத்திகரித்தல், வர்ணப்பூச்சு பூசுதல், அடிச்சட்டம் சீராக்கல், தொழில்நுட்ப முகாமைத்துவம் உள்ளிட்ட பல பிரிவுகள் அடங்குகின்றன. அத்துடன் பராமரிப்பு (சிறுவர், முதியோர், விசேட தேவைக்குரியவர்) துறைகளில் அதிக பயிற்சி நெறிகள் உள்ளன. சுகாதார துறை, சமூக நலன், கற்பித்தல், சிகையலங்காரம், முக அலங்காரம், முதியோர் பராமரிப்பு, வீட்டுப் பராமரிப்பு, சமையல், உல்லாச பயணத்துறை, நிர்மாணத்துறை, முகாமைத்துவதுறை, கட்டுமானம், கணனி தொழிநுட்பம், மீன்பிடி, மிருகவளர்ப்பு, விவசாய செயற்றிட்டங்கள் என பலதரப்பட்ட துறையில் ஏனைய தொழில் தகைமை பயிற்சிகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

க.பொ.த. சாதாரண தரம் சித்தியடையாத மாணவர்களுக்கு உயர்தரம் கற்கும் வாய்ப்பு தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுக்கப்போகும் மிக நல்ல செயல். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி உயர்தரம் கற்கத் தேவையான அடிப்படை தகைமைகளை பெறத் தவறிய மாணவர்களுக்கு உயர்தரத்தில் கல்விகற்க சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. முதல் கட்டமாக நாடளாவிய ரீதியில் நான்காயிரம் மாணவர்களிற்கு தொழில்கல்வி வழங்கவுள்ளது. இதற்கென நாடளாவிய ரீதியாக நாற்பது பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 2018 இல், 10,000 மாணவர்கள் இவ்வாறு உள்வாங்கப்பட உள்ளனர். அத்துடன் 2019 இல் க.பொ.த. சாதாரண தரத்தில் உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களும் உயர்தரத்தில் இணைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பாடசாலை இடைவிலகல், இளவயது திருமணம், தற்கொலை, மது, போதை பாவனை என்பவற்றை ஓரளவிற்கு குறைத்துக்கொள்ள முடியும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல:-07 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வா | ய் | ப் | 2 பு | ■ | 3 க | 4 வி |
| ன | ■ | ■ | த் | ■ | ■ | ர |
| 5 ர | த் | ம் | த | 6 இ | ■ | த |
| ம் | ■ | ■ | 7 க | டி | 8 த | ம் |
| ■ | 9 கா | ண | ம் | ■ | ர் | ■ |
| 10 மா | லை | ■ | ■ | 11 க | ம | ம் |
| டு | ■ | 12 த | க | டா | ம் | ■ |

சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் மூவர்:-

01. யோசப் டொரிங்டன் ஸ்பெக் (மட்டக்களப்பு)
02. ப.பேரின்பராஜா (திருமலை வீதி)
03. லோ.விப்ராகரன் (திருமலை வீதி)

-- இவர்களுக்குரிய பரிசுப் பணம் அனுப்பி வைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.



தொடர்ச்சி...

# ஒவ்வொரு திசையில் இழுக்கும் தமிழ் தலைவர்கள்

"ஐக்கிய, பிரிபடாத இலங்கைக்குள் தமது விதியை தாமே நிர்ணயித்துக் கொள்வதற்கு, தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வு தேவை. ஆனால், அவர்களின் இருப்புக்கு அச்சுறுத்தலாகும் அளவுக்கு கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்கொள்கிறார்கள்,' என்கிறார் அவர். அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்ததாக அவர்களுக்கு கிடைக்க வேண்டும்.

ஜப்பானிய மற்றும் இந்திய ஆதரவில் திருகோணமலையை ஒரு பொருளாதார வலயமாக அபிவிருத்தி செய்யும் அரசாங்க திட்டத்தை சம்பந்தன் வலுவாகவும் பகிரங்கமாகவும் அங்கீகரிக்கிறார். நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி கூட்டணியால் கடுமையாக எதிர்க்கப்பட்ட இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வணிக ஒப்பந்தத்தை அவர் வலுவாக ஆதரித்தார்.

அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலர், விஜேய் கோக்கலேயை சந்தித்த போது, இந்திய தொழில் முனைவோர், இலங்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று அவரிடம் சம்பந்தன் கோரியிருந்தார்.

வெளிநாட்டு முதலீடுகள் மக்களின் பொருளாதார அந்தஸ்தை உயர்த்தி, வடக்கு கிழக்கில் மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு, மேலும் வேலைவாய்ப்புக்களை கொடுக்கும் என்று சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.
மாகாண சபைத் தேர்தல்களை மேலும் பிற்போடும் விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைபினர் மத்தியில் பெரும் பிளவுபட்ட கருத்து காணப்படுகின்றது. மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதைக் காட்டிலும், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு முன்னுரிமை காண்பிக்கப்பட வேண்டும் என்பது கூட்டமைப்பின் அதிகாரபூர்வ நிலைப்பாடு.
அரசியலமைப்பின் இறுதி வரைபு ஒன்று நிபுணர் குழுவால், வழிகாட்டல் குழுவிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. புதிய அரசியலமைப்பு 2018 டிசம்பருக்குள் நிறைவேற்றப்படலாம்.

தற்போதைய பாராளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர் நிலைமைகளே அரசியலமைப்பை நிறைவேற்ற வலுவான சாத்தியத்தை கொண்டிருப்பதாகவும், அரசாங்கம் இதில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறமுடியும் என்றும், தமிழ் மக்கள் இந்த வாய்ப்பை தவறவிட முடியாது என்றும் சம்பந்தன் கூறுகிறார்.
எப்படியிருந்தாலும், மாகாணசபைத் தேர்தல்கள் பிற்போடப்படக் கூடாது என்கிறார், சம்பந்தனின் விசுவாசியும், சக நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன். ஆனால், செப்டம்பரில் வட மாகாணசபை கலைக்கப்படக் கூடாது என்றும், 9 வருடங்களுக்கு முன்னதாகத்தான் ஒரு போரில் இருந்து மீண்ட பகுதி என்ற சிறப்பு நிலைமையில், தமக்கு முதலமைச்சராக இன்னும் கொஞ்சக்காலம் தொடர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் விக்னேஸ்வரன் கேட்கிறார்.
விக்னேஸ்வரனின் கோரிக்கைக்கு கூட்டமைப்பின் தலைமை பதில் கருத்து எதனையும் இன்னும் கூறவில்லை.

**(பி.கே. பாலச்சந்திரன்)**

அதேவேளை, மத்தியில் அரசாங்கங்களில் இணைவதில்லை என்ற தமது நீண்ட கால நிலைப்பாட்டை கைவிட வேண்டும் என்றும் நாட்டில் உள்ள ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து நிறைவேற்று அதிகாரத்தை பகிர்ந்துகொள்ள முன் வரவேண்டும் என்றும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், உத்தியோக பூர்வ மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

மனோ கணேசனின் கருத்துக்கும் கூட்டமைப்பு இன்னும் பதிலளிக்கவில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்திலும் அமைச்சரவையிலும் பங்கேற்பதில்லை என்பது தமிழர் அரசியலில் ஒரு நீண்டகாலக் கொள்கையாகும் என்பதால், இதில் முடிவெடுப்பது கூட்டமைப்புக்கு மிகவும் கடினமாகும்.

இவற்றைவிட, மிகவும் உரத்துக் குரல்கொடுக்கக்கூடிய தமிழர்கள், குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் போன்றவர்கள், தமது இலக்குகளை அடைய மத்தியுடன் ஒத்துழைத்துப் போகும் போக்கை அல்லாமல் மத்தியுடன் முரண்பட்டு போகும் அரசியலையே ஆதரிப்பார்கள்.

## 'மட்டக்களப்பில் சீன நிறுவனத்துக்கு காணி வழங்க முடியாது'

தொடர்ச்சி...

மட்டக்களப்பு - குடும்பிமலையில் இலங்கை அரசாங்கம் சீன அரசாங்க கம்பனி ஒன்றுக்கு கரும்புச் செய்கைக்கு காணி வழங்க இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளதாகக் கூறி, அது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமாருக்கு கடந்த புதன்கிழமை (18) அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது - மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று தெற்கு (கிரான்), ஏறாவூர்பற்று (செங்கலடி) ஆகிய பிரதேச செயலாளர் பிரிவை மையமாக கொண்டதான குடும்பிமலை பகுதிக்கு அண்மித்து 68250 கெக்டேயர் காணியை இலங்கை அரசாங்கம் யாருக்கும் தெரியாமல் சீன அரசாங்க கம்பனி ஒன்றுக்கு கரும்புச் செய்கைக்கு வழங்க இரகசிய ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது என சில ஆதாரங்களுடன் அறிந்துள்ளேன்.

இதேவேளை கரும்புச் செய்கையானது நில வளத்தை பாதிப்பதுடன், மக்கள் எதிர்காலத்தில் பஞ்சத்தில் வாழ வழியேற்படுத்தும். முன்பு சிங்கள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கரும்புச் செய்கை நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் இக்கரும்புச் செய்கையை தமிழ் மக்களின் வாழிட பகுதிக்கு கொண்டு வருவது தமிழ் மக்களின் எதிர்காலத்தை பாதிக்க செய்யும் நோக்கமாகும். எனவே இத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்படுத்த அனுமதிக்க முடியாது. இத்திட்டம் சார்பாக ஆராயும் முகமாக அண்மையில் வரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் நிகழ்ச்சி நிரலில் இவ்விடயத்தையும் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.
கடித்தின் பிரதிகள் கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகல்லாஹம, கிழக்கு மாகாண காணி ஆணையாளர் டி.டி.அனுர தர்மதாஸ, செங்கலடி பிரதேச செயலாளர் ந.வில்வரெட்னம், கிரான் எஸ்.ராஜ்பாபு ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# கதிர்காமம் யாருக்குச் சொந்தம்?

தொடர்ச்சி...

ரமதேப்பால் தலையிடி கூடியது. எனவே, தாய்லாந்தின் அரச பிக்கு தலையிட்டு, ஜதுகம் ரமதேப்பைக் கட்டுப்படுத்தவேண்டி நேரிட்டது. இப்போது விடயம் அதுவல்ல. ஜதுகம் ரமதேப் யாரென்று தெரியுமா?

தாய்லாந்திலுள்ள "நகொன் சி தம்மரத்" நகரிலுள்ள விகாரையில் தான் முதலாவது ஜதுகம் ரமதேப் தயாரித்து விற்கப்பட்டது. இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகளால் கட்டப்பட்ட பழைமைவாய்ந்த விகாரைகளில் ஒன்று அது. அவ்விகாரையின் கதவில், ஒருபுறம் வில்லேந்திய விஷ்ணு உருவமும், இன்னொருபுறம் நான்குக்கு மேற்பட்ட முகங்களும் ஆயுதங்களும் கொண்டுள்ள தேவர் ஒருவரின் உருவமும் காணப்படுகின்றன. இன்னும் விகாரைச் சுவரில் இருபுறமும் இரண்டு மழுங்கிய சிலைகள் உள்ளன. ஒன்றின் கீழே ராமதேவ என்றும் இன்னொன்றின் கீழே காட்டுகம என்றும் பழைய தாய் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன.

இலங்கைச் சிற்பிகளால் அமைக்கப்பட்ட இவ்விகாரத்தில், ராமதேவ, காட்டுகம என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள், கதவில் செதுக்கப்பட்டுள்ள இரு தேவர்கள், விஷ்ணுவும் முருகனும் தான் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. தாய்லாந்தில் விஷ்ணு இராமராகவே பிரசித்தம் என்பதால் அவரை ராமதேவ என்றே சித்தரித்துள்ளார்கள். என்றால் காட்டுகம? வேறு யார் கதிர்காமன் தான். "காட்டுகம ராமதேவ" என்பதை தனக்குப் புரிந்தால் போல் புரிந்துகொண்ட பேர்வழி ஒருவர் தான் "ஜதுகம் ரமதேப்" என்ற புதுக்கடவுளின் பெயரில் தாயத்தை உருவாக்கி கதை பரப்பிய சூத்திரதாரி என்று சொல்கிறார்கள். இங்கிருந்து வேலை மெனக்கெட்டு தாய்லாந்து போன கதிர்காமக் கடவுள் எப்படிப்பட்ட தெறிச்ச வேலைக்கெல்லாம் உடந்தையாக இருந்திருக்கிறான் பாருங்கள்.

நீ சும்மா பழிசுமத்தாதே. இலங்கைப் பௌத்த இலக்கியங்களில் "ஸ்கந்த குமார" என்ற பெயரே இருக்கும் போது, தாய்லாந்தில் எழுதியுள்ள "காட்டுகம்" என் அப்பன் கதிர்காமக் கந்தனின் பெயர் தான் என்று எப்படிச் சொல்லுவாய்?

அஸ்கு புஸ்கு... ஆதாரம் இருக்கிறதே! கி.பி 1547இல் மியன்மாரில் எழுதப்பட்ட "ஜினகலாமாலி" எனும் பாளி மொழி நூலில் ஒரு கதை இருக்கிறது. சுகோதையின் (தாய்லாந்து) மன்னன், இலங்கையில் புத்தபிரானின் அரிய திருவுருவம் ஒன்று இருக்கிறது என்று கேள்விப்பட்டு அதை எடுத்துவருமாறு நகொன் சி தம்மரத்தின் ஏவலர்களை அனுப்புகிறான். அவனுக்குக் கிடைத்த பதில், "இலங்கைத்தீவை சுமண, ராம, லக்கண, காட்டுகாம என்று நான்கு தேவர்கள் காப்பதால், அந்நாட்டை வென்று அச்சிலையை எடுத்து வர முடியாது." சிங்களவர்களின் நான்கு காவல் தெய்வங்களும் யார் யார் என்று மேலே பார்த்தோம். ராமரும் விஷ்ணுவும் ஒருவர் தான் என்றால், லக்கண (லக்ஷ்மணன்) தவிர, ஜினகலாமாலியின் பட்டியல் அப்படியே பொருந்துகிறது. பௌத்தக் கதிர்காமம் பற்றிக் குறிப்பிடுகின்ற முதலாவது எழுத்துமூல ஆதாரமும் இந்த ஜினகலாமாலி தான்.

ஆக, கதிர்காமம் பௌத்தருக்குச் சொந்தமானது, சிங்களவரின் கோவில் என்றே சொல்கிறாயா? உங்கள் பதற்றத்தைப் பார்க்க சந்தோசமாக இருக்கிறது. என்னவென்றால்.... ஊகும். அதெல்லாம் இப்போதைக்குச் சொல்லமுடியாது. நீங்கள் பல்லைக் கடித்தபடியோ நகத்தைக் கடித்தபடியோ அடுத்தவாரம் வரை காத்திருக்கத்தான் வேண்டும். பல்லு உடைந்தாலோ, அடுத்த கிழமை நகத்தைக் காணவில்லை என்றாலோ சங்கம் பொறுப்பல்ல.

(தொடரும்)

தொடர்ச்சி...

# தமிழ் மக்களுக்கான சிங்களப் பத்திரிகைகள்

கண்டதில்லை. அந்த ஊர்வல முடிவில் பொதுநூலக மண்டபத்தில் நிகழ்ந்த கூட்டத்தில் பேச்சாளர்களில் ஒருவனாக நானும் இருந்தேன். என்னுடைய உரை மாத்திரம் தமிழில் இருந்தது.

காணாமல் போனோருக்கான ஒரு அமைப்பு, மனித உரிமைகளுக்கு, மாணவர்களுக்கு, எம்பிலிபிட்டிய பெற்றோருக்கு (புதைகுழி சம்பவம்), என பல அமைப்புகளை இயக்கினார்கள். அவர்களை புலனாய்வுத்துறை துரத்திக்கொண்டே இருந்தது. அவர்கள் தமது செயல்பாடுகளை இரகசியமான இடங்களில் நடத்தும் நிலைக்கு உள்ளானார்கள். தமிழ் மக்களுக்காக அவர்கள் கொடுத்த குரல்; அவர்களை புலிகளின் ஆதரவாளர்களாக அரசு சந்தேகம் கொண்டது. இறுதியில் அவர்கள் உண்மையிலேயே விடுதலைப் புலிகளுக்காக இயங்கத் தொடங்கினார்கள். தமிழ் மக்களின் விடுதலைக்கு இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள் எப்போதோ தலைமை கொடுத்திருக்க வேண்டும் என்றார்கள். இனியாவது இருக்கின்ற உறுதியான ஒரு அமைப்புக்கு தமது ஆதரவை வழங்கும் நோக்கில் விடுதலைப் புலிகளுக்கு தமது ஆதரவை அளித்தார்கள்.

அவர்கள் எத்தனை தீவிரமாக இருந்தார்கள் என்றால் இறுதியில் அவர்கள் விடுதலைப் புலிகளால் வெளிக்கொணர்ந்த சிங்களப் பத்திரிகையான "தேதுன்ன" என்கிற பத்திரிகையை தலைமறைவாக நடத்துமளவுக்கு தீவிரம் பெற்றிருந்தார்கள். அவர்களைத் தான் மகிந்த அரசாங்கத்தில் "சிங்கள கொட்டி" என்று அழைத்தார்கள்.


மகிந்த ஆட்சியில் கோத்தபாயவின் வேட்டையில் இருந்து தப்பி அவர்கள் நாலா திசைகளுகுக்கும் தப்பியோட நேரிட்டது. இன்று அவர்களில் பெரும்பாலானோர் நாட்டில் இல்லை.

தமிழ் மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்த சிங்களத் தோழர்களை தமிழர்கள் பலருக்கு இன்றும் தெரியாது.




(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)




Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa